பதிவு இலக்கம் : 105267

வார இதழ்

# தீபம்

30.06.2019 தீபம் – 188

பக்கங்கள் - 24 விலை ரூபா 30.00




**மைத்திரி தெரிவுக்குழுவுக்கு சமூகமளிக்கத்தவறினால் சட்டநடவடிக்கை எடுக்கமுடியும்.**

- எம். ஏ. சுமந்திரன் பா.உ (செய்தி)






பக்கம் - 4

அமெரிக்கா+இந்தியா - சீனா

## உறவும் விரிசலும்



விமல் வீரவன்ச

## துரோகியா..? எதிரியா..?

பக்கம் - 6

இது தமிழ் பேசும் மக்களின் தனித்துவப் பத்திரிகை







வேடன் விரித்திருந்த வலையில் கழுகு ஒன்று சிக்கிக் கொண்டது. அதைப்பிடித்த வேடன், சிறகுகளை மட்டும் வெட்டி சங்கிலியால் கட்டிப் போட்டிருந்தான். அவ்வழியே சென்ற பெரியவர் ஒருவர், அதன் மீது இரக்கம் கொண்டார். வேடனிடம் காசு கொடுத்து அந்தக் கழுகை விலைக்கு வாங்கி, தன் வீட்டிற்குக் கொண்டு சென்று அன்புடன் வளர்த்தார்.


இறக்கைகள் நன்கு வளர்ந்ததும் அதைப் பறந்துபோக அனுமதித்தார். கழுகு பறந்து செல்லும் போது. அதன் பார்வையில் ஒரு முயல் தென்பட்டது. அதை அப்படியே தூக்கி வந்து தன்னை வளர்த்த பெரியவரிடம் காணிக்கையாகக் கொடுத்தது.

இதைக் கவனித்துக் கொண்டிருந்த நரி, 'ஏற்கனவே உன்னைப் பிடித்த வேடன் மறுபடியும் பிடிக்கலாம். இந்த முயலை நீ அவனிடம் கொடுத்திருந்தால், மறுபடும் அவன் உன்னைப் பிடிக்காமல் இருப்பான். பெரியவருக்கு நீ முயலைக் கொடுத்தாலும், கொடுக்காமல் இருந்தாலும் அவர் உன்னைப் பிடிக்க வரப்போவதில்லை. எதற்காக அப்படிச் செய்தாய்' என கழுகைப் பார்த்துக் கேட்டது.

"அது தவறு. வேடனிடம் நான் முயலைக் கொடுத்தாலும், பிற்காலத்தில் அவன் என்னை வலைவிரித்துப் பிடிக்கலாம். ஆனால், நான் ஆபத்தில் இருந்தபோது என்னைப் பெரியவர் காப்பாற்றியுள்ளார். அவரிடம் நான் கொண்டுள்ள நன்றியையும், விசுவாசத்தையும் வெளிப்படுத்தவே முயலைக் காணிக்கையாகச் செலுத்தினேன். உதவி செய்தவரிடம் நன்றியோடு இருப்பது தான் பண்புள்ள செயல்" எனப் பதில் கூறியது கழுகு.

கதையின் நீதி: ஆபத்துக் காலங்களில் உதவி செய்தவர்களை மறக்காமல் நன்றியோடு இருப்பது தான் நல்லவர்களுக்கு அழகு.

## நீர்யானை



நீர்யானையின் திகபட்ச எடை 4000 கிலோ. இது வாயைத் திறந்தால், நான்கடி உயரமுள்ள ஒரு பையனை இதன் வாய் அகலத்தில் படுக்க வைக்கலாம். அவ்வளவு தூரம் அகலமான வாய் நீர்யானைக்கு உண்டு.

## அறிவு மொழிகள்

- ஒரு துளி பேனா மை பத்து இலட்சம் பேரைச் சிந்திக்க வைக்கிறது.
- தோல்வி ஏற்படுவது அடுத்த செயலைக் கவனமாகச் செய் என்பதற்கான எச்சரிக்கை.
- உலகம் ஒரு நாடக மேடை, ஒவ்வொருவரும் தம் பங்கை நடிக்கிறார்கள்.
- அன்பையும் ஆற்றலையும் இடைவிடாது வெளிப்படுத்துகிறவர் ஆர்வத்துடன் பணிபுரிவர்.
- செய்வதற்கு எப்போதும் வேலை இருக்க வேண்டும். அப்போது தான் முன்னேற முடியும்.



## சின்னப் பூனை


சின்னச் சின்னப் பூனை
சிறந்த நல்ல பூனை
என்னைப் பார்த்துத் துள்ளும்
எங்கள் வீட்டுப் பூனை
வட்டமான கண்கள்
வண்ணமான செவிகள்
கட்டையான கால்கள்
காட்டும் நல்ல பூனை
நாயைப் பாத்துச் சீறும்
நகத்தால் மரத்தைக் கீறும்
பாயப் பதுங்கி ஓடும்
பந்தை உருட்டி ஆடும்
உண்ணுஞ் சோறும் பாலும்
ஊட்டி வளர்த்த பூனை
கண்ணைப் போன்ற பூனை
கட்டிக் கரும்புப் பூனை




நீங்களும் வரைந்து அனுப்ப விரும்பினால் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பலாம்.

## 3D படம்

நன்றாக உற்றுப் பாருங்கள் உங்களை ஆச்சரியப்படுத்தும் ஒன்றைக் காணுவீர்கள். அது என்ன என்பதைக் கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்.



## பொதுஅறிவு வினாக்கள்

1. முதன் முதலில் பத்மஶ்ரீ விருதை பெற்றவர் யார்?
2. திமிங்கலத்தின் உடலில் எவ்வளவு இரத்தம் இருக்கும்?
3. சீனாவின் புனித விலங்கு எது?
4. மாம்பழத்தின் பிறப்பிடம் எது?
5. ஜப்பானியரின் தேசிய உடையின் பெயர் என்ன?
6. தங்கப்போர்வை நிலம் எது?
7. தென் ஆப்பிரிக்காவுக்கு எத்தனை தலைநகர்கள் உண்டு?
8. கிரிக்கெட் மட்டை எந்த மரத்தால் தயாரிக்கப்படுகிறது?
9. போக்குவரத்து காவலர்களே இல்லாத நாடு எது?
10. சுருக்கெழுத்து முறையை கண்டுபிடித்தவர் யார்?

### 23.06.2019 பொதுஅறிவு வினாவிற்கான விடைகள்

1. லெனின்,
2. கிரீன்விச்,
3. கரையான்,
4. சலவைக்கல்,
5. கனடா,
6. 55 மொழிகளில்,
7. 22 மாதம்,
8. முகாரி,
9. சவூதி அரேபியா,
10. மீத்தேன்.

கடந்தவார வினாவில் வெற்றிபெற்றோர் விபரம் அடுத்தவாரம் அறிவிக்கப்படும்

இந்த வினாக்களுக்குரிய சரியான விடைகளை எழுதி ரூபா 500 பணப் பரிசினை வெல்லுங்கள்!

தீபம்,
பொது அறிவு வினாப் போட்டி,
இல.10, வில்வந்தெரு
ஒழுங்கை கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தீபம்
"யாமார்க்கும் குடியல்லோம்"
30.06.2019 இதழ் -188
gmail:- newsdeepam19@gmail.com
விநியோகம் / விளம்பரம் TP:- 021 4927542, 0771989445

# காலத்திற்கான காத்திருப்பு

எமது நாட்டின் அன்றாட அரசியல், வாழ்வியல், சமூகவியல் நடவடிக்கைகள் யாவும் அபத்தமாய், அர்த்தமற்றதாய் அவமானத்துக்குரியதாய் இருப்பது நாட்டினதும் மக்களினதும் எதிர்காலம் குறித்த அவநம்பிக்கைகளையே ஏற்படுத்தி வருகின்றன.

அதிகார வெறியும் பதவிகளை குறிவைத்த நகர்வுகளும் பொறுப்பற்றதும் அறிவீனத்தை வெளிப்படுத்துவதுமான பேச்சுக்கள் மற்றும் அறிக்கைகளை எவ்வித கூச்சமுமின்றி விட்டுக்கொண்டிருப்பதையே தொழிலாகக்கொண்ட அரசியல் தலைமைகள் ஒருபுறம்...

அவர்களைத் தம் அதிகார விருப்பத்துக்கேற்ப வழிநடத்த தீவிரமாகச் செயற்படும் மத அடிப்படைவாதிகள் மறுபுறமாக மக்கள் மத்தியில் இன மற்றும் மொழி ரீதியாக முரண் நிலைகளை ஏற்படுத்தி முழு நாட்டையுமே ஸ்தரமற்ற பதற்றநிலையை உருவாக்கி மகான்களாகவும் மக்கள் தலைவர்களாகவும் உலாவருவது நகைப்புக்கு மட்டுமல்ல வேதனைக்கும் உரிய விடயமாகும்.

தமிழ் மக்களை அழித்தொழிக்க முஸ்லிம் மக்களோடும் முஸ்லிம் மக்களை ஒழுக்க தமிழ் மக்களோடும் இருவேடம் போட்டு தந்திரோபாய அரசியல் மூலோபாயங்களை சந்தர்ப்பத்திற்கேற்ப வியூகங்களாக அமைத்து செயற்படும் பௌத்த சிங்கள பேரினவாதத்தின் குரூர முகம், அண்மைக்காலங்களில் சமூக அக்கறையும் மானுட நேயமும் கொண்ட சகல மக்களிடையேயும் அம்பலமாகி வருவது தெரிந்த விடயமே.

இன்று கிழக்கிலும் அவ்வப்போது வடக்கிலும் பிக்குமார் சிலரின் தமிழ் மக்கள் மீதான அக்கறை காட்டும் நாடகம் அப்பாவிகளை வியந்துநோக்க வைக்கலாம். அறிவுபூர்வமாக சிந்திப்போரை கேலிக்கூத்தாகவே நினைக்கவைக்கும் என்பதில் ஐயமில்லை. நான்கு தசாப்தகாலமாக பட்டறிவு அரசியல் நகர்வுகள் கற்றுத்தந்த பாடமிது.

ஒருபக்கம் நில ஆக்கிரமிப்பு, பௌத்தமத பரவலாக்கல், சிங்களக் குடியேற்றம் என வஞ்சக நோக்குடன் திட்டமிட்டு செயற்படும் மேலாதிக்கம் ஆங்காங்கே சில அரசியல் அநாதைகளான பதவிப்பதர்களான சில தமிழரை தமது கைத்தடிகளாக பயன்படுத்தி தங்களுக்கு தாளம் போட வைக்கலாம் அவ்வளவுதான்,

**நாக்கு நுனிக்கண் நனுந்தேனும் நெஞ்சகத்து**
**நீக்கரிய நஞ்சும் நிலைபெற்ற தீக்குணத்தோன்**
**இன்சொல் உரைக்கிறான் என்றவனை நம்பாதே**
**என் சொலினும் செய்வான் இடர்**

என்ற ஔவையின் பாடலை அரிச்சுவடி படிக்கும் காலத்தில் அறிந்தவர்களாகவே உணர்வுள்ள தமிழ் மக்கள் இருப்பர்.

அவர்கள் தற்போது செயலற்றவர்களாகவே இருக்கலாம். ஆனால் செயற்படவேண்டிய தருணத்துக்காக காத்திருப்பார்கள். இதனையும் கடந்தகால வரலாறு பதிவுசெய்தே வைத்துள்ளது.

இந்த வரலாற்றுப் பாடங்கள் அடுத்துவரும் தலைமுறைக்கு அவசியமானதும் அர்த்தமுள்ளதுமான செய்திகளைத் தாங்கியதாகவே இருக்கும். மதவாதிகளும் இந்த நாட்டின் சந்தர்ப்பவாத அரசியல் மேற்கொண்டு வருகின்ற பேரினவாத வல்லாதிக்க சக்திகளின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்து சுயலாபம் பெறும் செயற்பாடுகளால் முழுத்தமிழினமுமே எத்தகைய அழிவுகளை எதிர்காலத்தில் சந்திக்கப்போகின்றது என்பதை கற்பனை பண்ணிக்கூடப் பார்க்க முடியாது.

நாட்டில் இடியப்பச் சிக்கலாகியுள்ள பல பிரச்சினைகளுக்கும் காரணமான ஆட்சீட வல்லரசுகள் தமது வரையறையற்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி தம் இருப்பைத் தக்கவைக்க தமது பொறுப்புகளைப் புறந்தள்ளிவிட்டு வெறுமனே அறிக்கை அரசியலை நடத்தி வருவதை எத்தனை காலத்துக்குத்தான் இந்த மக்களால் பொறுமை காத்திருக்கமுடியும்.

இந்தப்பொறுமை குமுறக்காத்திருக்கும் ஒரு எரிமலையின் சீற்றத்தைக் கொண்டதாகும் என்பதை அனுபவபூர்வமாக நமது அரசியல்வாதிகள் உணரும் காலம் வெகுதொலைவில் இல்லை என்பதை உணர்த்தவேண்டிய சிந்தனை புரட்சிக்கான அறிகுறிகள் தென்படத்தொடங்கியுள்ளதும் உண்மை. ●




(1970 களில் சிரித்திரன் ஆசிரியர் சுந்தர் அவர்கள் வரைந்த கருத்துச் சிரிப்பு ஓவியம் இது. பாருங்கள் இன்றும் இதே நிலைதான்...)


# நவயுகத்திற்கான காத்திருப்பு

இளைஞர்களைத்தான் ஒரு மூலப்பொருள் என்று சொல்லுவேன். சமுதாயத்தின் சக்தி அவன்: ஓர் இனத்தின் இதயமவன்: ஒரு நாட்டின் மூச்சும் முதுகெலும்பும் அவன்தான். இந்த வாலிப மூலப்பொருளைக் கொண்டுதான் ஒருநாடு வாழவேண்டும். காளையரின் வீரியத்தைத்தான் கொண்டு நாளைய சுபீட்சத்தைக் கட்டியெழுப்பவேண்டும். வாலிப சக்தியை வசப்படுத்தினால்தான் நாடு வளம்பெறும்.

நம் நாடு ஒரு சுடுகாடு. வாலிப சக்திக்கு ஒரு வரண்ட பாலைவனம். இளைஞரின் எழுச்சிக்கும் அவர்கள் உயர்ச்சிக்கும் இது ஒரு இருண்ட பூமி. வலிமைபடைத்த வாலிபர்களுக்கு இங்கு வாழ வழியில்லை. படித்தவர்கள் இங்கு பயனற்றுக் கிடக்கிறார்கள். யுவசக்தி இங்கு சவமாகிப் போகிறது. வீறுகொண்ட இளைஞர்களுக்கு வெறுமையைக் காட்டுகிறார்கள் நமது ஆட்சியாளர்கள். வாழ்க்கைக்குப் பயன்படாக் கல்வியை வகுத்து நாட்டின் வளத்துக்குப் பயன்படா பட்டங்கள் வழங்கி எதிர்கால சந்ததிக்கு இருண்ட எதிர்காலத்தைக் காட்டியிருக்கிறார்கள் எமது அரசியல்வாதிகள்.

வாலிப சமுதாயம் இனியும் வாழாவெட்டிகளாக இருக்க முடியாது. நாடு நமக்கு நலம்தேடும் என்று படித்தவர்கள் பகல்கனவு காணக்கூடாது. ஆட்சியாளர்களை நம்பினால் ஆகப்போவது ஒன்றுமில்லை. உங்களது சுபீட்சம் உங்களது கையில்தான்.


கல்வியை உத்தியோகத் தகைமையாகக் கருதவேண்டாம். கல்வி என்பது அறிவாற்றல். சிந்தனையை வளர்க்கும் சித்தப்பயிற்சி அது. உலகத்தை அறிந்துகொள்ளும் வாழ்க்கையை உணர்ந்துகொள்ளும் பாடம்தான் கல்வி. கல்வி கற்பவன் வாழ்க்கையைக் கற்கின்றான். வாழ்க்கையை சிறப்பாக வாழ்ந்துகொள்ளக் கற்கின்றான்.



நீங்கள் வாழ்ந்துகொள்ள நீங்களே வழிதேட வேண்டும். உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ஆற்றல் உண்டு. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சக்தி. வலிமை உங்கள் சதையில் உண்டு. புரட்சி உங்கள் பக்கத்தில் உண்டு. புதுமையாக சிந்தித்தால் புதியபாதை தோன்றும்.


நவயுகம் என்பது இளைஞர்களது உலகம். வரப்போவது வாலிபரின் வசந்தபூமி.

**1970 ஆம் ஆண்டில் சிரித்திரன் சுந்தர் அவர்கள் எழுதிய ஆசிரியர் தலையங்கம் இது. 50 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த சூழ்நிலை இப்படித்தான். இன்று மீண்டும் அதே மாதிரியான காத்திருப்புதான்.**




**மனதி லுறுதி வேண்டும்,**
**வாக்கினி லேயினிமை வேண்டும்**
**நினைவு நல்லது வேண்டும்,**
**நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்**
**கனவு மெய்ப்பட வேண்டும்,**
**கைவசமாவது விரைவில் வேண்டும்**
**தனமும் இன்பமும் வேண்டும்,**
**தரணியிலே பெருமை வேண்டும்.**
**கண் திறந்திட வேண்டும்,**
**காரியத்திலுறுதி வேண்டும்**
**பெண் விடுதலை வேண்டும்,**
**பெரிய கடவுள் காக்க வேண்டும்**
**மண் பயனுற வேண்டும்,**
**வானகமிங்கு தென்பட வேண்டும்**
**உண்மை நின்றிட வேண்டும்.**

உலக அரசியல்




# இந்திய - அமெரிக்க பாதுகாப்பு உறவுக்கு வழிவகுக்குமா?

கலாநிதி கே.ரீ. கணேசலிங்கம்.

நரேந்திர மோடியின் ஆட்சியில் அமெரிக்க - இந்திய நெருக்கம் அதிகரித்திருந்தது. ஒப்பீட்டடிப்படையில் காங்கிரஸ் ஆட்சியைவிட பாரதீய ஜனதாக் கட்சியின் தீவிர வலதுசாரிக் கொள்ளை அமெரிக்காவுடனான உறவினைப் பலப்படுத்தியுள்ளது. அதிலும் மோடி தலைமையிலான அரசாங்கம் அமெரிக்கா சார் வெளியுறவுக் கொள்கையை வரைந்து கொள்வதில் அதிக அக்கறைகாட்டி வருகிறது. இந்திய வெளியுறவுக் கொள்கை இறுக்கமானதாக ஒருபோதும் இருந்ததில்லை. ஆட்சியாளரின் விருப்புக்கு ஏற்ப இசைவுபடும் களவுத்தனத்தைக் கொண்டது. அமெரிக்க வெளிவிவகாரச் செயலாளர் மைக் பாம்பியோவின் இந்திய வருகை பற்றிய புரிதலைத் தருவதே இக்கட்டுரையின் வெளிப்பாடாகும்.


நான்கு நாள் அரசமுறைப் பயணமாக மைக்பாம்பியோ இந்தியா வந்துள்ளார். அவரை வரவேற்ற காட்சிகள் இந்திய - அமெரிக்க உறவின் பலத்தைக் காட்டுவதாக அமைந்துள்ளது. இது நரேந்திர மோடியின் வெற்றியின் போது திட்டமிடப்பட்ட விஜயமாக அமைந்திருந்தது. அமெரிக்க ஜனாதிபதி டொனாட் ட்ரம்ப் இன் செய்திகளுடன் வருகை தந்துள்ள பாம்பியோ வர்த்தகம், பாதுகாப்பு, நேரடி முதலீடு மற்றும் பிராந்திய பாதுகாப்புப் பற்றிய உரையாடலில் ஈடுபட்டதாக தெரிய வருகிறது. இந்தியா வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பினை பெரியளவில் அமெரிக்க பக்கம் திசைதிருப்பி விட்டுள்ளது. அது மன்மோகன் சிங் ஆட்சிக் காலத்தில் நிறைவடைந்துவிட்டது. இந்தியாவில் பொருளாதாரக் கொள்கைகளை கையாள்வதில் வலதுசாரிச் சிந்தனை மரபு மன்மோகன் சிங் காலத்தில் தீவிரமானதாக திகழ்ந்தது. பாரதீய ஜனதாக் கட்சியைப் பொறுத்தவரை வலதுசாரிக் கொள்கையில் உருவான போதும் வாஜ்பாய் காலம் உள்நாட்டின் பொருளாதார வளங்களை மையப்படுத்திய போக்கு காணப்பட்டது. இதனால் உள்நாட்டு உற்பத்திக்கான வாய்ப்புக்கள் அதிகப்படுத்தப்பட்டது. நரசிம்மராவ் விட்டுச் சென்ற மாற்றங்கள் அமுலாகும் போக்கு அக்கால ஆட்சியில் நிலவியது. நரசிம்மராவ் இந்தியாவின் - டொங் - என அழைக்கப்பட்டவர். அவரிடம் அரசியலில் மட்டுமல்ல பொருளாதாரக் கொள்கை வரையிலும் நிதானப் போக்கு காணப்பட்டது.

> இந்தியா பொருளாதார வர்த்தகம் போன்று பாதுகாப்புக் கொள்ளையை அமெரிக்காவுக்கு ஏற்ப மாற்றுமாயின் ஆபத்தான விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும். பாதுகாப்புத் துறையில் ஊழல் அதிகமுள்ள நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். அதனால் மட்டுமல்ல பாதுகாப்பு ஆயுத உற்பத்தியில் அமெரிக்காவிடம் தங்கியிருக்கும் நிலை ஏற்படுவது உற்பத்தியை மட்டுமல்ல தொழில்நுட்பத்தினையும் அழித்துவிடும். தற்போது இந்தியாவின் ஆயுத தளபாட உற்பத்தி வளர்ந்து செல்கிறது. இதற்கான வாய்ப்புக்கள் தகர்ந்துவிடும் அணு-வாயுத உற்பத்திக்கு ஏற்பட்ட நெருக்கடி ஏனைய ஆயுத தளபாட உற்பத்திக்கும் ஏற்படும்.

ஆனால் மோடி அரசாங்கம் தீவிரமாக பொருளாதார செல்நெறியை அமெரிக்கா பக்கம் திருப்புவதில் அக்கறை செலுத்தினார். சர்வதேசப் பொருளாதாரத்திலும் அமெரிக்க நட்புச் சக்திகளில் அதிகமாகத் தங்கியிருக்கும் போக்கினை நிர்ணயித்தார். அவரது தொடரும் ஆட்சி அதிகமான பொருளாதார அணுகுமுறை மட்டுமல்லாது இராணுவ ஆயுத தளபாடத்திலும் அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தையினை அப்போதைய 2+2 சந்திப்பில் நிகழ்த்தப்பட்டது. பெருமளவுக்கு விமானங்கள், ஏவுகணைகள் கொள்வனவு தொடர்பில் பேச்சுவார்த்தை நிகழ்ந்ததுடன் அரசாங்கத்துக்குள் இருந்த எதிர்ப்பினால் கைவிடப்பட்டது. ஆனால் அமெரிக்கா அத்தகைய ஆயுதத் தளபாடங்கள் மட்டுமல்ல ரஷ்யாவுடன் கொள்வனவு செய்யும் ஆயுதங்களுக்கு பதிலாக நிரப்பீடு செய்ய முயலுகிறது. அதற்கான அணுகுமுறைகளை உருவாக்கிவரும் அமெரிக்கா இரண்டு விடயங்களை இந்தியாவிடம் வலியுறுத்தி வருகிறது.

ஒன்று இஸ்லாமியப் பயங்கரவாதம் பற்றியது. பாகிஸ்தான் மட்டுமல்ல இஸ்லாமியப் பயங்கரவாதமே இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக உள்ளது என்பதை தெரியப்படுத்தி வருகிறது. குறிப்பாக இஸ்லாம் - பாக்கிஸ்தான் சீனா மூன்றுமே இந்தியாவைச் சுற்றிவளைத்துள்ளன. மூன்றுக்கும் இடையே தெளிவானதும் உத்திகள் கொண்டதுமான உறவு வளர்ந்துள்ளது. ஏறக்குறைய இந்தியா மேற்குறித்த மூன்று சக்திகளது சுற்றிவளைப்புக்குள்ளும் அகப்பட்டுள்ளது.

இரண்டாவது பிராந்திய ரீதியில் இந்தோ - பசுபிக் பாதுகாப்பு இந்தியாவின் இருப்புக்கு அவசியமானது. அமெரிக்கா வலியுறுத்தி வருகின்றது. குறிப்பாக இந்த சமுத்திரத்தின் பாதுகாப்பும் நாடுகளின் ஒருமைப்பாடும் இஸ்லாமியப் பயங்கரவாதத்தையும் சீன செல்வாக்கினையும் தகர்க்க அவசியமெனக் கருதுகிறது. அதற்கான உத்திகளை வகுப்பதற்காகவே இந்தோ - பசுபிக் தந்திரோபாய அணியில் இந்தியாவை அமெரிக்கா முன்னிலைப்படுத்தி வருகிறது.



இத்தகைய காரணங்களால் ரஷ்யாவுடனான இராணுவ ஆயுத உடன்பாடுகளை ரத்துச்செய்ய வற்புறுத்திவருகிறது. இவற்றைவிட ரஷ்யா - சீன நெருக்கத்தினையும் குறைபாடாக இந்தியாவுக்கு அமெரிக்கா தெரிவித்து வருகின்றது. இதேநேரம் அமெரிக்காவுடனான ஆயுத உறவு பலமாக நிலைத்திருக்கும் இராணுவ தொழில்நுட்பத்தினை கொண்டிருக்க முடியும் என்ற உரையாடலையும் இந்தியாவுக்குள் அமெரிக்கா ஏற்படுத்தி வருகிறது.

அமெரிக்காவும் சீனாவும் வர்த்தக ரீதியில் ஏற்படுத்திவரும் முறுகலானது தனித்தனியே தமக்கான அணிகளை நோக்கிய அசைவுகளுக்கு திட்டமிட்டுள்ளன. பாம்பியோவின் இந்திய வருகை சீனாவுடனான வர்த்தக கசிவை சரிசெய்வதாக அமைந்துள்ளது. வர்த்தக ரீதியில் அதிக உடன்பாடுகளை எட்டுவதற்கான பேச்சுக்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இந்தியாவை முழுமையாக அமெரிக்கா தனது பாதுகாப்பு, வர்த்தகம், பொருளாதார உதவிகளில் தங்கியிருக்கும் சூழலை உருவாக்க திட்டமிட்டுவருகிறது. பிறிக்ஸ், ஷங்காய் - 5 போன்ற போன்ற அமைப்புக்களிலிருந்த இந்தியாவை வெளியெற்றுவதன் மூலம் சீனாவின் அமெரிக்காவுக்கு எதிரான போட்டியில் தோற்கடிக்க முடியுமென கருதுகிறது.

ஆனால் இந்தியாவின் இதுவரையான அணுகுமுறை ரஷ்ய - சீனாவை புறந்தள்ளாது பேணப்பட்டு வந்ததைக் காணக்கூடியதாக அமைந்திருந்தது. தற்போதும் அத்தகைய வெளியுறவுப் போக்கு காணப்படுமாயின் மட்டுமே நிலைமை இந்தியாவுக்கு சாதகமாக அமையலாம். முற்றாக சீன - ரஷ்யத் தரப்பினை இந்தியா நிராகரிக்குமாயின் புவிசார் அரசியலில் தோல்வியை சந்திக்கும் நாடாக அமையும். இந்தியா பொருளாதார வர்த்தகம் போன்று பாதுகாப்புக் கொள்ளையை அமெரிக்காவுக்கு ஏற்ப மாற்றுமாயின் ஆபத்தான விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும். பாதுகாப்புத் துறையில் ஊழல் அதிகமுள்ள நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். அதனால் மட்டுமல்ல பாதுகாப்பு ஆயுத உற்பத்தியில் அமெரிக்காவிடம் தங்கியிருக்கும் நிலை ஏற்படுவது உற்பத்தியை மட்டுமல்ல தொழில்நுட்பத்தினையும் அழித்துவிடும். தற்போது இந்தியாவின் ஆயுத தளபாட உற்பத்தி வளர்ந்து செல்கிறது. இதற்கான வாய்ப்புக்கள் தகர்ந்துவிடும் அணுவாயுத உற்பத்திக்கு ஏற்பட்ட நெருக்கடி ஏனைய ஆயுத தளபாட உற்பத்திக்கும் ஏற்படும்.

பாம்பியோவின் தொடர்ச்சி ஜப்பானிலுள்ள ஒசாகா சந்திப்பிலும் இருநாட்டுத் தலைவர்களுக்கும் இடையில் நிகழுமென தெரியவருகிறது. இரு தலைவர்களும் நீண்ட நேரம் பேசுவதற்கு திட்டமிட்டுள்ளனர் என்பது கவனிக்கத்தக்கது.

எனவே பாம்பியோவின் இந்திய வருகை பொருளாதார, வர்த்தக விடயங்களை விட பாதுகாப்பிலும், ஆயுதத் தளபாட பரிமாற்றத்திலும் அதிக அக்கறையுள்ளதாக அமையவுள்ளது. இந்தியா மட்டுமல்ல தென்னாசிய இந்து சமுத்திர பிராந்தியங்கள் பெரும் மாற்றத்தை நோக்கி நகரும். அமெரிக்க நலனுக்குரிய பிராந்தியமாக மாறுவதற்கான சூழலை ஏற்படுத்தவுள்ளது. இஸ்லாமிய பயங்கரவாதம் தீவிரமாக ஒடுக்கப்படும். அமெரிக்க - இஸ்ரேல் - இந்தியா எனும் அணி இஸ்லாத்துக்கு எதிராக இலகுவில் ஒன்றுதிரளக்கூடிய சக்திகளாகும். ●

# விமல் வீரவன்ச கண்டுபிடித்த எதிரிகளும் துரோகிகளும்



**மாசிலான்**

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் சிங்கள மக்களுக்கு எதிரான போராட்டமல்ல. சிங்கள மக்கள் எங்களுக்கு எதிரிகள் அல்ல. சிங்கள ஆக்கிரமிப்புக்கு எதிரான, சிங்கள ஆட்சியாளருக்கு எதிரான போராட்டமே தமிழ் மக்களின் போராட்டம் என்று தமிழ்த் தேசியத் தலைவர் அன்றே கூறியிருந்தார். ஆனால் இதனை வெறுமனே ஒரு பயங்கரவாத ஆயுதப்.போராட்டமாகவே சிறிலங்கா அரசு காட்டி வந்தது. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களின் பின்னர், பிரபாகரன் மக்களைக் குறிவைத்துத் தாக்குதல்களை நடத்தவில்லை. அவரது தாக்குதல்களுக்கு ஒரு இலட்சியம் இருந்தது என்று ராஜபக்சா உட்படப் பல சிங்கள அரசியல் தலைவர்களும், ராவுப் ஹக்கீம் உட்பட முஸ்லிம் அரசியவாதிகளும் கூறிவருகின்றனர்.

இந்நிலையில் தான் தன்னைப் பெரிய இடதுசாரி என்று கூறிக்கொண்டிருக்கும் விமல் வீரவன்சவும் சில தேரர்களும் தமிழர்களை எதிரிகளாகவும் முஸ்லிம்களைத் துரோகிகளாகவும் பரப்புரை செய்கின்கின்றனர். பிரபாகரனின் ஆயுதப் போராட்டத்தால் சிங்களவர்களுக்குத் தமிழர்கள் எதிரிகளாக இருந்து வருகின்றனர்.அதேவேளை சஹ்றான் குழுவிரின் தற்கொலைக் குண்டுத் தாக்குதலை அடுத்து சிங்களவர்களுக்கு முஸ்லிம்கள் துரோகிகளாக மாறியுள்ளனர். ஏனெனில் முஸ்லிம்களைச் சிங்களவர்கள் பெரிதும் நம்பியிருந்தார்கள். ஆனால் இன்று அது தலைகீழாக மாறியுள்ளது என்று கூறியுள்ளார் வீரவன்ச. இதில் ஓர் உண்மையையும் தன்னை அறியாமல் அவர் கூறியுள்ளார் என்பது கவனிக்கப்பட வேண்டியதாகும். முஸ்லிம்களைப் பெரிதும் சிங்களவர்கள் நம்பியிருந்தார்களாம். எதற்காக நம்பியிருந்தார்கள்? என்றால் தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைக்குச் சிங்களத் தரப்பினருக்கு முஸ்லிம்கள் தாவிக்கொண்டே தொடர்ந்தும் இருப்பார்கள் என்பது தான். அந்த நம்பிக்கை இந்த நம்பிக்கை தான் குண்டு வெடிப்பின் மூலம் தகர்ந்து விட்டது அதனால் அவர்களை அவர் துரோகிகள் என்று கூறுவதற்குக் காரணமாகிறது.

இவ்வாறு விமல் வீரவன்ச கூறியதைப் பற்றி சம்பந்தனோ சுமந்திரனோ, சேனாதி ராசாவோ கருத்துக் கூறாது மௌனம் காத்து வருகின்றனர். ஆனால் தமிழர்கள் பற்றிக் கூறியதற்கும் சேர்த்து உலாமாக் கட்சித்தலைவர் முபராக் அப்துல் மஜீத் கருத்துகளைப் பதிவு செய்துள்ளார். விமல் வீரவன்ச கூறியதிலிருந்தே அவருக்கு எந்த விடயத்தையும் நடுநிலையாக நின்று சிந்திக்கத் தெரியாது என்பதே வெளிச்சமாகி உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் பிரபாகரன் தனது ஆயுதப்போராட்டத்தின் மூலம் சிங்கள மக்களுக்கு எதிரியாவதற்கு முன் தனிச் சிங்களச் சட்டம், தொழில் வாய்ப்பு புறக்கணிப்பு, கல்வியில் ஓரம் கட்டல், பலாத்காரக் குடியேற்றங்களால் சிங்களவர்களே முதலில் தமிழ் மக்களை எதிரிகளாக்கினர் என்ற உண்மையைக் கூட (வீரவன்ச) இன்னமும் புரியவில்லை

அதேபோல் சிங்களச் சகோதரர்களைப் பெரிதும் நம்பிய முஸ்லிம்களுக்கு முதலில் துரோகம் செய்தது சிங்கள அரசியல் வாதிகளே என்பதை மறந்து விட்டார் வீரவன்ச.

கடந்த மகிந்த ஆட்சிக்குப் பெருமளவு ஆதரவைக் கொடுத்தனர் முஸ்லிம்கள். ஆட்சியில் இணைந்தும் இருந்தனர் முஸ்லிம்கள். ஆனால் பௌத்த சமயத் தலைவர்கள் தலைமையில் தம்புள்ள பள்ளிவாசல் தாக்கப்பட்ட போது அதில் சம்பந்தப்பட்ட எவரும் கைது செய்யப்படாததே முஸ்லிம்கள் வரலாற்றில் கண்ட பெரும் துரோகமாகும்.அதன் பின் அநியாயமாக அழுத்கமவில் தாக்குதல் நடந்தது. அங்கு தாக்குதல் நடத்தியவர்களைக் கட்டுப்படுத்த நடவடிக்க எடுக்கப்படாமை அடுத்த பெரிய துரோகமாகும். அதன் பின்னர் பெரும் ஆதரவை ரணிலுக்குக் கொடுத்து நல்லாட்சி அரசை நிறுவினர். இந்த ஆட்சியிலாவது தாம் நிம்மதியாக வாழலாம் என்ற நம்பிக்கைக்கு அம்பாறைப்பள்ளி வாசல் மீதான தாக்குதல், திகன, கண்டித் தாக்குதல் எண்ணூறு கோடிச் சொத்தழிப்பு ஒரு வாரத்துக்கு தாக்குதல் நடத்த அனுமதி என்பனவற்றின் மூலம் முஸ்லிம்கள் மிகப் பெரிய துரோகத்துக்கு முகம் கொடுத்தனர் என்று சுட்டிக்காடியுள்ளார் உலாமாக் கட்சித் தலைவர்.

இவ்வாறு எதிரிகளாக இருப்பதும் சிங்கள இனம் தான் துரோகிகளாக இருப்பதும் சிங்கள இனம் தான் என்று அவர் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

விமல் வீரவன்ச தன்னை ஓர் இடது சாரியாகக் காட்டிக்கொண்டு

> விமல் வீரவன்ச கூறியதிலிருந்தே அவருக்கு எந்த விடயத்தையும் நடுநிலையாக நின்று சிந்திக்கத் தெரியாது என்பதே வெளிச்சமாகி உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் பிரபாகரன் தனது ஆயுதப்போராட்டத்தின் மூலம் சிங்கள மக்களுக்கு எதிரியாவதற்கு முன் தனிச் சிங்களச் சட்டம்,தொழில் வாய்ப்புப்புப் புறக்கணிப்பு,கல்வியில் ஓரம் கட்டல்,பலாத்காரக் குடியேற்றங்களால் சிங்களவர்களே முதலில் தமிழ் மக்களை எதிரிகளாக்கினர் என்ற உண்மையைக் கூட (வீரவன்ச) அவர் இன்னமும் புரியவில்லை.

இவ்வாறு மிகவும் மோசமான சிங்கள மேலாண்மை.இனவாதக் கருத்துக்களைக் கக்கிக் கக்கி வருவது புதுமையல்ல. இவர் உண்மையில் ஓர் இடதுசாரி எண்ணம் கொண்டவரா என்றால் அது நகைப்புக்கு உரியதாகவே இருக்கும். இவரல்ல இலங்கைத் தீவில் இருந்த அனைத்து இடதுசாரி இயக்கங்களும் உண்மையான மரக்சிச லெனினிச சிந்தனைகளைக் கொண்டவைகளாக இருந்ததில்லை என்பதை வரலாறு காட்டும்.

விமல் வீரன்வன்ச இன்று பல கோடி சொத்துக்களுக்குச் சொந்தக்காரர். இவருக்கு எவ்வாறு இத்தனை கோடிச் சொத்துகள் வந்தன என்பது இப்பொழுது விசாரணையில் இருக்கிறது. இவர் தான் முன்பிருந்த ஜே வி பி க்குச் செய்த துரோகத்தால் பத்துக் கோடி காசு அக்கட்சிக்கு கட்டவேண்டும் என்று நீதி மன்று தீர்ப்பளித்தும் உள்ளது. அதைவிட கடவுச் சீட்டு மோசடி என்ற வகையில் இவரது மனைவி மேல் வழக்கும் இருக்கிறது. இதைவிட இன்னொரு வழக்கு என்னவென்றால் கோக்கந்தர என்ற ஊரில் உள்ள இவருக்குரிய வீட்டில் நடந்த இளைஞர் ஒருவரின் கொலையாகும். இதேபோல் பல ஊழல்களில் சிக்கியுள்ள இவர் அவற்றை மறைப்பதற்கு இனவாதத்தை மிகத் தீவிரமாகப் பேசுவது விந்தையல்ல

இவர் தமிழர்கள் எதிரிகள் என்று பேசுகிறார். ஆனால் இவர் தனது தலைவர் என்று கூறும் ரோகண விஜயவீர பிறந்த மேனியராக யாழ்ப்பாணத்தில் சிறையில் அடைக்கப்பட்டிருந்தபொழுது அவருக்கு மானத்தைக் காப்பாற்ற உடை கொடுத்து உதவியவர் தமிழர் தான் என்பதை மறந்து விட்டாரா? அல்லது இவருக்கு அது தெரியாதா? இவருக்கு அது தெரியாமல் இருந்திருக்கலாம் ஏனெனில் இவர் உண்மையில் ஒரு ஜேவிபி போராளி அல்ல. மிகப் பிந்திய காலத்தில் தான் ஜேவிபியில் இணைந்தவர். ஜேவிபி நடாத்திய போராட்டங்களில் பங்குபறியிருக்கவில்லை என்று பலரும் கூறுவதுண்டு..பின்னர் தனது சுய நலத்திற்காக அக்கட்சிக்குத் துரோகியாகி இப்பொழுது அதன் எதிரியாகவும் உள்ளார்.

இதேநேரம் இலங்கையின் ஆரம்பகால் இடதுசாரிகள் எவ்வாறு தமது அரசியலை நகர்த்தினர். எவ்வாறு நடந்துள்ளனர் என்று பார்க்கவேண்டும். சோவியத் புரட்சி உலகில் பெரிய அளவில் ஓர் எழுச்சியை உண்டாக்கியது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். மேற்கு நாடுகளில் படித்த இலங்கை இளைஞர்கள் பலரின் மனங்களிலும் அப்புரட்சி ஓர் மாற்றத்தை ஏற்படுத்தியது. அங்கு படித்துவிட்டு இலங்கை திரும்பிய அவர்கள் இலங்கைத் தீவிலும் கம்யுனிஸ்ட் சிந்தனைகளைப் பரப்பத் தொடங்கினர். கம்யூனிஸ்ட், சமசமாஜக் கட்சி எனக் கட்சிகள் தொடங்கப்பட்டன. இதில் முன்னணித் தலைவர்களாக பீட்டர் கெனமன், என் எம் பெரேரா, கொல்வின் ஆர் டி சில்வா பெர்னாட் சொய்சா என மேலும் பலர் இணைந்திருந்தனர். இளைஞர்களை மிகவும் கவர்ந்து இழுத்தன இவர்களது அரசியல் செயற்பாடுகள். அரசு ஊழியர்களிடையே தொழிற்சங்கங்கள் அமையவும் அவை இக்கட்சிகளின் அமைப்பாகவுமே இயங்கவும் வழிசமைத்தன. இலங்கைத் தீவில் 'ஓர் மொழி என்றால் இரு நாடுகள் என்றும் இரு மொழி என்றால் ஒரு நாடு' என்று கூறியவர்களும் இந்த இடது சாரிகளே.. அவ்வாறு மொழிக்குச் சம உரிமை என்பதை ஏற்றுக்கொண்ட இடதுசாரிகள் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை எதிர்க்காது இருந்தனர். அதே நேரம் லெனினைப் பின்பற்றுவதாகக் கூறிய இடதுசாரிகள் சோவியத் ரசியா என்று இருந்தால் அது பேரினவாதத்தைக் காட்டும் எனவே சோவியத் ஒன்றியம் என்று தான் நாட்டின் பெயர் இருக்கவேண்டும் பிரிந்து செல்லும் உரிமையுடன் தேசிய இனங்கள் மாநில சுயாட்சி உரிமையுடன் சமஷ்டி அமைப்பில் இருக்க வேண்டும் என்று கூறிய லெனினின் சமஷ்டியை இலங்கையில் ஏற்க மறுத்தனர். அது மட்டுமல்லாது சமஷ்டியே இலங்கைக்குச் சிறந்த தீர்வு என்று கூறிய தந்தை செல்வாவை ஓர் இனவாதி என்றும் கூறினார்கள்.

இதே இடதுசாரிகள் தான் 1964 இல் சிறிமாவோ பண்டாரநாயகாவுடன் இணைந்து ஆட்சியில் பங்கு கொண்டனர். இது நடைபெறச் சில நாள்களுக்கு முன்னர் தான் இவர்களது தொழிற்சங்கங்கள் இருபத்தியொரு கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர் அரசிடம். ஆனால் அரசிடம் இணைந்தவுடன் தொழிலாளர்களைக் கைவிட்டனர். இருபத்தியொரு கோரிக்கைகளும் காற்றில் பறந்தன. உண்மையில் தொழிலாளர்களுக்கு இந்த இடதுசாரிகள் பெரும் துரோகம் இளைத்தனர். இவ்வாறு தொழிலாளர்களுக்குத் துரோகம் இளைத்தவர்கள் அடுத்தது தமிழினத்திற்குப் பெரிய துரோகத்தைச் செய்தனர். அதுதான் பண்டாரநாயக்காவல் கொண்டுவரப்பட்ட தமிழ் மொழி விசேட உபயோகம் என்ற சட்ட வரைவிற்கு 1966 இல் சில விதிகளைக் கொண்டு வந்து அதனை நடைமுறைப்படுத்த முயன்றபொழுது தோசை வடை நல்லெண்ணெய் என்ற கூக்குரல்களுடன் மிகப் பெரிய இனவாதக் குரல்களை ஓங்கி ஒலித்து அச்சட்ட விதிகளை எதிர்த்து கொள்ளுப்பிட்டியிலிருந்து இனவாத ஊர்வலம் சென்றனர்.

பின்னர் 1972 இல் அமைச்சராக இருந்த பெரிய இடதுசாரி என்று தம்பட்டமடித்த கொல்வி ஆர் டி சில்வாவினால் தயாரிக்கப்பட்ட புதிய குடியரசு அரசியல் யாப்பு முன்னைய யாப்பில் இருந்த தமிழினத்திற்கான சிறு பாதுகாப்பினையும் நீக்கி ஒரு சிங்கள பௌத்த நாடாக அரசியல் யாப்பில் வெளிப்படுத்தினர். சாதாரண சட்டமாக இருந்த சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி என்று இருந்ததை அரசியல் யாப்பில் நிலையான சட்டமாக நிறைவேற்றினர். இவ்வாறு தொடர்ந்தும் பல வழிகளில் தமிழினத்தை இரண்டாந்த்தரக் குடிமக்களாக ஆக்கியதில் இடதுசாரிகளுக்குப் பெரும் பங்குண்டு.

மேலெழுந்தவாறு நோக்கும் பொழுது தென்னிலங்கை இடதுசாரிகளுடன் இணைந்து பயணிக்க வேண்டும் என்று கூறுவோர் வரலாற்றைச் சரியாகப் புரிந்து கொள்ளாதவர்களே ஆகும். இங்கு மேலும் ஒன்றை நோக்க வேண்டும் 'உலகத் தொழிலார்களே ஒன்று படுங்கள்' என்று கூறிய இவர்கள் தான் சோவியத்தும் சீனாவும் கருத்து முரண்கொண்டபோது அதையே பின்பற்றி இங்கும் இரண்டாகப் பிரிந்து தொழிலார்களைக் கூறு போட்டவர்கள்.ஆட்சி அதிகாரத்துக்கு வரத் துடிப்பவர்கள் தொழிலார்களுக்கே துரோகம் செய்தவர்கள் தமிழினத்தை ஒரு பொருட்டாகவே கருதவில்லை கருதவும் மாட்டார்கள்

எனவே இடதுசாரிகள் என்று புறப்பட்டவர்களும் இடதுசாரிகள் தாங்கள் தான் என்று சொல்லித்திரியும் விமல்வீரவன்ச போன்றவர்களும் மாக்சிய அடிப்படைச் சித்தாங்களுக்கு எதிராகவும், சுயநல அடிப்படையிலுமே அரசியலில் இருக்கிறார்கள். சமதர்மக் கோட்பாடுகளுக்கு எதிரான சிந்தனையுடன் செயல்படும் விமல் வீரவன்ச போன்ற அரசியல் வாதிகள் தான் உண்மையில் மாக்சிய, லெனினிச தத்துவங்களுக்குத் துரோகிகளாகவும் எதிரிகளாகவும் இருக்கிறார்கள்

உரிமைகளுக்காகவும் விடுதலைக்காகவும் உழைக்கும் தமிழ்த் தேசிய இனத்தை இவ்வகையானவர்கள் எதிரிகள் என்று கூறுவது விந்தையாகவே இருக்கிறது.

# தமிழர் எதிரிகள் முஸ்லிம்கள் துரோகிகள் என்றால் விமல் வீரவன்ஸ தேசத்தின் எதிரியா? துரோகியா?

லம்போதரன்



தமிழர்களை எதிரிகளென்றும், முஸ்லிம்களைத் துரோகிகளென்றும் கூறியிருக்கிறார் விமல் வீரவன்ச.1970 களில் அரசாட்சியில் இருந்த ஸ்ரீமாவோ ஆட்சியைக் கவிழ்க்கச் சதி செய்த ஒரு கம்யூனிஸ்ட் இயக்கத்தின் அங்கத்தவராக இருந்தவர் இவர். (அப்போது அவர்களைப் பயங்கரவாதிகள் என்றே அரசு குறிப்பிட்டிருந்தது) அந்த இயக்கத்தின் நடவடிக்கைகள் அனைத்தும் முறியடிக்கப்பட்டபோது பலர் கொல்லப்பட்டனர். பலர் காணாமல் போயினர். பலர் கைது செய்யப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டனர். காலப்போக்கில் அவர்களுக்குப் பொது மன்னிப்பு வழுங்கப்பட்டு அவர்கள் தேசிய அரசியல் நீரோட்டத்துக்குள் கொண்டுவரப்பட்டனர். ஜனதா விமுக்தி பெரமுன என்ற பெயரிட்டு அரசியல் கட்சியாக அவர்கள் கட்சி அங்கீகரிக்கப்பட்டனர். அதன் பின்னரே அந்தக் கட்சிக்குள் இடைச்செருகலாக வந்து தன்னை அக்கட்சியின் உறுப்பினராக்கிக் கொண்டார். கம்யூனிஸ்த்துவக் கொள்கைகளை முன்வைத்துக் கட்சியில் பணியாற்றத் தொடங்கியவர், காலப்போக்கில் கம்யூனிஸ்த்துவக் கொள்கைகளை மூட்டை கட்டி வைத்துவிட்டு முதலாளித்துவக் கட்சியோடு கைகோர்த்து பொது வாழ்க்கைக்குள் காலடி எடுத்து வைத்தவர்.

பின்னர் ஒரு முதலாளித்துவ அரசியலைக் கையில் எடுத்தபடி சாதாரண் அரசியல்வாதிக்குரிய குணம் குறியோடு வலம் வரத்தொடங்கினார். அரசியல் செல்வாக்கினைப் பயன்படுத்தி இவர் செய்யாத திருகுதாளங்கள் இல்லை என்று கூறும் அளவுக்கு பல மோசடிகளுக்கும், சட்ட மீறல்களுக்கும் காரணமாயிருந்திருக்கிறார். இவர் மனைவி, சகோதரர் மற்றும் உறவுகள் எனப் பலரது பெயர்களில் நீதி மன்ற வழக்குகளும் உண்டு.

இப்படிப்பட்ட வரலாற்றைக் கொண்டவரை, மக்கள் பிரதிநிதியாகத் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டு மக்கள் பணத்தையும், வளத்தையும் மோசடி செய்தவரை, தனது சுய லாபத்துக்காக இன விரோதத்தை வளர்த்து மக்களைத் தவறாக வழி நடத்தியவரை, இன்றும் அரசுக்குள் இருந்து மக்கள் பணத்தில் தன்னை வசீகரித்துக் கொண்டிருக்கும் இவரை நாம் எதிரி என்பதா? அல்லது துரோகி என்பதா? மக்களே! இதைத் தீர்மானிக்க வேண்டியவர்கள் நீங்களே!

விமல் வீரவன்ச போல் இது போன்று கருத்துக்களைத் தெரிவிக்கும் முன்னர், துரோகி என்றதற்கான விளக்கத்தையும் எதிரி என்றதற்கான வரைவிலக்கணத்தையும் நன்றாகத் தெரிந்து கொண்டு சொல்வது நன்று. எமது கருத்துப்படி மக்கள் பணத்தை மோசடி செய்பவனும், நாட்டை ஊழல் கலாசாரத்துக்குள் இட்டுச் செல்பவனும், அரசுச் சொத்தைத் துஷ்பிரயோகம் செய்பவனுமே நாட்டின் துரோகியும், எதிரியும், விரோதியுமாவார்.

**செய்தி 1 – 22 நவம்பர் 2016**

ஜே.என்.பி கட்சியின் தலைவர் விமல் வீரவன்ச பதினைந்து கோடி ரூபா நிதி மோசடியில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளார். காலி மற்றும் வத்தளை நீதிக் கட்டடத் தொகுதிகளை அமைப்பதற்காக அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியை விமல் வீரவன்ச மோசடி செய்துள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அப்போதைய நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஸ பாராளுமன்றத்தில் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார்.

**செய்தி 2 – 01 செப்டெம்பர் 2018**

போலித் தகவல்களை வழுங்கி இராஜதந்திரக் கடவுச் சீட்டினைப் பெற்றுக் கொண்டார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவின் மனைவி சசி வீரவன்சவுக்கு எதிரான வழக்கு எதிர்வரும் ஒக்டோபர் 19 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

**செய்தி 3 – 01 செப்டெம்பர் 2016**

ஜனாதிபதி செயலகத்திற்கு சொந்தமான வாகனங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்திய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவின் சகோதரரான சரத் வீரவன்ச, செப்டம்பர் மாதம் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கோட்டை நீதவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்தே சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

**செய்தி 4 – 17 டிசம்பர் 2015**

முன்னாள் வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச ஊழல் மோசடிகளில் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளது. வீடமைப்பு அமைச்சராகப் பதவி வகித்த காலத்தில் உறவினர்களுக்கு விமல் வீரவன்ச வீடுகளை வழங்கியுள்ளார். ஊழல் மோசடிகளுக்கு எதிரான ஜனாதிபதி ஆணைக்குழுவினால் நடத்தப்பட்ட விசாரணைகளின் மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளது. உறவினர்கள் சிலருக்கு அமைச்சர் காணிகளை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

**செய்தி 5 – 01 யூன் 2015.**

முன்னாள் வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச மோசடி செய்துள்ளதாகக் குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டுள்ளது.கடந்த ஜனாதிபதித் தேர்த்தலின்போது 140 மில்லியன் ரூபா பெறுமதியான நாட்குறிப்புகள் மற்றும் நாட்காட்டிகள் அச்சிடுதல் தொடர்பில் மோசடி இடம்பெற்றுள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. ஹிமாசி பதிப்பகம் என்ற விமலுக்கு நெருக்கமான தரப்பினருக்கு அச்சிடும் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.உரிய விலை மனுக்கோரிக்கைகள் எதுவுமின்றி நெருக்கமான நிறுவனமொன்றிற்கு அச்சிடும் பணிகள் வழங்கப்பட்டுள்ளன.

**செய்தி 6 – 29 டிசம்பர் 2016**

பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவில் இன்று ஆஜராகியுள்ளார்.கடந்த ஆட்சிக் காலத்தில் அரசாங்க வாகனங்களைத் தவறாகப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுத் தொடர்பாக வாக்கு மூலம் அளிக்கவே நிதி மோசடி விசாரணைப் பிரிவில் ஆஜராகி உள்ளார். இதே வேளை விமல் வீரவன்ச நேற்றும் பொலிஸ் நிதி மோசடிப் பிரிவில் ஆஜராகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

**செய்தி 7 – ஸ்ரீ லங்கா முஸ்லிம்ஸ் கொம் – 06 ஏப்ரல் 2018**

உண்டியல் குலுக்கி அரசியலுக்கு வந்ததாக கூறும் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச இன்று கோடீஸ்வரர் ஆனது எப்படி என அமைச்சர் தலதா அத்துகோரல கேள்வியெழுப்பியுள்ளார்.

அத்துடன், கடந்த காலங்களில் 100க்கும் மேற்பட்ட அரச வாகனங்களை பாவித்த விமல் எம்.பி நாட்டு மக்களின் பணத்தை மோசடி செய்துள்ளதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

மேற்குறித்த செய்திகளின் அடிப்படையில் பார்த்தால் விமல் வீரவன்ச இந்த நாட்டின் எதிரியா? துரோகியா? அல்லத இரண்டுமா? என்பதை அவரது மனச்சாட்சியின் அடிப்படையில் அவரே தீர்மானித்துக் கொள்ளட்டும்.

# எதிர்கால வீடுகள்



புவி வெப்பமயமாதலுக்கு நாம் வாழும் வீடும் ஒரு காரணம் என்றால் நம்ப முடிகிறதா? நம்பித்தான் ஆக வேண்டும் என்கிறார்கள் சூழலியலாளர்கள். எப்படி என்கிறீர்களா? வீடு கட்ட பயன்படுத்தும் சிமெண்ட், செங்கற்கள் அதிகளவில் கரியமில வாயுவை வெளிப்படுத்துகிறது.

இன்னும் குறிப்பாக சொல்ல வேண்டுமானால், சிமெண்ட் உற்பத்தித் துறையை ஒரு நாடாக கருதிக் கொள்ளுங்கள், அதுதான் கரியமில வாயுவை அதிகம் வெளிப்படுத்தும் மூன்றாவது பெரிய நாடாக இருக்கும்.

முதல் இரண்டு இடத்தில் இருப்பது சீனாவும், அமெரிக்காவும்தான். பிஎல் நெதர்லாந்து சூழலியல் மதிப்பீடு முகாமையின் தகவலின்படி 2017ம் ஆண்டு மட்டும் உலகளவில் உற்பத்தி செய்யப்பட்ட சிமெண்டின் அளவு 4000 மில்லியன் டன்களுக்கு மேல்.

குறிப்பாக ஆசியாவில்தான் அதிகளவு சிமெண்ட் பயன்படுத்தப்படுகிறது. செங்கற்களும் அப்படிதான். செங்கல் சூளைகளுக்காக அதிகளவில் மரங்கள் வெட்டப்படுகின்றன.

ஒவ்வொரு ஆண்டும் 1.5 ட்ரில்லியன் செங்கற்கள் உற்பத்தி செய்யப்படுவதாகக் கூறுகிறது 2015ம் ஆண்டு ஆய்வு. செங்கல் உற்பத்தில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது . இங்கு ஒவ்வொரு ஆண்டும் உற்பத்தி செய்யப்படும் செங்கற்களின் எண்ணிக்கை 200 பில்லியன்.

இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் உற்பத்தி செய்யப்படும் செங்கற்களின் எண்ணிக்கை 200 பில்லியன். அப்படியானால் இங்கு எத்தனை மரங்கள் வெட்டப்படுகின்றன என்பதை நீங்களே கணக்கிட்டு கொள்ளுங்கள்.

உலகெங்கும் சிமெண்ட், செங்கல் இல்லாமல் அல்லது குறைவாக பயன்படுத்தி வீடுகளை கட்டும் முயற்சிகள் நடந்து வருகின்றன.

இந்தியாவிலும் மாற்று வீடுகள் குறித்த உரையாடல்கள் நடந்து வருகின்றன. குறைந்தளவு சிமெண்ட் வைத்து வீடுகள் கட்டுவது எப்படி? எப்போதும் வெளிச்சம் நிறைந்திருக்கும் வீடுகளை எப்படி வடிவமைப்பது? என மாற்று வீடுகள் குறித்து பலர் செயல்பட்டு வருகிறார்கள்.

சூழலியல் செயற்பாட்டாளர் பியூஷ் மனுஷ், "வீடுகள் எப்படி கட்ட வேண்டுமென்பதை நாம் புழங்குடிகளிடம்தான் கற்றுக் கொள்ள வேண்டும். இயற்கையாக என்ன பொருள் கிடைக்கிறதோ, அதனைக் கொண்டு மட்டுமே அவர்கள் வீடு கட்டுவார்கள். காற்றோட்டமான, வெளிச்சம் புகும் வீடுகள் அவர்களுடையது" என்கிறார்.

நகரத்தில் அதுபோல வீடுகளை கட்டுவதில் சில இடர்பாடுகள் உள்ளன என்று கூறும் அவர் சிமெண்ட், மண், செங்கல், இரும்புகளைப் பயன்படுத்தாத மாற்று வீடுகள் இப்போதைய உடனடித் தேவை, இதற்கான தொழிற்நுட்பத்தில் அரசு அதிகம் முதலீடு செய்ய வேண்டும் என்கிறார்.

மூங்கில் வீடுகளை பரவலாக்கும் முயற்சியில் பியூஷ் ஈடுபட்டு வருகிறார். ஏதாவது காட்டில் அல்லது பண்ணை வீட்டில் மட்டுமே இதுபோன்ற வீடுகள் சாத்தியம். எல்லா இடங்களிலும் இது போன்ற வீடுகளை கட்ட முடியாது என்ற போது கருத்து நிலவுகிறது

இதனை மறுக்கிறார் மூங்கில் வீடுகளை ஒர் இயக்கமாக முன்னெடுத்து வரும் கேரளா வயநாடு பகுதியை சேர்ந்த சிவராஜ். "வீடு என்பது வாழ்க்கை முறை சார்ந்தது. எப்படியான வாழ்க்கையை வாழ்கிறோம், நம் அடுத்த தலைமுறைக்கு என்னத்தை விட்டுச் செல்கிறோம் என்பதற்கான சாட்சி இந்த வீடுகள். அது இயற்கையுடன் இயைந்ததாக இருக்க வேண்டும்"


மூங்கில் வீடுகள் கட்டும் போது, அந்த வீட்டை எப்படி வடிவமைக்கிறோம் என்பது மிகவும் முக்கியம். 1800 விதமான மூங்கில் இனங்கள் உள்ளன, நாம் இருக்கும் இடத்தின் தட்பவெப்ப சூழலுக்கு ஏற்றவாறு மூங்கில்களை தேர்ந்தெடுத்து நாம் வீடு கட்டிக் கொள்ளலாம். நிச்சயம் இவை நிலைத்து நிற்கக் கூடியவை. அதில் எந்த சந்தேகமும், அச்சமும் வேண்டாம்.

நன்றி இணையம்

# நெஞ்சுரம் கொண்ட தலைமை வேண்டும்

## அதுவே எமது பிரார்த்தனை..!

அராலி குமாரசாமி




இலங்கையில் உள்நாட்டு யுத்தம் நிறைவடைந்து. 10 ஆண்டுகள் கடந்துள்ள போதிலும். தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பான பிரச்சனை இன்றும் தொடர்ந்து கொண்டே வருகிறது. தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான தமிழ் அரசியல் கைதிகள் சிறைச்சாலைகளில் இன்று சிறைவாசம் அனுபவித்து வருகின்றனர். சிலர் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன். பலர் மீது இன்னும் எந்தவித குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்படாத நிலையிலேயே அவர்கள் சிறைவாசம் அனுபவித்து வருகின்றனர். அவர்களில் ஒருவரான கொழும்பைச் சேர்ந்த முத்தையா சகாதேவன் சுகயீனமுற்ற நிலையில். கடந்த 22ஆம் தேதி சிறைச்சாலையிலேயே உயிரிழந்தார். சிறுநீரகப் பிரச்சினை காரணமாகக் கடந்த 20 தினங்களாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையிலேயே அவர் உயிரிழந்துள்ளதாக உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

கொழும்பு பொரளை. வனாத்துவில்லு சிறிசரஉயன வீட்டுத் தொகுதியை சேர்ந்த முத்தையா சகாதேவனுக்கு வயது 62 ஆகும். முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலை வழக்கில் 2005ம் ஆண்டு கைது செய்யப்பட்டிருந்தார். கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில். சிறுநீரகக் கோளாறு காரணமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்திருந்த அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். ஜூலை 5ம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகி அவருக்கெதிராகத் தொடரப்பட்ட லக்ஷ்மன் கதிர்காமர் கொலை வழக்கின் மரணவிசாரணையில் சாட்சியமளிக்கும்படி இவரை நீதிபதி உத்தரவிட்டுள்ள நிலையில் இவர் மரணம் சம்பவித்துள்ளது. இவர் மரணம் பெருந்துயரை ஏற்படுத்தியிருக்கிறது.

இலங்கையின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர். கொழும்பிலுள்ள அவரது வீட்டில் வைத்து 2005ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12ஆம் திகதி துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்திருந்தார். தமிழீழ விடுதலைப் புலிகள் இந்த கொலையை செய்ததாக அப்போதைய அரசாங்கம் குற்றஞ்சுமத்தியிருந்தது. இந்த கொலைச் சம்பவம் தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் முத்தையா சகாதேவன். பாதுகாப்பு பிரிவினரால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 2005ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டிருந்தார். லக்ஷ்மன் கதிர்காமரின் வீட்டிற்கு அயல் வீட்டில் பணியாற்றிய முத்தையா சகாதேவன். தான் பணிபுரிந்த வீட்டிலுள்ள மரமொன்றின் கிளையை வெட்டி. துப்பாக்கி சூட்டை நடத்துவதற்கு துப்பாக்கிதாரிக்கு உதவிகளை வழங்கியதாகவே அவர் மீது குற்றஞ்சுமத்தப்பட்டிருந்தது.

வேலி வெட்டும் வேலைக்குச் சென்றவர். லக்ஸ்மன் கதிர்காமர் கொலையில் 15 வருட சிறையில் இருந்து பலியான சம்பவத்தின் பின்னணித் தகவல்களை கவனித்தால். அந்த கொலை சம்பவத்திற்கும் இவருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை எனத் தெரியவரும்.

வேலியில் உள்ள மரங்களை வெட்ட சென்றவர். அந்த வேலி மரங்களை வெட்டியதால் இலகுவாக குறிவைத்து கதிர்காமர் கொல்லப்பட்டார். எனவே இவர் வேண்டுமென்றே திட்டமிட்டு மரத்தை வெட்டினார் என்றே சிறையில் வைத்து 15 வருடங்கள் கடந்து அங்கு மரணமாகி விட்டார்.

இத்தனைக்கும் அது அவரது வீட்டு வேலி அல்ல. கூலி வேலைக்கு சென்று வெட்டியதே அந்த மரங்கள். இப்படி. எத்தனை அப்பாவிகள் சிறையில்...

எனது கணவருக்கும் லக்ஷ்மன் கதிர்காமர் கொலைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. செய்யாத தவறுக்கு சிறையில் இருப்பதை நினைத்தே அவரது உடல்நிலை மோசமடைந்தது என தெரிவித்த. உயிரிழந்த அரசியல் கைதியான சகாதேவனின் மனைவி. விடுதலையாகுவேன் என்ற நம்பிக்கையில் இருந்தவர் இன்று விடுதலையாகாமலே எம்மை விட்டு சென்றுவிட்டார் என கதறுகிறார்

பதுளையைச் சேர்ந்தவர்கள். 1983 கலவரத்துக்குப் பின்னர்தான் கொழும்புக்கு வந்தோம். அப்படியே இங்கேயே இருந்து விட்டோம். எங்கள் வாழ்க்கை சந்தோசமாகத்தான் இருந்தது.

என்ன நடந்ததோ தெரியாது. எந்தக் குற்றமும் செய்யாத எனது கணவருக்கு இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.வீடு. தோட்டங்களைத் துப்பரவு செய்வதற்காக எனது கணவரை அழைப்பார்கள். அவ்வாறானதொரு வேலைக்குத்தான் அன்றும் அவர் சென்றிருந்தார். வீட்டு உரிமையாளர் பணித்த தோட்ட வேலையை செய்திருக்கிறார். தோட்டத்தைச் சுத்தம் செய்ததோடு மதில் சுவரோடு இருந்த மரக் கிளைகளையும் வெட்டியுள்ளார். அதுவே கைதுக்குக் காரணமாக அமையும் என்று அப்போது அவர் அறிந்திருக்கவில்லை.

அவர் துப்பரவு செய்த தோட்டத்தின் அடுத்த வீட்டில்தான் லக்ஷ்மன் கதிர்காமர் இருந்திருக்கிறார். அங்குவைத்துதான் அவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். அவர் கொலைசெய்யப்பட்டதோடு எனது கணவருக்கு தொடர்புள்ளது என கூறி 2005ஆம் ஆண்டு எனது கணவரைக் கைதுசெய்தார்கள். 2008ஆம் ஆண்டுதான் வழக்குப் பதிவுசெய்தார்கள்.

இன்றுவரை வழக்குக்குப் போய் வருகிறேன். எதிர்வரும் 27ஆம் திகதியும் வழக்கு இருக்கிறது. இருந்த நகைகளை விற்று. கடன்வாங்கித்தான் வழக்குக்குப் போய் வந்தேன். எப்படியும் நான் வெளியில் வந்துவிடுவேன் என்று அவர் அடிக்கடி கூறிக்கொண்டிருப்பார். இந்த வழக்கில் கைதுசெய்யப்பட்ட இன்னுமொருவர் 6 மாதங்களுக்கு முன்னர் விடுதலை செய்யப்பட்டார். எல்லோரும் விடுதலை செய்யப்படுகிறார்கள். எந்த குற்றமும் செய்யாத என்னை மட்டும் ஏன் சிறையில் வைத்திருக்கிறார்கள் என்று மனமுடைந்து காணப்பட்டார். 62 வயதான என் கணவருக்கு இரண்டு வருடங்களுக்கு முன்பே சிறுநீரகமொன்று செயலிழந்திருக்கிறது. அதன் பின்னரே அவர் மோசமாக நோய்வாய்ப்பட்டார்.



நீரிழிவு நோயும் இருந்ததால் அதற்கும் மருத்துவம் செய்துகொண்டுதான் இருந்தார். இறுதியில் மற்றைய சிறுநீரகமும் செயல்பாட்டை இழக்கத் தொடங்கியுள்ளது. இத்தனைக்கும் சிறைச்சாலை வைத்தியசாலையில்தான் சிகிச்சைப் பெற்றுவந்தார். இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்த நிலையில்தான் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் ஒரு மாதகாலமாகச் சிகிச்சை பெற்றுவந்தார். இந்த நிலையில் தான் அவர் எங்களை விட்டு சென்றுவிட்டார் என கண்ணீருடன் கூறினார்.

கைது செய்யப்பட்ட தனது தந்தை மீது 2008ஆம் ஆண்டே வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாகவும். அந்த வழக்கு விசாரணைகள் கடந்த 14 வருடங்களாக நடத்தப்பட்டு வருகின்ற நிலையிலேயே அவர் உயிரிழுந்ததாக அவரது மகள் பிபிசி தமிழுக்கு தெரிவித்தார். எந்தவித குற்றச்சாட்டுகளும் நிரூபிக்கப்படாத நிலையில். அவர் சிறைச்சாலையில் சீருடையின்றி. சாதாரண உடைகளை அணிந்த வண்ணமே இருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார். தனது தந்தையை விடுதலை செய்து கொள்வதற்கு அரசாங்க தரப்பினால் நியமிக்கப்பட்ட சட்டத்தரணி உரிய முறையில் முயற்சிகளை மேற்கொள்ளவில்லை எனவும் அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

முத்தையா சகாதேவன், இயற்கையாக உயிரிழந்துள்ளதாக மரண அத்தாட்சி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும். அவரை அரசாங்கம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கொலை செய்துள்ளதாக அரசியல் கைதிகளை விடுதலை செய்யும் தேசிய அமைப்பு குற்றஞ்சுமத்துகின்றது. இதனால். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்கள். தமது வாழ்க்கையில் நம்பிக்கையை இழக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவார்கள் என அந்த அமைப்பின் ஏற்பாட்டாளர் அருட்தந்தை சக்திவேல் பிபிசி தமிழுக்கு தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும் சந்தேகநபர்களை பிணையில் கூட விடுவிக்க முடியாத நிலையில் அந்த சட்டம் தயாரிக்கப்பட்டுள்ளமையினால், அந்த சட்டமானது மிகவும் பாரதூரமானது எனவும் அவர் குறிப்பிட்டார். அந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்கள், தம்மீதான நம்பிக்கையை இழந்து விரக்தியுற்ற நிலையில் உளரீதியான பாதிப்புக்களை எதிர்நோக்கி நோய்வாய்க்கு உட்பட்டு. உயிரிழக்கும் நிலைக்கு அரசாங்கம் அவர்களைத் தள்ளுகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டியது கட்டாயம் என சர்வதேச சமூகம் வலியுறுத்தி வருகின்ற பின்னணியில் கூட அதனை நீக்காது தொடர்ச்சியாக அந்த சட்டத்தை அமுல்படுத்தியுள்ள இலங்கை அரசாங்கம் ஒரு பயங்கரவாத அரசாங்கம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் உடனடியாக நீக்கப்பட்டு. தமிழ் அரசியல் கைதிகள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என அரசியல் கைதிகளை விடுதலை செய்யும் தேசிய அமைப்பின் ஏற்பாட்டாளர் அருட்தந்தை சக்திவேல் வலியுறுத்துகின்றார். இலங்கையில் தற்போது தமிழ் அரசியல் கைதிகள் 107 பேர் இருக்கின்றனர். ஒவ்வொரு வருடமும் இந்த அரசியல் கைதிகள். தமது விடுதலையை வலியுறுத்தியும். வழக்குகளை துரிதப்படுத்தக் கோரியும் போராட்டம் நடத்துகின்றனர். இவர்களின் போராட்ட வடிவங்களில் மாற்றம் இருக்கும். ஆனால். ஆண்டுதோறும் இவர்கள் போராட்டங்களை நடத்துகின்றனர்.

தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை தமிழ் தரப்பினரால் நீண்டகாலமாக முன்வைக்கப்படுகின்ற போதிலும். அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் அரசு ஆரம்பகட்ட முயற்சி எதனையும் எடுக்கவில்லை. கடந்த ஆண்டு அரசியல் கைதிகளின் விடுதலையைப் பற்றிப் பேசுவதற்காக விடுதலையானவர்கள் சம்மந்தனைச் சந்திக்க முற்பட்டவேளை அவர் அவர்களைஉதாசீனப்படுத்தியிருந்தார் என்ற குற்றச்சாட்டும் மக்கள் மத்தியில் உண்டு. அந்தச் செய்தியும் வீடியோக் காட்சியும் இணையத்தளங்களில் வைரலாகப் பரவிப் பெரும் பரபரப்பையும் உண்டாக்கியிருந்தன.

அதாவது தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் தமிழ் அரசியல்வாதிகளே நடவடிக்கை எடுக்காத நிலையிலும். அவர்களைக் கண்டுகொள்ளாத நிலையிலும் அவர்கள் அரசிடம் எப்படி நம்பிக்கை வைக்க முடியும் என்று அரசியல் கைதிகளின் உறவினர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

கண்டி சிறைச்சாலையில் 11 தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். அவர்களில் ஒருவர் கிளிநொச்சியைச் சேர்ந்தவர். மற்றுமொருவர் முல்லைத்தீவைச் சேர்ந்தவர். ஏனையோர் மலையகத்தின் பல பகுதிகளையும் சேர்ந்தவர்களாவர். நடுத்தர வயதுடைய இந்தக் கைதிகள் தங்களைப் பார்வையிடுவதற்கும் தங்களுடைய நிலைமைகளைக் கேட்பதற்கும் அரசியல்வாதிகளோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்களோ வருவதில்லை எனக் கவலை தெரிவிக்கின்றார்கள். ஆயுள் தண்டனை வழங்கப்பட்ட கிளிநொச்சியைச் சேர்ந்த அரசியல் கைதி சச்சியானந்தம் ஆனந்த சுதாகரனை உடனடியாகவே பொதுமன்னிப்பு அளித்து நிபந்தனையின்றி விடுதலை செய்யவேண்டிக் கையெழுத்துப் போராட்டம் மேற்கொண்டும் அது. பலனளிக்கவில்லை.

ஆனந்த சுதாகரனின் இரு பிள்ளைகள் சார்பாகப் பாடசாலை ஆசிரியர்கள தொட்டு மாணவர்கள் வரை கையெழுத்திட்டு ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்துக்கு இதுவரை பதில் கிடைக்கவில்லை. ஆனந்த சுதாகரன் மகசீன் சிறையில் நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டு நீதிமன்றின் ஊடாக அவருக்கு 97 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் கண்டுகொள்ளாத அரசு நாட்டுக்கு தீங்கினை விளைத்தவர்களைப் பொது மன்னிப்பு என்று கூறி விடுதலை செய்து வருகிறது.

குற்றங்கள் நிரூபிக்கப்படாத நிலையில் தொடர்ந்தும் அரசியல் கைதிகள் சிறையில் இருக்கின்றனர் என்றால் இது போன்ற விடயங்களைத் தட்டிக் கேட்கக் கூடிய முறையான ஆளுமைகொண்ட தலைமை தமிழர் மத்தியில் இல்லை என்ற குறைபாட்டையே முக்கிய காரணமாகச் சொல்லலாம். எமது இனத்தைச் சரியாக வழி நடத்தக் கூடியதொரு தலைமையைத் தேடுவதே தமிழராகிய எமது தற்காலத் தேவையாகும்.



# வைரமுத்து வாத்தியார் பேசுகிறார்

கள்ளம் கபடமற்றதாகப் பேச்சு இருக்க வேண்டும். வெளிப்படையான அரசியல் நல்லது. பொதுவாக எந்த அரசியல் வாதியும் தன்னுடை மக்களுக்கு ஒரு போதும் உண்மை சொல்வதில்லை. கேட்டால் அது இராஜதந்திர அணுகுமுறை என்கின்றனர். இலங்கையில் எல்லோரும் இப்படியான அரசியலைத்தான் செய்கிறார்கள். மும் மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றவர்கள் மொழிக்கு மொழி வேறு வேறு விதமாகப் பேசக் கற்றுக் கொண்டிருக்கின்றனர் என்பது ஒரு அபாயமான சங்கதி.

இதில் மிகவும் பாண்டித்தியம் பெற்றவர்கள் முஸ்லிம் அரசியல்வாதிகள். அவர்கள் என்ன செய்வார்கள் என்றால், சிங்களம் பேசுகின்ற முஸ்லிம்களுக்கு ஒன்றைச் சொல்லுவார்கள். அதையே கிழக்கு மாகாணத்தவர்களுக்கு மாற்றிச் சொல்லுவார்கள். அதையே ஆங்கிலத்தில் பிற நாட்டு இராஜதந்திரிகளுக்குச் சொல்லும் போது அனுதாபத்தைத் தேடுவதற்காக எமது வீடுகளில் தோசை சுடுவதைப்போல பக்கம் மாற்றி மாற்றிப் போடுவார்கள்.

இதில் எமது அரசியல்வாதிகளும் சளைத்தவர்கள் அல்ல. ஆனால் பாவம் எமது அரசியல்வாதிகள் பலருக்கு தமிழ் மட்டும்தான் தெரியும். சிலருக்குத் தமிழும் ஆங்கிலமும் தெரியும். விரல்விட்டு எண்ணக் கூடியவர்களுக்கு மட்டுந்தான் மூன்று மொழிகளும் தெரியும். அந்த மூன்று மொழிப் புலமை கொண்ட அரசியல் வாதியும் முஸ்லிம் அரசியல்வாதிகளைப் போல பிரட்டிப் பிரட்டிக் கதைப்பதில் வல்லவர். அவரைப் பார்த்தால் அவரை ஒரு 'சம்பந்தர்புல்லா' என்றும் சொல்லலாம் . இதுவும் எமக்குப் பிடித்த சாபக்கேடு என்று தான் இந்த வயிரமுத்து நம்புகிறேன்.

நான் ஒரு உபாத்தியாயர். பல புராண இதிகாசங்களைப் படித்திருக்கிறேன். அதிலே பல கதைகள் உண்டு. ஒவ்வொரு கதையிலும் ஒரு உப கதை இருக்கும். அதுவும் இராஜாக்கள் சம்பந்தப்பட்ட கதைகள் என்றால் அதில் ஒரு கோமாளி இருப்பான். ஒரு கோமுட்டி இருப்பான். ஒரு காட்டிக் கொடுத்தவன் இருப்பான். சகலதையும் விட்டு விட்டு மக்கள் பணத்தைச் செலவு செய்து வாழ்ந்து மடிந்தவன் இருப்பான். மக்களை ஏமாற்றிப் பிழைத்தவன் இருப்பான். எனவே இது சாபக்கேட்டைப் போல வம்சம் வம்சமாகத் தொடர்கிறது. வேதனைதான் மக்களே.

ஏமாற்றுகிறோம் என்று தெரிந்து கொண்டும் ஏமாற்றுகிறார்கள்.அது இரத்தத்தூடு கலந்துவிட்ட விடயம் போல் தெரிகிறது. ஏனெனில் மக்களும் அப்படித்தான். கூடாது என்று தெரிந்து கொண்டும் அதை மாற்றமுடியாத பழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். பாருங்கள், கடைகளிலே விற்கும் மென் பானங்கள் நீரிழிவை ஏற்படுத்தும். அது உடலுக்கு உதவாத பல செயற்கை முறையான வேதிப் பொருட்களை... கொண்டு தயாரிக்கிறார்கள். எனவே உபயோகிக்க வேண்டாம் என்று கைவிரல்கள் நோக நோக எழுதி விட்டோம். யாராவது கேட்கிறார்களா?

காலை எழுந்தவுடன் படிப்பு. பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு மாலை முழுதும் விளையாட்டு... என்று வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா." என்று தான் பாரதி பாடிவிட்டிருக்கிறான். ஆனால் காலை எழுந்தவுடன் ஏதோ ரிப்பி ரிப்பியாம். உடலுக்கு உதவாததென்று வைத்தியர் சொன்னார். அதையே கையில் எடுத்துத் தின்றபடி எழுந்துவரும் குழந்தைகளைப் பார்த்திருக்கிறோம். பெற்றோர்களும் தங்களுக்குத் தலை இடி வேண்டாம் என்ற வாறு அவர்களை அதற்கு ஊக்குவிக்கின்ற பழக்கம் நடை பெறுவது இங்கிலாந்தில் அல்ல. எமது மண்ணில்தான்.

அன்று தேநீர் அருந்தவென ஒரு தேநீர் கடைக்குப் போயிருந்தேன். அங்கே ஒரு இளைஞன் உணவருந்திக் கொண்டிருந்தான். உணவைக் குளைத்து ஒரு பிடி எடுத்து வைப்பதுவும் , மறு கையால் மென்பானம் ஒன்றை எடுத்துக் குடிப்பதுவுமாக இருப்பதைக் கண்டேன். என்ன அபத்தமான காரியத்தை அவன் செய்கிறான்? தன்னைச் சிறுகச் சிறுக அழிக்கின்றவனாக அல்லவா அவன் இருக்கிறான். பாவம் அவனை எண்ணி வேதனைப்படுவதா? சிரிப்பதா? என்று தெரியவில்லை. மேற்கத்தைய பாணியைக் கற்றுக் கொண்ட ஒரு கோமாளியாகவே அவன் எனக்குத் தெரிந்தான். அதில் என்ன வேடிக்கை என்றால், அதனை அந்தந்த மென்பானம் விக்கின்ற கம்பெனிகளும் அப்படியே ஊக்குவிக்கின்றன.

எல்லாம் வியாபாரமாகப் போய்விட்டது. நான் கல்வியைச் சேவையாகத்தான் செய்தேன். இன்றுவரை கல்வியைச் சேவையாகத்தான் செய்து வருகிறேன். ஆனால் அது வியாபாரமாகிவிட்டதைக் கண்ணூடாகப் பார்க்கிறேன். இது எனக்கு வேதனை அல்லவா! மக்களும் அதனை ஊக்குவிக்குமாறு நடந்து கொள்ளுகிறார்கள். மணிக் கணக்காகக் கல்வி நிறுவனங்களுக்கு முன்னால் தமது பிள்ளைகளின் வரவுக்காகக் காத்திருக்கிறார்கள். கல்வியை வியாபாரமாக்கிக் கொண்டு பணத்தைக் கொள்ளையிடும் கயவர்கள் கூடத் தாம் எதிர்வினை ஆற்றவதாக எண்ணுவதில்லை. ஏன்,என்று தெரியவில்லை?

அழுக்குக்கு அழுக்கு நல்லதாகத்தான் தெரியுமாம். எனவே மக்களும் அழுக்காகிப் போய்விடுவதால் அவர்கள் கண்களுக்கு அழுக்குள்ள அரசியல்வாதியும் நல்லவனாகத்தான் தோற்றம் பெறுகிறானோ தெரியவில்லை. மக்களும் விழிப்புணர்வை பெற்றவர்களாக மாற வேண்டும். அதனூடாக மன்னரையும் திருத்த வேண்டும் என்பது போல நடைமுறைகள் அமைய வேண்டும். மக்கள் எண்ணினால் தாங்களும் மர்றலாம். தம்மை ஏமாற்றுபவர்களையும் மாற்றலாம். இந்த உலகத்தை அழிவிலிருந்து காப்பாற்று என இறையைத்தான் வேண்ட முடியும்.



# மாற்றத்தின் முன்மாதிரிகளா நீங்கள்?

வராத நலிவுகள் பற்றி கற்பனை செய்வதைக் காட்டிலும், நேரில் நம்மை வாட்டும் நலிவுகளைத் தாங்கிக் கொள்ளப் போதுமான மன உறுதி நம் அனைவருக்கும் உள்ளது என்பர் லா ரோஷ்ஃபுக்சோ என்ற அறிஞர்.

எமது வாழ்வில் ஏற்பட்ட பல சவால்களுக்கு நாமே விடைதேடி வெற்றி கொண்ட சம்பவங்களை மீட்டுப்பாருங்கள். இன்றைய இருப்புக்கு யாரும் காரணமல்ல. எமது முயற்சியில் ஏற்பட்ட விளைவுகளே விடையாக இருக்கும் வெற்றிக்கும் தோல்விக்கும் உங்கள் நேர்சிந்தனைக் கொண்ட முயற்சியே காரணமாகும்.

உங்களுக்கு மட்டும் தான் சவால்கள் ஏற்படவில்லை. ஒவ்வொருவரது முனங்கலும் பிறரோடு ஒப்பிட்டு தன்னைத் தாழ்த்தி நினைப்பதால் தான் எமது மதிப்பீட்டின் உயர்வை காண முடியாது திண்டாடக் காரணமாகிறது.

'மனிதர் அனைவரையும் உற்று நோக்கு; தப்பில்லை. ஆனால் எல்லோருக்கும் மேலாக, உன்னை நீயே உற்றுநோக்கு! என்பார் பெஞ்சமின் பிராங்கிளின் என்ற பேரறிஞன்.

மனதில் நேர் சிந்தனைகளைத் தினமும் மீட்டுகொள்ளும் ஒருவர் பிறரது நல்ல பண்புகளையும் மதிக்க முன்வருவான். இன்றைய சமூக உறவுகள் மட்டில் பிறரது நல்ல, தீய பண்புகளை குறிப்பிட முனையும் தகுதி தன்னைப் பற்றிய மதிப்பீட்டினை செய்ய முயலாததால் பிறர்மீது காழ்ப்புணர்வு ஏற்படுகிறது.

'மாற்றான் தோட்டத்து மல்லிகையிலும் வாசம் உண்டு' என கூறிய அறிஞர் அண்ணாவின் கூற்று பிறர் மீது உள்ள நல்ல செயல்களை ஏற்கும் மனப்பக்குவத்தையே தூண்ட வல்லது. பகையாளி, எதிரி, மாற்றான் என்ற மன உணர்வுடன் ஒருவரை அணுகும் மனநிலையில் எல்லாம் தவறாக, எதிர்மறையான சிந்தனைகளையே முன்சார்பு தீர்வாக பார்க்கத்தோன்றுவதால் தான் பகைமை உணர்வு எமது சிந்தனைகளை குளப்பி தவறுகளே எமது பார்வைக்கு மிகையாக தெரிகிறது.

பரீட்சையை எதிர்கொள்ளும் மாணவர் தன்னை தயார்ப்படுத்தும் போதே தோற்றுவிடுவேன் என்ற மன உணர்வோடு முயன்றால் முன்னேற்றம் அடையமுடியாது. இன்றைய மாணவர்களைக் கற்பிக்கும் ஆசான்களும் இவர்கள் முன்னேற மாட்டார்கள் என்ற முன்சார்புத் தீர்மானத்துடன் கறபித்தால் விடைகளும் தவறாகவே அமைந்துவிடும். தனது பொறுப்பு ஒன்றும் தெரியாதவர்களாக இருந்தாலும் தன்னிடம் உள்ள திறமையை இம்மாணவர் மூலம் வெளிப்படுத்துவேன் என்ற நேர்சிந்தனையில் ஈடுபட்ட ஆசான்களால் பல மாணவர்கள் முன்னேறியதை சுட்டிச் சொல்லவும் முடியும். இதனை முயலும் போது ஏற்படும் சவால்களை வெல்லதே சாதனைக்கு வழியாகும்.

எமது குடும்பம் பிள்ளைகளில் எதிர் பார்க்கும் நேர்சிந்தனையான முயற்சிகள், எம் சமூக பொறுப்புடன் முயலும் பணிகளிலும் நமது நேரம், காலம், அர்ப்பணத்துக்கான அறுவடையாக சுட்டிக்காட்டமுடியும். இன்று நாம் உயர்வாக சொல்லும் பெரும் தலைவர்கள், வழிகாட்டிகள் சவால்களை வென்றுதான் சாதனை படைத்தார்கள் என்ற சரித்திரம் எல்லோருக்கும் சிறந்த வழிகாட்டல் பாடமாகும்.

ஓட்டப்போட்டிக்கு முன்வந்த ஒருவர் தான் முதலிடத்தை அடைய மாட்டேன் என எண்ணினால் அதன் இறுதி முடிவும் சறுக்கலாகவே அமைந்துவிடும்.

பலவித முயற்சியுடன் விவசாயி முயலும் போது அவரது நம்பிக்கை நிறைந்த முயற்சி தூரநோக்காக நேர் சிந்தனையுடன் தன் அடைவைக் காணும்போது ஏற்படும் முயற்சிக்கு நிகரில்லை.

பல முதல்போட்ட முதலாளிகளது எதிர்நோக்கு தவறானால் அறுவடை கடனாளியாக வியாபார நிலையம் மூடு விழாவையே எதிர்கொள்ளும். இவைகளே போதைக்கும், தற்கொலைகளுக்கும் கரணமாகிறது.

இளையோர் தமது ஆற்றல், திறன்களை சுய ஆய்வுடன், நேர் சிந்தனையுடன் தூர நோக்கை நோக்கியதாகப் பயணம் செய்யும் போது அவர்களுக்கு ஏற்படும் சவால்களை வெல்லும் மன பக்குவம் அனுபவத்தின் ஊடாகக் கற்றுக்கொண்ட பாடங்களும் உயர்வானதோர் விந்தை கொண்டவர்களுக்கு தோல்விகளை வெற்றியின் முதற்படியாக வெல்லும் போது ஏற்படும் மகிழ்ச்சிக்கு நிகர் ஏதுமில்லை.

கோழைகளே தாழ்வுச்சிக்கலாகி தவறான வழிக்கு காரணமாகிறார்கள். இவர்களின் எதிர்காலம் சமூக சீர்கேட்டின் கதாநாயகர்களாகக் குறுக்கு வழியில் சிந்தனைகளை செயற்படுத்த முனைவர். இவர்களின் செயல்களை ஊக்கப்படுத்தும் போதைப்பொருள் விற்பனை முகவர்களுக்கு இவர்களே அடிமையாகி, கூலிப்படையாக, தூர நோக்கற்ற சமூக விரோதிகளாக மாறிவிடுவதால் சுயசிந்தனை அற்ற போலி வாழ்வுக்குள் தம்மை அழித்து விடுவார்கள்.

'தன்னை அறி' என்ற கோட்பாடு மனிதரின் பெருமையை தவிர்ப்பதற்காக மட்டுமே வகுக்கப்பட்டதல்ல. நம் சொந்த மதிப்பை நாம் உணர்ந்து கொள்வதற்காகவும் தான் வகுக்கப்பட்டது என்ற ஸிஸ் ரோவின் கூற்று. ஒவ்வொருவர் வாழ்வின் உணர்ச்சிக்கும் மதிப்பைத் தூண்டும் கருத்தாகும்.

**யோசப் பாலா**
உளசமூக சீராளன்.

பிறைவாணன்



# வெடிப்பின் இடுக்குகளில்...

## குண்டுத் தாக்குதல்களும் பாதிக்கப்பட்ட சிறார்களும்

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் படுகாயமடைந்த சிறுவன் ஒருவன் பாடசாலைக்கு வந்த போது அங்கே பாடசாலையில் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. அவனது சக மாணவர்கள் தொடக்கம் ஆசிரியர்கள் வரை அவனை வரவேற்று பரிசுப் பொருள்கள் வழங்கி அவனை சந்தோஷப்படுத்தியதைப் பார்க்கும் போது 'தயவு செய்து இந்த நாட்டில் சிறுவர்கள் உள்ள இடத்தில் குண்டுகளை வெடிக்க வைக்காதீர்கள்" என்று மன்றாட்டமாகக் கேட்க வேண்டும் போலத் தோன்றுகிறது.

அவனின் உடல் உறுப்புகள் அனைத்தும் காயமடைந்திருந்தும் அவன் உயிர்பிழைத் துள்ளான். அவன் பெயர் ஷனோன். கொழும்பு கத்தோலிக்க தனியார் பாடசாலையில் 6ம் தரத்தில் கல்வி பயிலுகின்ற இவன் பல நாட்கள் கழித்துக் கடந்த வாரம் பாடசாலைக்கு வந்துள்ளான்.

அந்தப் பயங்கரவாதத் தாக்குதல் நடை பெற்று 2 மாதங்கள் கடந்தும் அந்தத் தாக் குதல்களில் எத்தனை சிறுவர்கள் உயிரிழந் தார்கள்? எத்தனை சிறுவர்கள் காயமடைந் துள்ளார்கள்? எத்தனை சிறுவர்கள் உளவி யல் ரீதியிலான பாதிப்பை எதிர்கொண்டனர்? என்ற விபரங்களைத் திரட்ட முடியாமல் சம்பந்தப்பட்ட தரப்பினர் இருக்கின்றனர்.

இலங்கையில் சிறார்கள் தொடர்பிலான தகவல்களைத் திரட்டும் பொறுப்பு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையிடம் உள்ளது. இந்தத் தாக்குதல் சம்பவம் நடைபெற்றுச் சுமார் 56 நாட்கள் கடந்துள்ள போதிலும், உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்ட சிறார்களின் முழுமையான தகவல்கள் இதுவரை அவர்களால் உரிய முறை யில் திரட்டப்படவுமில்லை வெளியிடப்பட வுமில்லை.

உலக நாடுகள் சிறுவர்களுக்கான பாதுகாப்புக்கு முக்கியத்துவம் அளித்துவரும் நிலையில், சிறுவர்கள் பாதுகாப்புத் தொடர்பில் இலங்கை அரசு மெத்தனப் போக்கைக் கடைப்பிடிப்பது தெரிகிறது. சிறுவர்கள் விடயத்தலேயே இந்த நிலைமை என்றால், பொதுமக்களின் பாதுகாப்புக்குறித்த விடயங்களில் இலங்கை எப்படி நடந்து கொள்ளும்? என்பது கேள்விக்குறியே.

இந்தப் பயங்கரவாதத் தாக்குதலில் நூற்றுக்கும் அதிகமான சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த சம்பவத்தில் பெருமளவிலான சிறார்களும் பாதிக்கப்பட் டதாக அரசாங்கம் ஏற்கனவே தெரிவித்திருந் தது. அத்துடன் 257 பேர் உயிரிழந்திருந்த துடன், 500ற்கும் அதிகமானோர் காய மடைந்திருந்தனர். தாக்குதல் நடத்தப்பட்ட நீர்கொழும்பு - கட்டுவாபிட்டிய தேவால யத்தில் உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்ட சிறார்களின் தகவல்கள் மாத்திரமே இதுவரை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் திரட்டப்பட்டுள்ளது. கட்டுவாபிட்டிய தேவாலயத்தில் 23 சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர்.

அவர்களில் 18 சிறுமிகளும், 5 சிறுவர்களும் அடங்குவதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவிக்கின்றது.

இந்த தாக்குதல் சம்பவத்தில் ஒரு சிறுமி காணாமல் போயுள்ளதாக புகார் ஒன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது. சம்பவத்தில் 61 சிறார்கள் காயமடைந் துள்ளனர். கட்டுவாபிட்டிய தாக்குதல் சம்பவத்தில் 19 சிறார்கள் தாய்மாரை இழந்துள்ளதுடன், 4 சிறார்கள் தந்தை யரை இழந்துள்ளனர். இவர்களில் 30 சிறார்களுக்கு சிறு அளவிலான காயங்களும், 31 சிறார்களுக்கு கடும் காயங்களும் ஏற்பட்டுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அத்துடன், பெற்றாரை இழந்த 3 சிறார்கள் கட்டுவாபிட்டிய பகுதியில் உள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 3 சிறார்களுக்கு சட்டத்தின் பிரகாரமான பாதுகாவளர் ஒருவர் அவசியமாக காணப்படுவதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

42 குடும்பங்களைச் சேர்ந்த 78 சிறார்களுக்கு மனநல ஆலோசனைகளை வழங்கும் தேவை காணப்படுவதாக அதிகார சபை குறிப்பிடுகின்றது. மேலும், 16 சிறார்க ளுக்கு கல்விக்கு உதவிகளை வழங்கும் தேவை காணப்படுவதுடன், மூன்று குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு வாழ்வாதார தேவையும் அத்தியாவசியம் என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சுட்டிக்காட்டுகின்றது. இந்நிலையில் ஏனைய பகுதிகளில் பாதிக்கப்பட்ட மற்றும் உயிரிழந்த சிறார்களின் தகவல்கள் ஏன் திரட்டப்படவில்லை என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தினால், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைச் சட்டம் 1998ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13ஆம் திகதி வர்த்தமானி ஊடாக வெளியிடப்பட்டது.

சிறுவர்களின் பாதுகாப்பு, சிறுவர்களை துஷ்பிரயோகங்களிலிருந்து பாதுகாத்தல், துஷ்பிரயோகத்திற்கு உட்பட்ட சிறார்களுக் கான சிகிச்சை உள்ளிட்ட சிறார்களின் உரிமை களை பாதுகாக்கும் வகையில் இந்த சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, இலங்கையில் சிறார்களுக்கான சட்டம் வலுவாக உள்ள நிலையில், பயங்கர வாதத் தாக்குதல் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மற்றும் உயிரிழந்த சிறார்கள் தொடர்பான தகவல்களை திரட்டுவதில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை ஏன் தாமதமாக செயற்படுகின்றது என பிபிசி தமிழ் ஆராய்ந்தது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் முக்கிய அதிகாரியொருவருடன் இந்த விடயம் தொடர்பில் பேசியதாவது.

குறிப்பாக தேசிய பாதுகாப்பு அதிகார சபைக்கு பல சட்டத்தின் பிரகாரம் பொறுப்புக் கள் காணப்படுகின்ற போதிலும், பயங்கர வாதத் தாக்குதல் சம்பவத்தின் போது பாதிக்கப்பட்ட மற்றும் உயிரிழந்த சிறார்க ளின் தகவல்களைத் திரட்டுவதற்கு முடியாத நிலைமை காணப்படுவதாகத் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தாக்குதலில் பாதிக்கப்படும் அல்லது உயிரிழக்கும்





சிறார்களின் தகவல்களை திரட்ட முடி யாமைக்கான காரணம், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் சட்டத்தின் ஒரு சரத்தில் மாத்திரமே வன்முறைகள் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வன்முறைகள் தொடர்பில் சட்டத்திலுள்ள சரத்தின்படி 'ஆயுதப் போராட்டத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர் தொடர்பில் மனிதாபி மான நடவடிக்கைகள் எடுப்பதற்கும், அத்த கைய பிள்ளைகளின் மன மற்றும் உடல் ரீதியான நலன் உட்பட அவர்களின் பாது காப்பு மற்றும் அவர்கள் மீண்டும் சமுதாய நீரோட்டத்தில் ஒன்றிணைதல் ஆகியவற்றுக் கான நடவடிக்கைகளை விதந்துரைத்தல்"

1998ஆம் ஆண்டு 50ஆம் இலக்க, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைச் சட்டத்தில் இந்த விடயம் மாத்திரமே குறிப்பிடப் பட்டுள்ளது. ஆயுதப் போராட்டம் என்றால், இரண்டு தரப்புக்கு இடையில் இடம்பெறும் மோதல் என்ற பொருளை வழங்குவதாக அதிகார சபையின் முக்கிய அதிகாரியொரு வர் சுட்டிக்காட்டினார். ஆனால் கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதல், இரு தரப்புக்கான மோதல் கிடையாது என கூறிய அவர், அது ஒரு தரப்பு மாத்திரம் தலையீடு செய்து, தாக்குதல் நடத்தியதாகவே கருதப்படுகின்றது எனவும் சுட்டிக்காட்டினார்.

இந்த சட்டத்தில் காணப்படுகின்ற சரத்துக்களின் பிரகாரம், பயங்கரவாதத் தாக்குதல் சம்பவத்தின் போது உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்ட சிறார்கள் தொடர்பான தகவல்களை திரட்டுவதில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை பாரிய பிரச்சினை களை முகம் கொடுத்து வருவதாகவும் அவர் கூறினார். இந்த நிலையில், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் சட்டம் உருவாக்கப்பட்டு, 20 வருடங்கள் கடந்துள்ள நிலையில், தற்போதைய நிலைமைக்கு ஏற்ற வகையில் அதனை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

இலங்கையிலுள்ள சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைச் சட்டத்திற்குள் முக்கிய மூன்று விடயங்கள் தற்போதைய நிலைமைக்கு உள்வாங்கப்பட வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

01.இயற்கை அனர்த்தங்களின் போது உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்ட சிறார்களின் தகவல்களை திரட்டுதல் மற்றும் உதவிகளை வழங்குதல்.

02.பயங்கரவாதத் தாக்குதலின் போது உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்ட சிறார்களின் தகவல்களை திரட்டுதல் மற்றும் உதவிகளை வழங்குதல்.

03.இணையத்தின் மூலம் துஷ்பிர யோகங்களுக்கு உட்படுத்தப்படுகின்ற சிறுவர்களை பாதுகாக்கும் வகையிலும், பாதிக்கப்பட்ட சிறார்களின் தகவல்களை திரட்டுதல் மற்றும் உதவிகளை வழங்கும் வகையில் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் பிபிசி தமிழ், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி எச்.எம். அபயரத்னவிடம் வினவியது. தாக்குதல் சம்பவத்தின் போது பாதிக்கப்பட்ட மற்றும் உயிரிழந்த சிறார்களின் தகவல்களை தாம் தொடர்ச்சியாக திரட்டி வருவதாக அவர் குறிப்பிட்டார். எதிர்வரும் சில வாரங்களுக்குள் தாம் அந்த தகவல்களை திரட்டி ஊடகங்களுக்கு வெளியிட நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

சட்டத்தின் சரத்துக்களினால் தமக்கு பெரியளவில் பாதிப்புக்கள் கிடையாது என கூறிய அவர், தமது அதிகாரிகளின் குறைப்பாடுகளுமே இந்த தகவல்களை திரட்டுவதில் ஏற்பட்ட தாமதத்திற்கான காரணம் எனவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி எச்.எம்.அபயரத்ன குறிப்பிட்டார்.

# தொடர்ச்சியாக வஞ்சிக்கப்படும் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள்



செ.தி. பெருமாள், மஸ்கெலியா

அரசதுறை முகாமைத்துவத்தின் கீழ் வரும் தோட்டங்கள் தொடர்ச்சியாகவே தொழிலாளர்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. குறிப்பாகத் தொழிலாளர்களுக்குச் சட்டரீதியாகக் கிடைக்க வேண்டிய உரிமைகள் மறுக்கப்படுவது, ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி, சேவைக்கால பணம் போன்ற கொடுப்பனவு வழங்குவதில் அசிரத்தை என்று ஏகப்பட்ட புகார்கள் எழுந்துள்ளன.

பிரித்தானியருக்குச் சொந்தமான தோட்டங்களும் 1972 -1975 வரையிலான காலப் பகுதிக்குள் அரசுடைமையாக்கப்பட்டன. 1992 வரையில் அரச நிர்வாகத்தின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வந்த இந்தப்பெருந்தோட்டங்கள், 22 பிராந்திய கம்பனிகள் வசம் கைமாற்றப்பட்டன. இவ்வாறு கையளிக்கப்பட்ட தோட்டங்களின் எண்ணிக்கை 449. அதே வேளை வருமானத்தை ஈட்டிக் கொண்டிருந்த 30தோட்டங்கள் தொடர்ந்தும் அரச நிறுவனங்களான அரசப் பெருந்தோட்டயாக்கம், மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை, பின்னால் எல்கடுவ பிளான்டேஷன் என்பவற்றின் பொறுப்பில் வந்தன.

இவ்வாறு அரசின் நேரடி முகாமைத்துவத்தின் கீழ் பராமரிக்கப்படும் தோட்டங்களின் தொழிலாளர் நலனைப் பாதிக்கும் செயற்பாடுகள் பற்றி நீட்சியாக விமர்சனங்கள் எழுப்பப்பட்டே வருகின்றன. தனியார் கம்பனிகளின் நிர்வாகத்துக்குட்பட்ட தோட்டங்களின் நிலைமையும், அரச துறை சார்ந்த தோட்டங்களின் நிலைமையும் வேறுபட்டே காணப்படுகின்றன. குறிப்பாக அரச முகாமைத்துவத்தின் கீழ் வரும் தோட்டங்களில் தொழிலாளர் நலன் சம்பந்தப்பட்ட பல்வேறு பிரச்சினைகள் தலைதூக்கியுள்ளன.

இத்தோட்டக் காணிகளே அதிகமாக அரசாங்கத்தால் கையகப்படுத்தப்பட்டு வருகின்றன. கிராமத்தவர்களுக்கு காணிப் பகிர்வு, நெடுஞ்சாலை விஸ்தரிப்பு, அரச கட்டட நிர்மாணங்கள், இராணுவ முகாம்கள், விவசாயத் தேவைகள் என வகைதொகையின்றி சுவீகரம் செய்யப்பட வழிவகித்துள்ளது.

இத்தோட்டங்கள் நட்டத்தில் இயங்குவதாகக் காரணம் காட்டி வெளியாருக்கு விற்கும் நடவடிக்கைகளும் இடம்பெற்று வருகின்றன. காணித் துண்டாடல்களாலும் தனியாருக்கு தாரைவார்ப்புகள் இடம்பெறுவதாலும் தொழிலாளர் வெளியேற்றமும் இடம்பெறவே செய்கின்றன. நாவலப்பிட்டி போவில தோட்டத்தைச் சேர்ந்த மக்கள் இவ்வாறு வெளியேறப் பணிக்கப்பட்டதும் ஜனாதிபதி தலையீட்டின் பேரில் தற்காலிகமாக அந்நடவடிக்கை கைவிடப்பட்டிருப்பதும் இங்கு கவனத்திற்குரியது.

இத்துடன் இந்த அரசதுறை முகாமைத்துவத்தின் கீழ் வரும் தோட்டங்களைச் சார்ந்த தொழிலாளர்களுக்குச் சட்டபூர்வமாகக் கிட்ட வேண்டிய பல உரிமைகளும் மறுக்கப்பட்டே வருகின்றன. குறிப்பாக சுமார் 7000-10,000 வரையிலான தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதியம், சேவைக்கால பணம் போன்ற கொடுப்பனவும் வழங்கப்படாமையானது பாரிய பிரச்சினையாக இனங்காணப்பட்டுள்ளது.

இவ்வாறான கொடுப்பனவுகளே இம்மக்களின் இறுதிக்கால செலவினைச் சமாளிக்க எஞ்சியுள்ள சேமிப்பாகும்.



அந்த வகையில் இக்கொடுப்பனவுகளைச் செலுத்தாமல் நழுவிக் கொள்வது இம்மக்களின் சமூகப் பாதுகாப்புடன் கூடிய வாழ்வாதாரத்தை மறுப்பதாகவே அமையும்.

இவ்வாறான நிலைமைக்கு இன்று முகம் கொடுக்கும் தொழிலாளர்களுக்கான கொடுப்பனவு தொகை 1800 மில்லியனாக கணக்கிடப்பட்டுள்ளது. இது 2013 இற்கான கணிப்பு. அரச நேரடி முகாமைத்துவத்தின் கீழ்வரும் தோட்டங்களில் பணியாற்றும் தோட்டச் சேவையாளர்களுக்கான கொடுப்பனவுகளும் இதில் அடங்கும். மேற்படி தோட்டங்கள் அதிகமாகக் கண்டி, மாத்தளை மாவட்டங்களிடையே அமைந்துள்ளன. கடந்த 10 ஆண்டுகளாகவே தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்திலிருந்து மாதா மாதம் அறவிடப்பட்ட மேற்படி கொடுப்பனவு முறைப்படி மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றில் இடப்படாதது கண்டறியப்பட்டுள்ளது. இதேநேரம் ஓய்வு பெறும் தொழிலாளர்கள் இக்காலக்கட்டத்தில் சேவைக்கால பணம் பெற முடியாது அவதிப்படுகின்றனர்.

இது அவர்களின் உரிமையை மீறும் செயல் மட்டுமன்றி, சட்ட ரீதியான பெறக் கூடிய வாய்ப்பையும் மறுக்கும் விடயமாகவே காணப்படுகின்றன. துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம் அன்று ஆட்சியில் இருந்தவர்களால் பெருமையாகப் பேசப்பட்டது. ஆனால் அதன் காரணமாக மலையக சமூகம் எதிர்கொண்ட சங்கடங்கள் குறித்து எவருமே எண்ணிப்பார்க்கவில்லை.

இந்த துரித மகாவலி திட்டத்தால் கண்டி மாவட்டத்திலுள்ள பல தோட்டங்கள் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகின. பல மூடு - விழா கண்டன. சிங்களக் கிராமத்தவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன. குறிப்பாக கண்டிப் பகுதிகளிலேயே பெருமளவிலான தேயிலை தோட்டங்கள் இவ்வாறு சுவீகரம் செய்யப்பட்டன.

இவ்வாறு பிரச்சினைகளை சம்பந்தப்பட்ட தரப்புகளின் கவனத்தில் கொண்டு வந்திருந்த போதும் பலன் ஏதும் கிடைக்கவில்லை. எனவே இது சம்பந்தமான முறைப்பாடு ஒன்று இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் அவதானத்திற்கு உட்படுத்தப்பட்டது. அதன் பேரில் விசாரணை இடம்பெற்றது.

மேற்படி ஆணைக்குழுவின் கொழும்பிலுள்ள தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்ற விசாரணையின் போது தொழிலாளர் ஒத்துழைப்பு சங்கம் சார்பாக அதன் தேசிய அமைப்பாளர் ஆர்.நடராஜா, தொழில் உறவு அதிகாரி ஏஸ்.ஜெயபால் ஆகியோர் பிரசன்னமாகியிருந்ததாக ஊடக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்விசாரணைக்காக அரசப் பெருந்தோட்டயாக்க தலைவர், மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபைத்தலைவர், எல்கடுவ பிளான்டேஷன் கம்பனி இயக்குனர், பெருந்தோட்ட அமைச்சின் செயலாளர், நிதி அமைச்சின் செயலாளர், தொழில் ஆணையாளர் நாயகம், மத்திய வங்கி ஆளுனர் என்போர் அழைக்கப்பட்டிருந்தனர். தலைவி கலாநிதி தீபிகா உடகம, ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் விசாரணைக்கு தலைமை தாங்கினார்கள்.

வாதிகள் தமது வாதங்களை ஆணித்தரமாக முன்வைத்ததை அடுத்து இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் தீபிகா உடகம இப் பிரச்சினைகளை உடனடியாக தீர்க்க வேண்டுமென சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு உத்தரவிட்டனர். இதன்போது பிரதிவாதிகள் தற்போது தோட்டங்கள் நட்டத்தில் இயங்குவதாகவும், பாரியதொரு நிதி நெருக்கடியை எதிர்நோக்குவதாகவும், தொழிலாளர்களுக்கான சம்பளத்தைக் கூட வழங்க நிதிப் பற்றாக்குறை நிலவுவதாகவும் குறிப்பிட்டனர். ஆணைக்குழுவின் தலைவி, சட்டரீதியாக கொடுப்பனவுகளை வழங்குவதில் சட்டதுக்கு அடிபணிய வேண்டுமென வலியுறுத்தினார்.

இங்கு ஜனவசம தோட்டங்கள் குத்தகைக்கு அல்லது கிரையத்திற்கு வெளியாட்களுக்கும் வெளிநாட்டவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளமை பற்றியும் வாதிகள் தரப்பில் சுட்டிகாட்டப்பட்டது. 2001-2012 இற்குட்பட்ட காலத்துக்கான கொடுப்பனவுகள் வைப்பில் இடப்படாத நிலையில் இதற்கான உரித்தாளிகளில் சிலர் இறந்து விட்டமையும் இங்கு அவதானத்திற்குட்பட்டது.

அத்துடன் பெருந்தோட்ட யாக்க தோட்டங்கள் யாவும் அரசாங்கத்தின் பொறுப்பில் நிர்வகிக்கப்படுவதால், இங்கு தொழில் புரியும் அனைவரும் தொழிலாளர்களே ஆவர்.



எனவே ஏனைய அரச நிறுவனங்கள் தமது பணியாளர்களுக்கு வழங்கும் சட்டரீதியாக சகல கொடுப்பனவுகளுக்கும் இவர்கள் உரித்தாளிகளாவர் என்ற நிலைப்பாட்டினை ஆணைக்குழுத் தலைவர் தீபிகா உடகம கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. தோட்ட தொழிலாளர்களின் எதிர்கால நலன் சார்ந்த இவ்விவகாரம் தீர்வு காணப்படவேண்டியது முக்கியம். மலையக பிரதிநிதிகளும் இது குறித்து ஆக்க பூர்வமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் மூலம் பாதிக்கப்பட்டுள்ள தோட்ட மக்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்திக்கொள்ள வழிவகுக்கலாம் என்பதே சமூக ஆர்வலர்களின் கருத்தாக இருக்கின்றது. எனினும் பாதிக்கப்பட்ட பெருந்தோட்ட மக்கள் கடந்த 30 வருடங்களுக்கு மேலாகவே இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.

இவர்களில் ஒரு தொகையினர் அண்மையில் வீதிப் போராட்டத்தில் குதித்திருந்தனர். கண்டி மாவட்டத்தின் எல்லையில் அமைந்துள்ள பிரதேச செயலகப் பிரிவில் மூடப்பட்ட தோட்டங்களில் ஒன்று அரங்கலை பெருந்தோட்டம். கீழ் கொத்மலை நீர்மின் திட்டம் அமுலுக்கு வந்த போது மேற்படி தோட்டக் காணிகள் சிங்கள மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. இது போலவே மொச்சக்கொட்டை ,அக்கறைமலை போன்ற தோட்டங்களில் இருந்தும் தோட்ட மக்கள் வெளியேற்றப்படலாயினர். இவ்வாறு வெளியேற்றப்பட்டவர்கள் லிந்துலை, திஸ்பனை பகுதிகளில் மாடி வீட்டு லயங்களில் குடியேற்றப்பட்டனர்.

இவ்வாறு தோட்டங்கள் மூடப்படும் போர்வையில் தோட்ட தொழிலாளர்கள் வெளியேற்றப்படலாயினர். துரித மகாவலி திட்டத்தினால் வாழ்விடங்களை இழந்த சிங்கள கிராம மக்களே இவ்வாறு குடியேற்றம் செய்யப்பட்டனர்.

இந்நிலைமைக்கு முகம் கொடுத்த வர்களின் ஒரு தொகையினரே மொச்ச் கொட்டை தோட்ட மக்கள் இத்தோட்ட ஜனவசம எனப்படும் (மக்கள் பெருந் தோட்ட அபிவிருத்திச் சபை) அரச துறைக்குச் சொந்தமானது. இங்கு 37 தமிழ்க் குடும்பங்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட சிறு தோட்ட வேலையையே நம்பி வாழ்ந்தன. நாடளாவிய தோட்ட தொழிலில் பரிச்சயம் கொண்ட சிங்கள மக்கள் இவர்களை வேலைக்கு அழைப்பது இல்லை.

அதனால் வேலைவாய்ப்புகள் பறி போயின. சிங்களவர்களுக்கு உரிமை யாக்கப்பட்ட காணிகளில் அமைந்திருந்த லயங்களே இவர்களது உறைவிடங் கள். ஆனால் இவர்கள் இந்த லயங்களில் வாழ்வதை இக்காணி உரிமையாளர்க ளான சிங்களவர்கள் விரும்பவில்லை.

இதனால் இரு சாரார்களுக்கு இடையில் சில காரணமாகவே முறுகல் நிலை காணப்படுவதாக தகவல்கள் தெரிவிக் கின்றனர். இதன் பின்னணியிலேயே மக்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர். நாவலப்பிட்டி போவில தோட்ட தொழிலா ளர் விடயத்தில் ஜனாதிபதியின் தலையீடா வது நடந்தது.

இந்த மொச்சகொட்டை தோட்ட மக்கள் விவகாரத்தின் உருப்படியாக ஏதாவது நடந் ததாக வேண்டும். இப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டிய பொறுப்பு மகாவலி அபிவிருத்திச் சபையைச் சார்ந்தாகவே இருக்கின்றது.

காணிகளை இழந்த சிங்கள சமூகத் துக்கு நியாயமான தீர்வினை வழங்கிய இச்சபை காணிய மட்டுமன்றி வாழ்விட வாழ்வாதார உரிமைகளையும் இழந்து நிற்கும் இத்தோட்ட மக்கள் பால் உரிய கரிசனையைக் காட்டவில்லை

1987 ஆம் ஆண்டு இம்மக்களுக்கு காணி பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று காணி அமைச்சு உறுதியுரை தந்திருந்த தாகப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.திலக ராஜ் கூறுகிறார்.

இக் காலப்பகுதியில் பெருந்தோட்டக் காணிகள் பறிபோனதை பற்றிக் கவலைப் படாத இ.தொ.க. மாடி லயம் அமைத்து குடியேற்றியது வரலாற்றுத் தவறாகும் என்கிறார் அவர். பெருந்தோட்ட மக்களது பிரச்சினைகள் என்று வரும் போது ஆளையாள் குற்றஞ்சாட்டுவது மலையக அரசியலில் சகஜமாகிப் போய் விட்டது.

இதனையே தமக்கு பக்க பலமாகப் பயன்படுத்திக் கொள்கின்றது ஆளுந்தரப்பு. ஏற்கனவே பெருந்தோட்டத்துறை வாழ் வாதாரம் பாதிப்பினை நோக்கி நகர ஆரம் பித்து விட்டது. அன்றாட வாழ்வியல் அச்சத்துக்குள்ளாகி வருகின்றது. ஒரு சமூகத்தின் வாழ்விட உரிமை என்பது தவிர்க்க முடியாதது. அதை மலினப்படுத்துவது மனித உரிமை மீறலாகும்.

இந்த மொச்சகொட்டை தோட்ட மக்களைப் போலவே, இன்னும் பலர் போக்கிடமின்றித் தவிக்கின்றனர். இன்னும் சொல்லப் போனால் சிறு தோட்ட உரிமையாளர்களின் தயவி லேயே வாழ வேண்டியுள்ளது. இது நிரந்தரமானது அல்ல.

இம்மக்கள் வாழும் இடங்களை மலையக வீடமைப்புத் திட்டங்கள் எட்டிப் பார்க்குமா? என்பது கேள்விக்குரியது

இதனை மனதிற் கொண்டு மலையக வீடமைப்புத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும். அதில் நிர்வாகி யான தோட்ட மக்களுக்குத் தடையாகத் தனியார் தோட்ட நிர்வாகங்களோ அரசு பொறுப்பில் உள்ள தோட்ட நிர்வாகங்களோ இருப்பது எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாததே ஆகும்.



# ஆரோக்கியத்தை மேம்படுத்தும் வெறும் கால் நடை

நம்மில் பெரும்பாலோர் கடந்த காலத்தில் வெறும் காலில் நடந்தி ருப்போம், குறிப்பாகக் குழந்தை பருவத்தில், நம் பெற்றோர்களும் மூத்தவர்களும் நம்மை அப்படி நடக்கக் கூடாது என்று எச்சரிப்பார்கள். நாம் அவற்றை அலட்சியம் செய்யும்போது கோபப்படுவார்கள். வெறும் காலில் நடப்பதினால் நாம் காயமடையலாம் அல்லது நமக்கு நோய்க் கிருமிகள் தொற்றிக்கொள்ளலாம் என்றும் அவர்கள் நம்பினார்கள்.

ஆனால் பல நூற்றாண்டுகளாக, விஞ்ஞானம் வெறும் காலில் நடப்பதின் நன்மைகளைக் கண்டறிந்துள்ளது.

அதன்படி வெறும் காலில் நடப்பதால் பூமிக்கு நெருக்கமாக நீங்கள் இருக்கிறீர் கள். உங்கள் கால்களால் பூமியின் ஆற்றலை அதிகபட்சம் அணுக முடியும். விஞ்ஞானக் கோணத்தைத் தவிர, நாம் வெறுங்காலுடன் நடந்து செல்லும் பொழுது, பூமியின் வெப்பநிலை, அதன் மென்மைத்தன்மை மற்றும் அதன் மேற்பரப்பு, காலைப் பனியின் ஸ்பரிசம் போன்றவை மிக அற்புதமான அனுபவத்தைத் தருவதாக இருக்கும்.

கோட்பாட்டளவில், இது மனித உடலுக்கு தேவையான நோய் எதிர்ப்புச் சக்திகள் கிடைப்பதற்கு ஒரு நல்ல ஆதாரமாக உள்ளது. இது நாள்பட்ட நோய்களைத் தடுக்கிறது. வயதாவதின் வேகத்தையும் மட்டுப்படுத்துகிறது. இது உடலியல் மாற்றங்களைத் தூண்டுகிறது. மேலும் தூக்கத்தை மேம்படுத்தவும், வலியைக் குறைக்கவும், மன அழுத்தத் தைக் குறைக்கவும், வீக்கங்களைக் குறைக்கவும், மற்றும் பிற உடல்நல நன்மைகள் தருவதாகக் கூறப்படுகிறது.

### பூமியின் ஆற்றல் கண்டுபிடிப்பு

1952 ஆம் ஆண்டில், ஜெர்மனியின் முனிச் நகரத்தில் தொழில்நுட்பப் பல்கலைக்கழக இயற்பியலாளரான பேராசிரியர் டபிள்யூ. எஸ்.ஷமன் புவியின் அதிர்வலைகளை நிரூபிக்கத் தொடங்கி னார். ஒரு கோளம் மற்றொரு கோளத்திற் குள் இருக்கும் போது, ஒரு மின் அழுத்தம் உள்ளது என அவர் அனுமானித்தார். அவரது ஆய்வு முடிவுகளுக்குப் பிறகு பூமியின் அதிர்வெண் 10 ஹேர்ட்ஸ் என்று கணித்தார்.

1954 ஆம் ஆண்டு வரை பூமியின் அதிர்வெண் 10 ஆக இருந்து வந்தது. மேலும் பல ஆய்வுகள் செய்யப்பட்டு பூமியின் அதிர்வெண் 7.83 ஹேர்ட்ஸ் என்று உறுதி செய்யப்பட்டது. பின்னர் இது பிற விஞ்ஞானிகளால் சோதிக்கப்பட்டுச் சரிபார்க்கப்பட்டது. அப்போதிலிருந்து இது உலகெங்கிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விஞ்ஞான அளவாக இருந்துவருகிறது.

### பூமியின் நன்மைகள் பற்றிய ஆய்வு

பங்கேற்பாளர்களை வெறும் காலில் நடக்க வைத்து ஆய்வுகள் பல செய்யப்பட் டது. அவர்கள் கால்களில் மின் கடத்தும் கருவிகள் இணைக்கப்பட்டன. 30 நிமிடங்கள்.கழித்துப் பங்கேற்ற பலருக்கு உடலெங்கும் புத்துணர்வு தருவது போல இருப்பதாகச் சொன்னார்கள். அவர்களை சில வாரங்கள் கழித்து தொடர்பு கொண்டபோது, மன அழுத்தம் குறைந்திருப்பதாகவும், உடலில் வீக்கம் மற்றும் ஹார்மோன் அளவுகளில் நேர்மறையான முன்னேற்றங்களை அறிவித்தனர்.

இதய மருத்துவரும் நரம்பியல் நிபுண ருமான கே.சோகல் மற்றும் பி.சோகால், ஆகியோர் ஆஸ்டியோபோரோசிஸ், குளுக்கோஸ் கட்டுப்பாடு மற்றும் தைராய்டு குறித்து ஆய்வுகள் தொடர்ச்சியாக நடத்தினர். அதன்படி எலும்புத் தேய்மானங்கள் குறிப்பிடத்தக்க அளவில் குறைவடைவதைக் கண்டனர்.

ஆறு மாதங்களாக நீரிழிவு நோய் இருப்பவர்களுக்கு மருந்து சாப்பிட்டும், உடற்பயிற்சிகள் செய்தும் குறையாத அளவுகள், 72 மணி நேரம் வெறும் காலில் நடைப்பயிற்சி செய்த பிறகு ரத்தத்தில் குளுக்கோசின் அளவு குறைந்தது.

தைராய்டு நோய் சோதனையில் முடிவுகள் தெளிவாக இல்லை. ஆனால் வெறும் காலில் நடப்பதால் தைராய்டு அமைப்போடு தொடர்புடைய சுரப்பிகளில் நல்ல மாற்றங்கள் தென்பட்டன.

இது தவிர பல உடல்நல நன்மைக ளும், குறைபாடுகளை மட்டுப்படுத்தவும் செய்கிறது. அவை மன அழுத்தம் நிவாரணியாகச் செயல்படுகிறது.

சில முன்னெச்சரிக்கைகள்.

நீரிழிவு நோயாளிகள் மிகவும் கவன மாக இருக்க வேண்டும். கூரான பொருட் கள் அவர்களை காயப்படுத்திவிடும். அவர்கள் எளிமையான காலணிகள் பயன் படுத்த வேண்டும். மேலும் அவர்கள் நடை முடிந்தபின் கால்களைக் கழுவி, ஒழுங்காக ஈரப்படுத்தி, முழுமையாகப் பரிசோதிக்க வேண்டும்.

நீங்கள் நடக்கும் நிலப்பரப்பில் மிகவும் கவனமாக இருங்கள். உடைந்த கண் ணாடிகள், ஆணிகள், வெட்டிய பாறைகள் உங்களைக் காயப்படுத்தலாம். ஈரமான நிலப்பரப்பு வழுக்கிவிடச் செய்யும்.

நீங்கள் இதற்கு முன் வெறும் காலில் நடைப்பயிற்சி செய்யாவிடில், கால்களில் வலிமை கூட்டுவதற்கு சிறிய விஷயங்களிலிருந்து ஆரம்பிக்கலாம். சப்பாத்தினைப் பயன்படுத்தி ஆரம்பிக்கவும்.

பூமியிலேயே இது பற்றியஆராய்ச்சி இன்னும் பலன்களை அல்லது அதன் எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டும் என்றாலும், நாம் பூரணமாக, உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கான ஒரு வழிமுறை இதுவாகும். இறுதியாக, வெறும் காலில் நடப்பது உங்கள் உடலின் சமநிலையை அதிகரிக்கிறது. அது உடலின் நல்னை



**பங்கேற்பாளர்களை வெறும் காலில் நடக்க வைத்து ஆய்வுகள் பல செய்யப் பட்டது. அவர்கள் கால்களில் மின் கடத்தும் கருவிகள் இணைக்கப்பட்டன. 30 நிமிடங் கள் கழித்துப் பங்கேற்ற பலருக்கு உடலெங் கும் புத்துணர்வு தருவது போல இருப்பதாகச் சொன்னார்கள். அவர்களை சில வாரங் கள் கழித்து தொடர்பு கொண்டபோது, மன அழுத்தம் குறைந்திருப்பதாகவும், உடலில் வீக்கம் மற்றும் ஹார்மோன் அளவுகளில் நேர்மறையான முன்னேற்றங்களை அறிவித்தனர்.**

உடலில் வீக்கம் குறைகிறது.

உடலின் சமநிலை மற்றும் கால்களின் வலிமையை அதிகரிக்கிறது.

கால்களின் இயக்கம் மற்றும் சீரமைப்பு அதிகரிக்கிறது.

ஆனால் வெறும் காலில் நடப்பதற்கான அதிகரிக்கிறது. இது மிகவும் எளிமையா னது, முற்றிலும் இலவசமானது. இது சம்பந்தமாக தொடர்ந்து ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. ஆனால் நாம் யாரும் சொல்லும்வரை காத்திருக்காமல் நாமே நடக்கத் தொடங்குவோம்.

சிறுகதை



தாட்சாயினி

# சோதனைகள்



வித்தியாபாலினி ஒரு அவஸ்தையை உணர்ந்தாள். அடிவயிற்றில் சின்னதாய் வலி. நெருக்கியடித்த சனங்களுக்கிடையே ஒற்றைக்கையை மேல் "பாரி"லும், மற்றையதை "சீற்"றிலும் இறுகப்பற்றியபடி, ஓடிக்கொண்டிருக்கும் யாழ்ப்பாண வீதியை அர்த்தமற்ற வெறிப்புடனும், கைநழுவி விடக்கூடாதென்ற கவனத்துடனும் பார்த்தபடியிருந்தாள். நெற்றியில் ஒரு துளி வியர்வை துளிர்த்திருந்தது. இந்த பஸ்ஸிற்குள் சனங்கள் கூடத்தான் என்றாலும் வெளியில் வீசிய காற்றுக்கு, யாருக்கும் நெற்றி வியர்க்கவில்லை.

சனங்கள் அவசரமாய்க் கதைத்துக் கொண்டிருந்தார்கள். அங்காலை ஏதோ பிரச்சினை நடந்துவிட்டமாதிரி, ஒவ்வொரு "செக்கிங் பொயின்"ரிலும் இனி இறங்கித்தான் போகவேண்டுமென்று.

ஒரு விஷயத்தில் பார்த்தால் இது நல்லதுதான். முன்பென்றால் ஒரு இடமும் "செக்கிங்" தொல்லை இல்லாதபோது இப்படிப் "பெரிய" பஸ்களும் இல்லை. குறைந்த காசில் போகவும் முடியாது. சின்ன மினி பஸ்களிலும், தட்டி வான்களிலும், மூச்சுவிட முடியாதபடி, சனங்களை அடைத்துக் கொண்டு செல்லும் போது, நெருக்கித் தள்ளி நிற்பவர்களுக்குக் கடைசி ஊரில் இறங்குகிறவரை நிம்மதியாக மூச்சுவிட முடியாது. "ஏன் இப்படி அடைகிறான்" என கண்டக்டரை மனதிற்குள் திட்டித் தீர்த்துக்கொண்ட இருக்கவேண்டியதுதான். அப்பொதெல்லாம் இவள் போகிற அளவு தூரமேதானென்றாலும், நிறையப்பேர் கைதடியிலிருந்த யாழ்ப்பாணம் வரை சைக்கிளில் போவதை அவள் கண்டிருக்கிறாள். பேசாமல் பட்டென்று பஸ்ஸை விட்டுக் குதித்து, ஒர சைக்கிளில் "ஹ"வென்று காற்றை உள்வாங்கி உல்லாசமாய்ச் சென்றாலென்ன...? களைப்பே தெரியாமல் நண்பிகளோடு போகலாம் என்று நினைத்தாலும், அப்போது வீட்டில் அதற்கு அனுமதி கிடைத்ததில்லை. (இப்போதும் கூடத்தான்.)

சைக்கிள் ஓட்டிச் சக்தியை வீணடித்தால் எப்படிப் படிப்பதாம்...? இப்போது படித்த காலம்போய் வேலைக்குப் போகிற பருவம். ஆனாலும் வேறு ஏதேதோ காரணங்கள் சொல்கிறார்கள். ஊரில் நடக்கிற விபரீதங்கள். ம்... எல்லாவற்றுக்கும் எப்போதுதான் விடிவு வருமோ?

இப்பவும்தான் பஸ்ஸைத் தாண்டிப் பல சைக்கிள்கள் போகின்றன. தெரிந்த முகங்களும் இருக்கின்றன. ஆனால் இப்போது பெண் பிள்ளைகள் முன்பு போல அதிக எண்ணிக்கையில் போவதாய்த் தெரியவில்லை. அப்படிச் செய்பவர்கள் கூட ஆண் துணையோடுதான் போகிறார்கள்.

பஸ் நின்று விட்டது. "எல்லோரும் இறங்கிப் போங்கோ... இறங்கிப் போங்கோ..."

கண்டக்டரின் சத்தம் ஒரே தொனியில் கேட்டுக் கேட்டுப் பழகிப் போன "ரேப் றெக்கொடர்" மாதிரி ஒலிக்கிறது. ஆறுதலாய் ஒருதரம் காற்று வாங்கலாம். அவள் பார்க்கிறாள். எந்த இடம் இது...?

"யாழ் நகர் வரவு நல்வரவாகுக..." வளைவுத் தூண் அலங்கரிக்கும் இடம். அப்பாடா, கடைசிச் செக்கிங்தான். மனதிற்குள் ஆறுதல். நெருக்கித் தள்ளி இறங்குவதற்கு அவள் உடல்நிலை சீராய் இல்லை.

இப்படிப் பட்டவர்கள் முதலில் இறங்கட்டும். கொஞ்சம் காத்திருந்தபோது இருக்கைகளில் இருந்தவர்கள், நிற்பவர்கள் இறங்கும் முன் இடித்துப் புடைத்துக்கொண்டு எழுந்தார்கள். இவளுக்கு எரிச்சலாய்க் கிடந்தது. இருப்பானேன்...? பிறகு இடித்துத் தள்ளுவானேன்? நிற்பவர்கள் இறங்கும் வரை காத்திருப்பதுதானே! என்று ஒரு கோபம் எழுந்தது. பின்னால் வருபவர்கள் தள்ளும் முன் கீழே இறங்கிவிடவேண்டும். "சுள்"ளென்று வயிற்றில் ஒரு முழங்கை இடித்தது.

"ஐயோ... அம்மா..." வாய்வரை வந்த வார்த்தைகளைக் கஸ்ரப்பட்டு விழுங்கினாள். கீழ் உதடுகளை அழுத்திக் கடித்த வேதனையை அடக்கினாள்.

கொஞ்சம் கொஞ்சமாய் வேதனை அடங்கும்வரை காத்திருக்க முடியாது. இடித்தே விழுத்தி விடுவார்கள். கால் பெரு விரலுக்குள் சேலை மிதிபட்டது. காலை விலக்கிச் சேலையை ஒற்றைக்காலால் உயர்த்திப் பிடித்தபடி இறங்கி நடந்தாள். கால்களுக்கிடையே ஈரம் பிசுபிசுத்தது. மெதுவாய் நடந்தபோது காற்று இதமாய்த் தடவிக் கொடுப்பது போலிருந்தது.

இவளுக்கு முன்னால் போன பெண்கள் ஆண் வரிசையில் போய்க்கொண்டிருந்தார்கள்.

பொம்பிளையலுக்கு அங்கால் பக்கம் எண்டு இவையளுக்குத் தெரியாதோ? என்று யோசித்தபடியே தான் அந்தப் பக்கம் போகலாமோ என்று நினைத்தாள். ஒரு பெண் சிப்பாய் தன் அரண்வாயிலில் நின்று இடுப்பில் கைவைத்தபடி பார்த்துக் கொண்டிருந்தாள். வரச் சொன்னால் போவோம் என்று இவளும் ஆண் வரிசையில் இணைந்தாள்.

சட்டென்று அந்தப் பெண் சிப்பாய் சிங்களத்தில் கத்தினாள். கையைக் காட்டிக் கூப்பிட்டாள். திடீரென்று மிரண்டு போனார்கள் பெண்கள். "அங்கால் பக்கமாப் போங்கோ..." என்று வித்யாபாலினி அவசரமாகச் சொல்லிவிட்டுத் தானும் அவர்கள் பின்னால் இணைந்து பெண்கள் பகுதிக்குப் போனாள். முதலில் ஆண்கள் பின்னாலேயே போன இரண்டு இளம் பெண்களை...' அவர்கள் இன்றுதான் புதியதாய் பஸ்ஸில் வந்திருக்கவேண்டும். நடைமுறை தெரியாதவர்களாய் இருந்தார்கள். 'நிறுத்தி வைத்து அந்தச் சிப்பாய் வாய்க்கு வந்தபடி திட்டினாள்.

இவளது முறை வந்தபோது ஐ.சி காட்டினாள். ஒன்றும் பேசாமல் விட்டு விட்டாள். மற்றவள் பொலிஸ். மேலிருந்து கீழே வரை ஒரு இடம் பாக்கியில்லாமல் தடவிக்கொண்டு வந்தாள். இவளுக்குச் சிலீரென்றது. முதல் முறை இப்படித்தடவும் போது, கூச்சமாய், அருவெறுப்பாகத் தானிருந்தது. பிறகு கொஞ்ச நாளில் பழகிப் போனது. ஆனால் இந்த நிலையில் இதுதான் முதல்த்தடவை. மற்ற இடங்களில் தடவாமலே விட்டு விட்டார்கள். அந்தப் பெண் பொலிஸ் இவளைத் தடவிக்கொண்டு வந்தாள். இடுப்புக்குக் கீழே தடவிவிட்டு கேள்விக்குறியோடு "ம்..." என்று முகத்தைச் சுருக்கியபடி அவளைப் பார்த்தாள். வித்யா சங்கடத்துடன் நெளிந்தாள். "மென்சஸ்..." திக்கியபடி சொன்னாள் அவள். அதற்குமேல் ஒன்றும் கேட்கவில்லை. போகச்சொல்லித் தலையாட்டினாள். இவள் ஒரு நிம்மதியோடு வெளியே வந்தாள். கொஞ்சத் தூரத்தில் கற்குவியலுக்கு அருகேயும், பிள்ளையார் வாசலுக்குப் பக்கத்தில் நின்ற மரநிழலின் கீழும் சனங்கள் காத்திருந்தார்கள். வெய்யிலாய்த்தான் கிடந்தது என்றாலும் மரநிழலின் கீழ் போகாமல் கற்குவியலருகே நின்றுகொண்டாள்.

"எங்களை அதாலை வரச்சொல்லியிருந் தாள், அதாலை வந்திருப்பமே. கையைக் கட்டிப் பாத்துக் கொண்டிருந்திட்டு, இப்ப எங்களுக்குத்தான் பேச்சு..."

இங்கு நின்ற இளம் பெண்களில் ஒருத்தி அழுகையுடனும், ஆத்திரத்துடனும் குமுறிக் கொண்டிருந்தாள். அதைப்பற்றியே சனங்கள் பிரலாபித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் வாய்க்கு அவல் கிடைத்துவிட்டது.

"அது ஏன் தெரியுமோ பிள்ளை, அப்பிடிப் பேசினவள் வடிவான பெட்டையளைத் தங்கட ஆம்பிளையள் திரும்பிப் பாத்திடுவாங்களோ எண்டு பயம். நீங்கள் அவங்களை மயக்கிப் பொடுவீங்களோ வெண்டு..."

ஒரு கிழவி வாயை நெளித்த நெளித்துச் சொன்னாள். கூட்டம் "கொல்"லென்று சிரித்தது. வித்யாவின் அவஸ்தை குறைந்து முகத்தில் லேசாய் புன்னகை அரும்பியது. பேச்சு வாங்கியவள் மட்டும் முகத்தை "உர்"ரென்று வைத்து இன்னும் திட்டிக் கொண்டிருந்தாள். "பிசாசு" என்று முணு முணுத்தாள். கூட்டத்தின் சிரிப்பைக்கேட்டு, சாவடிக்குள்ளிருந்த அந்தப் பெண்சிப்பாய் வெளியே வந்து எட்டிப் பார்த்தாள். அதற்குள் பஸ் நகர்ந்து அருகே வரவே சனங்கள் அடுத்த பிரச்சினையை எதிர்நோக்கி இடித்துத் தள்ளத் தொடங்கினார்கள். ஓடும் பஸ்ஸில் தாவியெறித் தம் தி-றமையை நிரூபித்துக் கொண்டார்கள். அவளால் இப்போத ஓடி இடம்பிடிக்க முடியவில்லை. இந்த நிலையில் ஒர "சீற்" கிடைத்தது. இருப்பதென்றால் அது உலக அதிசயம்தான். ஆனால் அது முடியாது. இத்தனைபேரோடு இடித்து ஏற ஏலாது. ஆனாலும் நிற்கும் இடமாவது வசதியாய்க் கிடைத்துவிட வேண்டும். யாருடைய முழங்கையையும் இடிக்காமல், யாருடைய செருப்பும், கால்களை அளுத்தி மிதிக்காமல் எந்த ரோமியோவும் நெரிசலோடு நெரிசலாய் உடம்பில் ஒட்டாமல் ஒரு இடம் கிடைத்தால் எவ்வளவு நல்லது. அதுவே போதும் இப்போதைக்கு. தற்செயலாய்த் திரும்பிப் பார்த்தாள். தூரத்தில் அந்தப் பெண் சிப்பாய் இங்கேயே கோபத்துடன் திரும்பிப் பார்ப்பதை உணர்ந்து அவள் திரும்பவும் கூப்பிட்டு விடக்கூடாது என்று எச்சரிக்கை உணர்வுடன் படக்கென்று வாசற் கம்பியைப் பற்றித் தொற்றிக் கொண்டு விட்டாள்.

ஒரு மாதிரி மூலைக் கரையில் ஒதுக்க மாய் போய் தனி இடம் பிடித்துக் கொண்டாள். நின்றபடியே வெளியெ பார்வையை அலையவிட்டாள்.

சீற்றில் இடம்பிடித்தவர்கள் இந்த உலகத் தக் கவலையே இல்லாதவர்கள் போல் நிற்பவர்களை ஒரு சுற்றுச் சுற்றுப் பார்த்து விட்டு தங்கள் தங்கள் பிரச்சினைகளை அருகில் உள்ளவர்களிடம் பகிரத் தொடங்கிவிட்டார்கள்.

வாசலில் கண்டக்ரர் சொல்லிக்கொண்டார்.

"மீசாலையில கிளைமோர் வெடிச்சதாம் நாலுபேர் செத்தப் போனாங்களாம்..."

ஓ... இதுக்குத்தானோ இந்த ஆரவாரம் -? மெல்லப் புதிர்விட ஆரம்பித்தது.

"புத்தூர் சந்தியில ஒரு இயக்கப்பெட்டையை கிறனைற்றோடை பிடிச்சவங்களாம். பஞ்சாபியோட திரிஞ்சவளாம்..."

இவள் சுற்றுமுற்றும் பார்த்தாள். பஸ்ஸில் யாரும் பஞ்சாபியில் இல்லை. நல்ல வேளை இங்க ஒருவரும் பிடிபடப் போவதில்லை. ஒரு மூச்சு நிம்மதி வந்தது. அந்த பிடிபட்ட பெண் யாராய் இருக்குமென்று எல்லோரும் தலையும் வாலும் வைத்துக் கதைக்கத் தொடங்கி விட்டார்கள்.


"நானும் ஒருநாள் கண்டனான். அம்மன் கோயிலடியில ரண்டு பேரா திரிஞ்சவளவை..."

அவரவர் தத்தம் கற்பனைகளை விரித்து விட்டார்கள்.

"உஷ், பேசாதை, பொது இடம்..."

யாரோ மற்றவளை அடக்கினாள்: வித்தியாவிற்குப் புதினமாயிருந்தது. ஒருவரை ஒருவர் தெரியாதவர்கள் கூட இவ்வளவு நெருக்கமாய்க் கதைக்கிறார்கள். கதைப்பதற்கு விஷயம் இல்லையா என்ன? எங்கும் ஒரே பிரச்சினைதானே. வீட்டுக்கு வீடு வாசல்படி.

அவளுக்கு சுபாங்கனியின் ஞாபகம் வந்து போனது. அப்பால் ஒரு காட்டில் இப்படித்தானே அவளும் திரிந்து கொண்டிருப்பாள். இனி எப்போது அவளைக் காண முடியுமோ?



**ஈழத்து பெண் எழுத்தாளர்களில் தாட்சாயினி குறிப்பிடத்தக்க ஒருவர். ஆழமாகவும் அளுத்தமாகவும் எழுதும் இவரது சிறுகதைகள் பரந்த வாசகர் தரப்பைக் கொண்டது. இலக்கியம், ஆன்மீகம் என பல துறைகளில் தன் ஆளுமையை வெளிப்படுத்திவரும் இவர் ஓர் அரச ஊழியர்.**

**பிரேமினி சபாரட்ணம் என்ற இயற்பெயரைக் கொண்ட இவரது படைப்புக்கள் பல விருதுகளையும் பாராட்டுக் களையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது. ஒரு மரணமும் சில மனிதர்களும் என்ற சிறுகதைத் தொகுதியிலிருந்து நாம் தரும் இக்கதை பல வருடங்களுக்கு முன்பே வெளிவந்தபோதும் இன்றைய சூழலுக்கும் இது பொருத்தமானது.**

"சண்டை பிடிக்கிறதெண்டா... எங்கையேனும் காட்டுக்கை நிண்டு பிடிக்கிறத்துக்கு, இஞ்சை சனம் இருக்கிற இடத்துக்கு ஏன் வருதுகள்...?"

எல்லோர் பார்வையும் அவள் மீது படிந்தது. சட்டென்று மௌனம். கொஞ்ச நேரம் அவள் ஆத்திரம் தீரத் திட்டித் தீர்த்தாள்.

அவர்களைத்தான், இவர்களைத்தான் என்றில்லாமல் இரண்டு பக்கத்தையும் திட்டித் தீர்த்தாள். கண்களில் குளம் மிதந்து கொண்டிருந்தது.

அந்த அம்மாளின் மகனை ஒரு சுற்றி வளைப்பின் போது கொண்டு போய்விட்டார்கள். அதற்குப் பின் எத்தனைபேரின் கையைக் காலைப் பிடித்துக் கெஞ்சியும் இன்னும் அவன் வீடு வரவில்லை.

அந்த அம்மாளை அடிக்கடி கலங்கிய கண்களுடன் கண்டதும் வித்தியாவுக்கு ஞாபகம் வந்தது. அந்த அம்மாவின் அனுதாபக் கதையைக் கேட்பதற்கு சனங்கள் கூடிக்கொண்டார்கள்.

வித்யா தற்செயலாய் திரும்பியபோது இரண்டு மூன்று பேரின் பார்வை அவள் மீது படர்ந்து கொண்டிருந்தது.

அவளுக்கு உள்ளே குளிர் பிடித்துக் கொண்டது. பீதியுற்றாள். இனம் புரியாத கலக்கம் என்ன...? ஏதும் அசம்பாவிதம் நடந்து விட்டதா? சட்டென்று பின்புறச் சேலையைத் திரும்பிப் பார்க்கத் தோன்றியது. அவர்கள் பார்வையின் முன் அப்படிச் செய்யவும் பிடிக்கவில்லை. கவனிக்காதது போல் நின்று கொண்டிருந் தாள். அனாலும், கண்கள் பயத்துடன் அவளைத் திரும்பிப் பார்த்தன. இவ்வளவு சன நெரிசலுக்குள் தன் சேலை எப்படி அவர்கள் கண்களிற் படும் என்று யோசிக்கிற அளவிற்கு அவள் நிலைமை இல்லை.

சற்றுத் தள்ளி நின்றவன் சொன்னான். "அக்கா, உங்கட தலையிலை வைக்கல் துமப்புகள் ஒட்டிக்கிடக்கு..."

"ஓ..." அவள் தன் பயத்துக்காகத் தானே வெட்கியபடி தலையில் கை வைத்துத் தடவி அந்த வைக்கோல் கற்றையைத் திரட்டி வெளியே எறிந்தாள். இது எப்போது தன் தலையில் வந்தது என்று யோசித்தாள்.

முன்னுக்கு ஆரவாரம் தொடங்கியிருந்தது.

யாரோ சிறுமி "சத்தி" எடுத்து விட்டதற்காக கண்டக்டர் சத்தம் போட்டுத் திட்டிக் கொண்டிருந்தான்.

இவளுக்கும் லேசாய், வாய்க்குள் உமிழ்நீர் ஊறத் தொடங்கிவிட்டது. எடுத்துத் தொலைக்கும் போல் இருக்கிறதே. இந்த இடத்தில் எப்படிச் சரிக்கட்டுவது. ஆண்டவனே துணையிரு என்று வேண்டிக்கொண்டாள். ஜன்னலால் எட்டி வீதியின் கரையில் துப்பப் பயமாயிருந் தது. யாராவது ரோட்டில் போகிறவர் மேல்பட் டால் அதைவிடப் பெரிய வினை வேண்டாம்.

திடீரென பஸ் வேறு பக்கம் திரும்பியது.

"என்னவாம்... என்னவாம்..." சனங்கள் குசுகுசுத்தார்கள்.

"மீசாலையிலையும் பிரச்சினையெண்ட படியால் இப்ப நாவற்குழியிலையும் செக்கிங்காம்...."

"கடவுளே, இனிப் பளை மட்டும், எத்தினை இடத்தை ஏறி இறங்கோணும்..." ஒரு பெண் அலுத்துக் கொண்டாள்.

இவளுக்கு இதுதான் கடைசிச் செக்கிங் பொயின்ற். அப்பாடா என்று நிம்மதி இருந்தது. இறங்கியவுடன் பளீரென்று கரையோரமாய்ப் போய்த் துப்பிவிட்டு வந்தாள். வரிசையில் இணைந்து கொண்டாள். மறுபடியும் ஒரு பயம் எட்டிப் பார்த்தது. என்ன கேட்கப் போகிறார்களோ...? வேலைக்குப் போய் அலுங்கிக் களைத்த முகமும், தொய்ந்த உடலுமாய், அவள் களைத்திருந்தாள். சற்றுத் தள்ளி மாட்டுவண்டிகளில் கொண்டுவந்த பொச்சுமட்டைகள் முழுவதையும் ஒவ்வொன் றாய் கீழே போட்டுக் கொண்டிருந்தான் ஒரு சிறு பையன். அவ்வளவு சுமையை ஏற்றியதற்கான பயமும், வேதனையும் அவன் முகமெங்கும் அப்பிக் கிடந்தது.

எதிரே ஓர் இராணுவச் சிப்பாய் மேற்பார்வை செய்துகொண்டிருந்தான். இவர்கள் பஸ்ஸுக்கு முன்னால், கார்களும் மோட்டார் சைக்கிள்களும், ஒவ்வொன்றாய் நிறுத்தப்பட்டு நகர்ந்த கொண்டிருந்தன. பாழடைந்து கிடந்த பெரிய சுவரில், புதிதாய்க் கிறுக்கப்பட்ட சிங்கள எழுத்துக்கள் தெரிந்தன. முன்னே பல பேர் போய் விட்டார்கள். இவள் வரிசைக்குள் தன் ஒழுங்கு மாறாமல் நிலையை ஸ்திரப்படுத்திக் கொண்டாள். தகரத் துண்டுகளால் அடைக்கப்பட்டிருந்த, சாவடிக்குள் நுழைந்த ஒவ்வொருவருமாய் வெளியேறிக் கொண்டிருந்தார்கள். தன் முறை வந்ததும், இவள் கைப்பையைத் திறந்து காட்டி, அடையாள அட்டையையும்



காட்டிக்கொண்டாள். முன்பே அறிமுகமான அவள் கொஞ்சம் சிரித்தாள். மற்றவள் புதிய வளாகவும், காண கொடூரமானவளாகவும் தோற்றமளித்தாள்.

முதலிலிருந்து, நடந்தவாறே, கழுத்துக்குக் கீழ் தொடங்கி, அக்குள், மார்பு, வயிறு என்று மிக அழுத்தமாக அமத்திக் கொண்டே வந்தவள் அந்த இடத்தைத் தொட்டவுடன் நின்றாள். ஒன்றும் பேசாமல் வித்தியாவின் கண்களைக் குரூரமாய்ப் பார்த்தாள். "மென்சஸ்..." அவள் கேட்க முதலே மெதுவாக முணுமுணுத்தாள். அவள் பட்டென்று இவள் சேலையைத் தூக்கினாள்.

மற்றவள் இவளுக்கு முதலே தெரிந்தவள் பணிவோடு, (இவளை உறுக்கியவள் அவளைவிட மேலிடம் போல) இவளை ஏதோ சுட்டிச் சொன்னாள். அவள் கேட்க வில்லை. முதலாமவள் கண்களால் ஆறுதல் சொல்லிப் பரிவாய்ப் பார்த்தபடி, வெளியே நின்றவர்கள் உள்ளே வராமல் வாசலுக்குக் குறுக்கே நின்று கொண்டாள். வெளியில் "ஒரு கசமுசா" பரவுவதை இந்த வேளையிலும் அவளால் உணர முடிந்தது. அந்தப் பெண் சிப்பாய் கீழேயிருந்த நுனிச் சேலையைக் கொத்தாய் திருகி முழங்காலுக்கு மேல் உயர்த்தினாள். இவளுக்கு "சில்"லென்று ஒரு பயம் உடல் முழுக்கப் பரவியது. "கழட்ட, கழட்டு" ஒரே வார்த்தையால் அதட்டினாள். தயங்கித் தயங்கிக் கழற்றினாள். மற்றவள் இதைப் பார்க்க விரும்பாமல் அப்பால் திரும்பி நின்றவள் கொத்தாய்ப் பற்றிய கையை அருவருப்பால் நழுவ விட்டாள் அவள். வித்தியாவுக்கு அவமானமாயிருந்தது. இடுப்பில் கை வைத்துப் "போ.." என்றாள். வெளியெ போனபோது அவளும் பின்னால் வந்த எதிர்ப்புறப் புற்படுக்கையில் துப்புவதும், பின் அவளைப் பார்த்துச் சிரித்த இராணுவச் சிப்பாய்க்கு இவளை மேலும், கீழும் ஏற இறங்கப் பார்த்தபடி கோபமாய் ஏதோ சொல்லிக் கொண்டு போவதும் தெரிந்தது. எல்லாரும் அவளையே பார்த்தார்கள். கூனிக் குறுகிப் போய்க் கூட்டத்திற் கலந்தாள். அந்த ஆண் சிப்பாய் இன்னும் சிரித்தபடியிருந்தான். பெண் சிப்பாய் அவனருகே நின்று கோபமாய் சடசடத்தபடியிருந்தாள். என்ன சொல்லியிருப்பாள்? நெற்றி வியர்ந்தது.

உள்ளூர இன்னும் அவமானம் குறையவில்லை. அந்தத் தகரச் சாவடியின் கீழ்ப்பாகம் அடைக்கப்படாமல் உள்ளேயிருந்த பெண்ணின் கால்கள் தெரிந்தன. வாசலில் தொங்கிக் கொண்டிருந்த சாக்கு காற்றில் ஆடிக்கொண்டிருந்தது. உள்ளேயிருந்தவள் கைப்பையை விரித்துக் காட்டுவது அந்தக் கணப்பொழுதுஅசைவிற் தெரிந்தது. அவளுக்கு முகத்தைப் பொத்திக்கொண்டு எங்காவது ஓட வேண்டும் போலிருந்தது. எல்லார் பார்வையும் தன் மேல் குத்திட்டு நிற்பதுபோல...

ஏன்... ஏனிந்தச் சோதனைகள்? தொண்டைக் குழிக்குள் ஒரு விக்கல் கரிப்பாய் எழுந்து திக்கியது.

அந்தச் சத்தி எடுத்த சிறுமி...

மகனைத் தொலைத்த தாய்...

பேச்சு வாங்கிய இளம் பெண்கள்...

கனிவாய் நோக்கும் ஒன்றிரண்டு கன்னியாஸ்திரிகள்...

மீசாலையில் கிரனைட்டோடு பிடிபட்ட பஞ்சாபி போட்ட பெண்...

இடம் பிடிக்க ஓடும் பெண்கள்...

இவை பற்றிய எல்லாப் பிரச்சினைகளை யும் மறந்து போய் இனி அவளைப் பற்றி அலசப் போகிறார்கள்.

பஸ்ஸுக்குள் நெரியுண்டு, ஏறியபோதும், எப்போதும் போல அவள் கடைசியாய் ஏறினாள்.

வழக்கம் போல் நிற்பதற்கு இடம் தேடிய போது வெற்றிலைக் காவியேறிய சிவப்புச் சொண்டுகளுடன் ஒரு வயதான பெண் எழும்பினாள்.

"இஞ்சை வா பிள்ளை, இதிலை இரு..."

வித்தியா திரும்பிப் பார்த்தாள். சாவடியில் அவளுக்குப் பின்னாலேயே வந்த இவள் உள்ளே நிற்கும் போது உள்ளே வராமல் மற்றவர்களால் தடுக்கப்பட்ட பெண்.

"உனக்குத்தான் ஓடி வந்து இடம் பிடிச்ச னான் பிள்ளை. நீ உப்பிடியெண்டா முதலே சொல்லிப்போட்டு பஸ்ஸுக்கை இருந்திருக்கலாம்..."

ஆதரவாய்க் கரம் பற்றி அமரவைத்தாள். அந்தக் கரத்தில் அன்பு முழுவதும் கரைந்து வழிவதாய்பட்டது அவளுக்கு.

"சனியன் பிடிச்சவள், என்ன வேலை செய்து போட்டாள்" சலிப்போடும், களைப் போடும் அவள் முன் சீற்றில் சாய்ந்து முகம் கவிழ்ந்தாள்.

"ஓம்... நி படு பிள்ளை..."

புதியவள் அத்தோடு நிறுத்திக் கொண்டாள்.


எதுவுமே நடக்காதது போல் கண்களை மூடி, உடம்பை லேசாய்க் கொண்டு வர முயன்றாள். முடியவில்லை. வயிற்றுக்குள் சின்னதாய் ஒரு வலி. இன்னும் வெருட்டிக் கொண்டிருந்தது. "சூடான திரவத் துளி" உடலை விட்டு வெளியேறுவதை உணர முடிந்தது. இதயமும் கழன்று விழுந்தால் நல்லது போலிருந்தது.

"கைதடி, கைதடி இறக்கம்..."

ஒரு நிமிஷத்தில் கைதடி வந்து விட்டது.

"தாங்ஸ் அம்மா, நீங்கள் இருங்கோ..."

அவசரமாய் அந்த பஸ்ஸை விட்டு இறங்கினாள். நெஞ்சை அடைத்த வெறுமையோடு வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தாள். ■



## ஜென் கதை –04

அந்த குரு சொன்ன விஷயத்தை எந்தச் சீடனுமே நம்பவில்லை. ஒரு ஆண்டின் இறுதி மாதத்தின் இறுதி வாரத்தில் அவர் தன் சீடர்களிடம் தான் அடுத்த ஆண்டு உயிரோடு இருக்கமாட்டேன் என்று சொன்னார். ஆகவே இப் போதே என்னைச் சிறப்பாக கவனித்துக் கொள்ளுங் கள் என்றும் கேட்டுக்கொண்டார். நம்பவில்லை என்றாலும் அவர்மேல் கொண்டிருந்த மரியாதை யின் காரணமாக அவரை மிகச்சிறப்பாக கவனிக்க ஆரம்பித்தார்கள். ஆண்டின் இறுதி நாளன்று, 'பனி பெய்வது நின்றதும் நான் புறப்பட்டுவிடுவேன்; என்றார் குரு.

தெளிவாக இருந்த ஆகாயத்தைப் பார்த்த சீடர்கள் இதைப்பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் உறங்கப்போய்விட்டார்கள்.

காலையில் எழுந்த சீடர்கள் பனி பெய்வதைப் பார்த்து கலக்கமடைந்தார்கள்.

குருவைத் தேடினார்கள்.

தியான மண்டபத்தில் படுத்திருந்த அவர் இறந்து போயிருந்ததைக் கண்டார்கள்.

மேற்சொன்ன நிகழ்ச்சியைத் தன் சீடர்களிடம் சொல்லிக்கொண்டிருந்த ஜென் குரு, 'தன் மரணத்தை முன் கூட்டி அறிந்திருக்கவேண்டியது ஒரு குருவுக்கு அவசியமில்லை என்றாலும் அவர் விரும்பினால் அப்படிச் செய்யமுடியும்; என்றார்.

'உங்களால் முடியுமா?;' என்றது கூட்டத்திலிருந்து ஒரு குரல்.

'நான் இன்றிலிருந்து ஏழாம் நாள் உங்களைப் பிரிவேன்;'

இந்த உரையாடல் நடந்ததையே மறந்து போகிற அளவுக்கு இதில் நம்பிக்கை அற்று இருந்தார்கள் சீடர்கள்.

ஏழாம் நாள் காலையில் எல்லோரையும் அழைத்த குரு, 'இன்று நான் பிரிகிற நாள்,' இப்படிப் பிரிகிறவர்கள் ஒரு பிரிவுக் கவி. இறுதிக் கவி எழுதுவது வழக்கமாக இருந்துவருகிறது. நானொரு கவிஞன் இல்லை ஆதலாலும், என் எழுத்துக்கள் புரிந்து கொள்ளக் கடினமானவை என்பதாலும் யாரேனும் என் இறுதிச் சொற்களை எழுதவேண்டும்; என்று கேட்டுக்கொண்டார்.

எல்லோரும் அமைதியாக இருக்க ஒருத்தன் மட்டும் எழுத முன்வந்தான்.

குரு சொல்ல ஆரம்பித்தார். ஞானத்திலிருந்து வந்தேன் ஞானத்துக்கே திரும்புகிறேன்

என்ன இது? 'ஒரு வரி குறைகிறதே?; என்றான் எழுதிக் கொண்டிருந்தவன்.

சிம்மம் கர்ஜிப்பதைப் போல 'கா; என்ற உரத்த குரலில் சொன்ன குருவின் இறுதி மூச்சு பிரிந்தது. 'மய' என்கிற பதத்துக்கு பழைய எகிப்திய மதத்தில் ஆத்மா என்கிற பொருள் உண்டு.

ஞானத்திலிருந்து வந்து ஞானத்துக்கே திரும்புவது ஆத்மா என்கிற பொருள்படும்படி இறுதி வாக்கியமாக 'கா; வைச் சொன்னார் என்பது பொதுவாகத் தெரிகிற பொருள். ஆனால் 'வேலி ஓரத்தில வெண்கலப் பிள்ளையார் - அது என்ன? என்கிற மாதிரி ஒரு சில்லி விடுகதை மாதிரியல்லவா இது இருக்கிறது! இதைச்சொல்ல ஒரு ஜென் குருவா வேண்டும்?

கவிதையின் முதலிரண்டு வரிகளும் எந்த அடி பைரவையும் இல்லாமல் தெளிவாக உள்ளன. மூன்றாவது வரியில் இருக்கிற கேள்வி விடையை எதிர்பாக்கிற சாதாரண கேள்வியன்று. அதில் ஒரு ஆதங்கமும் ஏமாற்றமும் தெரிகின்றன. அப்படியானால் அந்த ஏமாற்றத்தைத் தருகிற வரியைக் காணவில்லையே?

'ஒரு வரி குறைகிறது' என்று சீடன் சொன்னதும் வெற்றிக் களிப்பில் ஒரு சப்தமிட்டதும் உடனே மரணமடைந்ததும் எதைக்காட்டுகின்றன?

அவருடைய ஆதங்கம் அல்லது ஏமாற்றம் நிவர்த்தி ஆனதைத் தானே காட்டுகிறது?

குரு விட்ட வரி, 'ஞானத்தை போதித்தேனா தெரியவில்லையே; என்று கொள்ளலாம். அதனால் தான் 'என்ன இது; என்கிற சலிப்பு, ஒரு போதகனுக்கு எப்போது திருப்தியான மரணம் வரும்? தன் போதனைகள் சென்றடைந்து விட்டன என்கிற போதுதானே? ■

சுயதொழில் சாதனையாளர்



# விடாமுயற்சியும் கடின உழைப்புமே வெற்றியின் அடிப்படை...

இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு போர் காரணமாக பல லட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்திற்காக போராடிக் கொண்டிருக்கின்ற நிலையில் தமது வாழ்வாதாரத்திற்காக சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்கு வடக்குமாகாண பெண்கள் முயற்சித்து வருகின்றனர்.

இவ்வாறு சுயதொழில் முயற்சிகளில் வடக்கு மாகாணத்தில் ஈடுபடுகின்ற பெண்கள் பலரும் சாதித்து வருவதுடன் ஏனைய பல பெண்களுக்கு முன்னுதாரணமாகவும் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு சிறந்த எடுத்தக்காட்டாக யாழ்ப்பாணம் மாவட்டம் பண்டத்தரிப்பு கிராமத்தைச் சேர்ந்த ஸ்ராலினி தனி ஒரு பெண்ணாக் வாத்து பண்ணை ஆரம்பித்து இயற்கை விவசாயத்தை ஊக்கிவித்து வருகிறார்.

வணிக மேலாண்மை கல்வி பயின்றுள்ள இவர், வங்கியில் கிடைத்த வேலையினை தவிர்த்துவிட்டு வாத்துப்பண்ணை ஆரம்பித்து அதில் வெற்றியும் கண்டுள்ளார்.

தனது வாத்துப் பண்ணை மற்றும் இயற்கை விவசாயம் பற்றி பிபிசி தமிழுடன் பகிர்ந்துகொண்டார் ஸ்ராலினி.

வணிக மேலாண்மையில் எனது உயர்தர கல்வியினை முடித்த பின்னர், 2016ஆம் ஆண்டு வாத்து பண்ணையினை ஆரம்பித்தேன். கொக்குவில் பொற்பதி பகுதியில் எனது பண்ணை அமைந்துள்ளது.

உண்மையில் வாத்து வளர்ப்பு என்பது மிகவும் இலகுவான ஒன்றாகும். இயற்கையாக வளரக்கூடிய அசோலா என்கின்ற பாசியினத்தை நான் வளர்த்து அதற்கு உணவளிக்கிறேன். அதேநேரம் கடைகளில் கிடைக்கும் உணவுகள் மற்றும் மரக்கறிக் கழிவுகள் என்பன வாத்துகளுக்கு உணவாக வழங்கலாம்.

வாத்து என்பது எல்லா காலநிலைக்கும் ஏற்றவாறு வாழக்கூடியது. கோழிகளை எடுத்துக்கொண்டால் மழைகாலத்தில் தொடர்ந்து உயிரிழக்கும். ஆனால் வாத்து அவ்வாறு நோய் வாய்ப்படுவதில்லை. அதே நேரம் மழை, வெயில் மற்றும் குளிர் என எல்லா காலங்களிலும் வாத்துகள் உயிர்வாழும்.

நான் வாத்து வளர்ப்பினை தேர்வு செய்ததன் காரணம் என்னவென்றால், கோழி வளர்ப்பில் ஏற்படும் பாதக தன்மையினை நிவர்த்தி செய்யும் முகமாக தான் நான் வாத்து வளர்ப்பில் ஈடுபட்டேன்.

உதாரணமாக கோழிவளர்ப்பு என்பது நோயாளி ஒருவரை வைத்தியசாலையில் வைத்து பார்ப்பது போன்றதாகும், ஆனால் வாத்து வளர்ப்பில் குஞ்சு பொரித்து வளர்ந்து இறைச்சியாகும் வரையில் நோய் ஏற்படாது மருந்துகள் கொடுக்கும் தேவையும் இருக்காது.

வாத்து இறைச்சி, முட்டை என்பவற்றுக்குத் தற்போது மிகுந்த தேவையுள்ளது. 600ரூபாயிலிருந்து 1000 ரூபாய் வரையில் இலாபம் தரக்கூடியதாக உள்ளது.

நான் முழுக்க முழுக்க இயற்கை உணவுகளை வாத்துகளுக்கு வழங்குகிறேன். தாரா முட்டையினை அழகுகலை தொழில் சார் கலைஞர்களும் வாங்குகின்றனர் அதனைவிட தலைக்கும் பயன்படுத்துகின்றனர்.

கோழி முட்டை 2 இன் சத்து தாரா முட்டை ஒன்றில் உள்ளது.

சீருயிர் என்ற எனது இந்த பண்ணையின் நோக்கம் ஒரு பண்ணையாளர் தனது விலங்குகளுக்கு இயற்கையான உணவுகளை எவ்வாறு உற்பத்தி செய்து வழங்குவது என்ற விடயத்தை பரப்புவதாகும்.

நான் வாத்து வளர்ப்புடன் நின்றுவிடாது ஆடு வளர்ப்பு முயற்சியுடன் இயற்கை பூச்சிக் கொல்லி உற்பத்தி செய்து விற்பனை செய்யும் முயற்சியும் ஆரம்பித்துள்ளேன்.

இயற்கை பசளை ஆரம்பிக்கும் எண்ணம் எப்படி வந்தது என்றால், வடக்கு மாகாணத்தை பொறுத்தவரையில் இரசாயனம் விசிறும் மரக்கறிகளை பயன்படுத்துகிறோம்.

ஆனால் சில விவசாயிகள் மக்கள் நலன் கருதி இயற்கை விவசாய முறையினை பின்பற்றுகின்றனர் அவர்களுக்கு இருக்கின்ற பிரச்சினை இயற்கையான கரைசல்கள் மற்றும் பசளைகள் கிடைக்கப்பெறாமை அதை நான் கவனத்தில் கொண்டு அந்த உற்பத்திகளை செய்து வழங்குகின்றேன்.

வேப்பிலை கரைசல், உள்ளிக் கரைசல் எனப் பலவகையான



சீருயிர் வாத்துப்பண்ணையின் நிறுவுனர் ஸ்ராலினி கூறுகிறார்

கரைசல்கள் அதாவது ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையான பிரச்சினைகளை தீர்க்கும் முகமாக தயாரிக்கப்படுகிறது. உதாரணமாக பூச்சிப் பிரச்சினை உள்ளது என்றால் நாம் இரசாயன மருந்துகளை வாங்கி பயன்படுத்தாமல் இவ்வாறு இயற்கை கரைசல்களை பயன்படுத்த முடியும்.

அதுமட்டுமல்லாமல் தற்போது நாம் சமூகத்தில் அருகிவரும் கற்றாழை, புதினா, சிறுகுறிஞ்சா, வல்லாரை போன்ற மூலிகைகளை தேடி எடுத்து அதனை வளர்த்து விற்பனை செய்கின்றேன்.

வடக்கு மாகாணத்தில் நிறையப் பெண்கள் போரினால் பாதிக்கப்பட்டுள்ளனர் சில பெண்கள் அவர்களுடைய பட்டப்படிப்பினை முடித்து வேலையின்றி உள்ளனர். அவர்கள் எதற்கும் கவலைப்படாது எங்களால் எதையும் சாதிக்கமுடியும் என நினைத்து முயற்சித்தால் வெற்றியடையாலாம். இவ்வாறு நாமே முன்வந்து நமது சிந்தனைக்குரிய தொழில் செய்தால் கட்டாயம் அதில் நாம் சாதிக்கமுடியும்.

நான் வாத்துப் பண்ணை ஆரம்பிக்கும் போது வங்கியில் சிறிய கடன் பெற்றுத்தான் ஆரம்பித்தேன். இது போன்று பிற பெண்களும் சுய தொழில் தொடங்கும் போது அரச திணைக்களங்களும் வங்கிகளும் உதவி செய்தால் அவர்களை ஊக்கிவிப்பதாக அமையும்.

குறைந்த வட்டி வீதங்களில் நுண்கடன்களை வழங்கவேண்டும். எனக்கு வங்கி, அரசதிணைக்களங்கள், புனர்வாழ்வு அமைச்சகம் மற்றும் தொண்டு நிறுவனத்தின் உதவிகளைப் பெற்று எனது நிறுவனத்தை நான் விஸ்தரித்தேன் என்கிறார் ஸ்ராலினி.

நான் இந்த பண்ணையினை ஆரம்பிக்கும் போது எனது வீட்டின் ஒத்துழைப்புடன் ஆரம்பித்தேன். படித்த படிப்புக்கு ஏற்ற வேலை செய்யவேண்டும் என வற்புறுத்தும் பெற்றோருக்கு மத்தியில் எனது தாய் தந்தை எனது இந்த முயற்சிக்கு ஆதரவு தந்தார்கள் என்று கூறுகிறார் ஸ்ராலினி.

நன்றி பிபிசி

# போட்டிகளைச் சமாளிப்பது எப்படி?



எப்போதுமே ஓட்டப்பந்தயத்தில் தனியாக ஒடினால் சுவாரசியமே இராது. நம் திறமையும் வெளிப்படாது. மாணவராகட்டும், அலுவலகராகட்டும், தொழிலாளராகட்டும் ஏன் ஒரு மாதர்சங்கப் பதவியாகக் கூட இருக்கட்டும், சுவையான போட்டிதான் நம்மைத் தீவிரமாகச் செயற்படுத்தும். சக்தியாக விளங்குகின்றது.

தன்னிடமிருந்து பிரிந்துபோன ஒரு வேலையாள் தனக்கு எதிராக ஒரு கடையைப் போட்டது பற்றி மிகவும் கவலைப்பட்டு இனி என் தொழில் பாதிக்கும் என்று சோர்ந்து பேசினார் ஒருவர். 'உங்கள் பிசினஸ் இனிமேல்தான் சூடு பிடிக்கப் போகிறது.: என்றென் அவரிடம். இவ்வளவு நாள் வரை தனிக்காட்டு ராஜாவாக இரந்தீர்கள். நடக்கிற தொழில் நடக்கட்டும் என்று இருந்தீர்கள். இனி அப்படி உங்களால் இருக்க முடியாது. போட்டி வந்துவிட்டது. இனிமேல் வாடிக்கையாளர்களை நீங்கள் நன்கு கவனிப்பீர்கள். சரக்கை அதிகமாக்குவீர்கள். அதிகநேரம் கடையைத்திறந்து வைத்திருப்பீர்கள். புது வாடிக்கையாளர்களைப் பெறக் களத்தில் இறங்குவீர்கள். இவற்றை உங்கள் வேலையாள் செய்ய மாட்டான். அப்படியே செய்தாலும் அவனைவிடக் கூடுதலாக ஒருபடி மேலே போவீர்கள்.
இது உறுதி. ஆனால் இந்த முக்கியமான திருப்பத்தில் சோர்ந்து மட்டும் போய்விடாதீர்கள். உங்கள் ஆள் முந்திவிடுவான்: என்றேன். இன்று 'நம்ம பிஸினஸ் கொஞ்சம் கூடப்பாதிக் கலைங்க, சொல்லப்போனா கூடியிருக்கு. ஆனா அவனுக்கும் ஏதோ நடந்துக்கிட்டிருக்கு: என்றார்.

ஒரு நிறுவனத்தில் அக்கவுண்ஸ் பிரிவில் கணக்கு எழுதிக்கொண்டிருந்த ஒருவர், தனக்குப் போட்டியாக இன்னொருவனைச் சேர்த்துவிட்டார்கள் என்று போகிற போக்கில் தன்னை நீக்கிவிடுவார்கள் என்றும் கவலைப் பட்டார்: அப்படியில்லை. முன்னிலும் ஈடுபாட்டுடன் வேலையைப் பாருங்கள், உங்களின் அருமையை நிர்வாகத்திற்கு உணர்த்துங்கள். 'பழைய ஆள்மாதிரி வராதுப்பா: என்று நிர்வாகிகள் சொல்லும்படி பார்த்துக்கொள்ளுங்கள். மாறாக எப்படி இந்த ஆளைச் சேர்க்கப் போயிற்று என்று எதிர் நடவடிக்கையில் இறங்கிவிடாதீர்கள். இப்படிச் செய்தால் உங்கள் சீட்டுக் கிழிக்கப்படுவது உறுதி: என்றேன்.

நாமெல்லாம் முடியாது என ஒடி ஒளிந்தும், சாக்குப் போக்குத் தேடுவதை நிறுத்திக்கொண்டு போட்டியிலிருந்து விலகுவதைவிட முடிந்தவரை முயன்று பார்க்கவேண்டும்.

இப்போட்டியில் தோற்றாலும் பெரிதும் முயன்றோம் என்கிற திருப்தி இருக்கும். அது மட்டுமல்ல, தோல்வியிலும் சிறிதளவு கௌரவம் மிஞ்சும்.

போட்டி கிளம்பியதும் மற்ற கவனங்களைக் குறைத்துக் கொண்டு, புதிய உத்திகள் வரம்பு மீறாத தந்திரங்கள் ஆகியவற்றைக் கையாண்டு போட்டிகளை அருமையாகச் சமாளிக்க வேண்டும். அதே நினைப்பாக இருக்க வேண்டும்.


நீ 80 ஆ நான் 90 ! நீ 95 ஆ? நான் 981 என்று களத்தில் சவாலுடன் இறங்கவேண்டும். நீ 80 ஆ? சரிசரி எனக்கு 40 போதும் என்றா விட்டுக்கொடுப்பது ? வெட்கம்!

உலகம் சாதனைகள் அனைத்தும் ஏற்கனவே உருவாக்கப்பட்ட சாதனைகளை முறியடிக்கும் நோக்கத்துடன் செயலில் இறங்கியவர்களால் சாதிக்கப்பட்டவைதாம்.

ஒருவரது வளர்ச்சியையும் போட்டியையும் பார்த்துவிட்டு நீட்டி நிமிர்ந்து படுத்துவிடுவார்கள். எதிர்க்கு வலியப்போய் மணிமகுடம் சூட்டிவிடுவார்கள்.

லேனா தமிழ்வாணன்

## மகளிர் பகுதி



# இளவயதினரைக் கையாள்வது எப்படி?

### பெற்றோர்களுக்கான சிறு தகவல் ஒன்று

தற்போது எம்மைச் சுற்றிக் காணப்படும் சூழலில் இளைஞர்களின் போக்குகள் பலவிதமாக மாறுபட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. குழந்தைகளின் எழுச்சி மிக்க நடவடிக்கையால் பல குடும்பங்கள் சந்தோஷமாக இருப்பதும், அவர்கள் ஆரோக்கியமற்ற செயற்பாடுகளால் பல குடும்பங்கள் சிதைந்து போயிருப்பதையும் நாம் பார்க்கிறோம். பொதுவாக



ஆரோக்கியமான குடும்பம் என்ற விடயத்தைத் தீர்மானிக்கக் கூடிய சக்தியாகவும் குழந்தைகள் காணப்படுகிறார்கள். பொதுவாகக் குழந்தைகளை வளர்ப்பது எப்படி? அதிலும் ஆண் குழந்தைகளை வளர்ப்பது எப்படி? எனப் பல கேள்விகள் மனதில் எழுவது உண்டு. அவற்றிற்குச் சரியான பதில்களும், அது சார்ந்த புலமையாளர்களிடத்திலும் உண்டு. முதலில் அவர்களின் நட்பு வட்டத்தை வைத்து அவர்களைப் புரிந்து கொள்வதற்குரிய அறிவினைப் பெற்றோர்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டும். ஒரு குழந்தை கொண்டுள்ள நட்பு வட்டத்தை வைத்து அவனைப் புரிந்துகொள்ளலாம். அந்தளவுக்கு அவர்களின் உயர்விலும் தாழ்விலும் அந்த நட்பு ஆதிக்கம் செலுத்துகிறது. பலரின் உயர்வுக்கும், தாழ்வுக்கும் நண்பர்கள் காரணமாயிருந்திருப்பதால் நட்பு என்பது இலகுவாக உதாசீனப்படுத்தக் கூடியதொன்று அல்ல. ஆனால் அது தொடர்பான விடயங்களைப் பெற்றோர் எப்படிக் கையாளப் போகிறார்கள்? அதற்கு என்ன செய்ய வேண்டும்? அதனை அறிவதற்குத் தொடர்ந்து படியுங்கள்.

**இளமைப் பருவத்தில் நண்பர்கள் அவ்வளவு அவசியமா? அந்தப் பருவத்தில் ஆண் குழந்தைகள் நண்பர்கள் சொல்வதையே அதிகம் கேட்பது ஏன்? நல்லதொரு நட்புச் சூழலை அவர்கள் அமைத்துக்கொள்ளப் பெற்றோர்கள் என்ன செய்ய வேண்டும்.?**

மாணவப் பருவத்தில், படிப்பைவிட பல புறக்காரணிகளே அவர்களுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கின்றன. படிப்பைப் பொறுத்தவரை அதனை பொறுப்பு எனவும் , கடமை எனவுமே பார்க்கிறார்கள். இந்த வயதில் தன் சுக துக்கங்களைப் பகிர்ந்துகொள்ளத் தனக்கென ஒரு நண்பன் இருக்கிறானா? என்று தேடுகிறார்கள். அந்த நண்பன் என்ற உணர்வே அவர்களுக்குச் சந்தோஷத்தைத் தரும் விஷயமாகக் காணப்படுகிறது. 'என்னைப் புரிந்து கொள்ள என் நண்பன் இருக்கிறான்' என்ற மானசீகமான துணை, பதின்பருவக் குழந்தைகளுக்கு மிகப்பெரிய மன ஊக்கத்தைக் கொடுக்கிறது. மன உளைச்சலில் இருந்து காக்கவல்ல, மன அழுத்தம் தணிக்கவல்ல நல்லதோர் உறவு என நண்பன் இருக்கிறான். எனவே, கண்டிப்பு, ஒழுக்கம் என்ற பெயரில் ஆண் குழந்தைகளை நண்பர்கள் அல்லது நட்பு வட்டம் இல்லாத குழந்தையாக வளர்த்தெடுக்காதீர்கள். அது அவ்வளவு ஆரோக்கியமான விடயமல்ல. வாழ்க்கையில் ஒவ்வொரு தருணத்திலும் நல்ல நண்பர்கள் அவர்கள் உடனிருக்க வேண்டும். அதை உணர்ந்து, அந்த உயிரோட்டமான உறவை பெற்றோர்கள் அவர்கள் பெறுவதற்குத் துணையாக இருக்க வேண்டும். நட்பு இல்லாதவர்களுக்கு அதன் விளக்கத்தைச் சொல்லி ஆரம்பத்தில் இருந்தே அவர்கள் வாழ்க்கையில் நல்ல நட்பினை இணைத்து விட வேண்டும் என்கின்றனர் குழந்தைகள் பற்றிய ஆய்வாளர்கள்.

குழந்தைகள் பதின்பருவத்தை எட்டும்வரை அப்பா அம்மா சொல்வது சரியாக இருக்கும் என நம்புவார்கள். 12 வயதுக்குப் பின்னேயே, இந்த மனநிலை மாறுகிறது. அப்போதுதான் பருவமடைவதற்கான ஹார்மோன் சுரப்பிகளினால் மூளையின் தகவமைப்பு மாறுகிறது. தங்கள் வயதையொத்த பையன்கள் என்ன சொல்கிறார்களோ, செய்கிறார்களோ, அதோடு தானும் பொருந்திப்போக வேண்டும் என்கிற உந்துதல் அவர்களுக்குள் உண்டாகிறது. நண்பர்களைப்போலவே தாங்களும் இருக்க அவர்கள் விரும்புவார்கள். 13 வயதில் இருக்கும் பையனிடம், 'நண்பனென்றால் இப்படித்தான் இருக்கவேண்டும், அப்போதான் அவன் நல்லவனாக இருப்பான்' என்று சொல்வீர்களானால் , உங்கள் மகன் அதனைச் செவிமடுத்துக் கேட்பது கடினம். ஆனால், சிறிய வயது தொடக்கம் அவனுக்கு நட்புக் கதைகள் சொல்லி, நண்பனென்றால் இப்படித்தான் இருப்பான், இருக்க வேண்டும் என்று உப கதைகள் சொல்லி வளர்ப்பதன் மூலம், நல்ல நட்பு என்றால் என்ன என்கிற அடிப்படையை அவனுக்குப் புரியவைக்க முடியும்.

**நட்புக் கதைகள் என்றால் என்ன? அத்தகைய கதைகளை எப்படிப் பெற்றுக் கொள்வது?**

பெற்றோர்கள் தங்களின் நண்பர்கள் எப்படிப் பட்டவர்கள், அவர்களுடனான அனுபவங்களை அவர்களுக்குச் சொல்லலாம். தமது வாழ்க்கையில் எப்படி எப்படியெல்லாம் உதவுகிறார்கள்? அவர்களுடனான மானசீகமான உறவுகளைப்



பற்றிச் சொல்லலாம். நட்பு விஷயத்தில், ஆண் குழந்தைகள் தாயைவிட தந்தையின் வார்த்தைகளையே அதிகம் உள்வாங்கிக் கொள்வார்கள் என்பதால், இதில் தந்தையின் பங்களிப்பு அதிகமாக இருக்கலாம். 'எனக்கு இப்படி ஒரு நண்பன் இருந்தான், அவனிடம் இருந்துதான் நான் இந்த நல்ல விஷயங்களை எல்லாம் கற்றேன்.

அவன் அவசர நேரங்களில் எல்லாம் எனக்கு உதவி செய்து எனக்குப் பக்கபலமா இருந்தான்' என்று சொல்லலாம். அதேபோல, தாங்கள் படித்துக் கொண்டிருந்த போது ஆசிரியர்களிடம் மரியாதை இல்லாமல் பேசிய ஒரு சக மாணவனைப் பற்றியும் அதனால் அவனுக்கு ஏற்பட்ட இழப்பு பற்றியும் காலப்போக்கில் அவன் தனது தவறை உணர்ந்து ஆசிரியரிடம் மன்னிப்புக் கேட்டு மனம் திருந்திய கதைகளையும் அதனால் அவனிடமிருந்து தனது சகமாணவர்கள் எல்லோரும் விலகியிருக்க வேண்டி இருந்ததையும் கதைகளாகச் சொல்லலாம். எப்பவும் நல்ல நண்பர்களே எம்மை நன்றாக வழி நடத்தக் கூடியவர்கள். அவர்களுடனே நாங்கள் இணைந்து இருக்கவேண்டும் என்று அன்போடும், அவர்களுக்குப் புரிகின்ற வகயிலும், நட்பாகக் குழந்தைகளுக்குச் சொல்ல வேண்டும். அது அறிவுரை சொல்வதாக இல்லாமல், கதைகளைச் சொல்வதைப் போல அவர்களுக்குச் சுவாரஸ்யமாக இருக்க வேண்டியது மிக முக்கியம். ●




# மஞ்சள் மகிமை



மஞ்சள், இந்திய சமையலறையில் மட்டுமே பயன்படுத்தப்படும் மருத்துவ குணம் நிறைந்த பொருள். அதனால் தான், எந்த சமையலாக இருந்தாலும், மஞ்சள் தூளை சிறிதளவாகவேனும் தூவுவதை வழக்கமாக மக்கள் கடைபிடித்து வருகின்றனர். குறிப்பாக தென்னிந்திய சமையலில் மஞ்சளுக்கென தனி இடம் உண்டு. அஞ்சறைப் பெட்டியில் மஞ்சள் தூள் நிச்சயம் இடம் பெற்றிருக்கும். உடல் அழற்சியை தடுத்தல், காயங்களுக்கு மருந்தாகுதல், நோய் எதிர்க்கும் சக்தியாகச் செயல்படுதல், தீக்காயங்களால் ஏற்பட்ட புண்களை மெல்ல மறைக்கும் குணம் உள்ளிட்டவை இதன் சிறப்பம்சங்களாகும்.

**மஞ்சளின் நற்குணங்கள்:**

1. உடலில் ஏற்பட்டுள்ள காயங்களால் நோய்த்தொற்று ஏற்படாமலும், பாக்டீரியா தாக்குதல் ஏற்படாமலும் தடுக்க மஞ்சள் பயன்படுகிறது. காயங்களில் தொற்று ஏற்பட்டு அதனால் அழுகிய நிலை ஏற்படாமலும் மஞ்சளால் தடுக்க முடியும்.

2. உடலில் உள்ள செல்களில் பாதிப்புகள் ஏற்படுவதைத் தடுக்கும் தன்மை மஞ்சளில் உள்ள மஞ்சளகத்திற்கு உள்ளதால், இளமைப் பொலிவுடன் எப்பொதும் இருக்க முடியும். இளம் வயதிலேயே முகத்தில் வறட்சி, தோல் சுருக்கம் ஏற்படுவதை இதனால் தடுக்க முடியும்.

3. பருக்கள், வெடிப்புகள் மட்டுமல்லாமல், முகத்தில் ஏற்படும் பள்ளங்கள், உடலில் ஆங்காங்கே சிவப்பு திட்டுகள் ஏற்படுவதை தடுக்கும் தன்மையும் மஞ்சளுக்கு உண்டு.

4. எண்ணெய் முகம் உள்ளவர்கள் மஞ்சளை பயன்படுத்தினால், அவர்களுக்கு எண்ணெய் சுரப்பு குறைந்து முகம் பொலிவு பெறும். தோல் விரைவில் தளர்ந்துவிடாமல் தடுப்பதன் மூலம் இளமையுடன் காட்சியளிக்க முடியும்.

5. மஞ்சள் மூலம் வீட்டிலேயே ஃபேஸ் மாஸ்க் செய்து பயன்படுத்தலாம். சிறிதளவு மஞ்சளை பால் அல்லது யோகர்ட்டில் சேர்த்து கலவையாக கலந்துகொண்டு அதனை முகத்தில் தடவவும். சிறிது நேரம் கழித்து குளிர்ந்த நீரால் முகத்தைக் கழுவினால், கரும்புள்ளிகள், தளர்வுகள் மறையும். முகம் மென்மையாகும்.முகத்தில் காணப்படும் துளைகளும் மறைந்து சமமாக காட்சியளிக்கும். ●

# 'கண்களில் கருவளையமா' கவலை வேண்டாம்'



கண்ணை நாங்கள் எப்படி பாதுக்காக்க வேண்டும்? கண்ணில் கருவளையம் வந்துவிட்டால் கவலைதான். அதை வராமல் வருமுன் காக்க என்ன செய்ய வேண்டும்? இதோ சிறிய தகவல்கள், உங்களுக்காக...

அரிசி, கருஞ்சீரகம் இரண்டிலும் ஒவ்வொரு தேக்கரண்டி எடுத்துக் கொள்ளுங்கள். அவற்றை அரை கிளாஸ் அளவு நீரில் போட்டுக் கொதிக்க வைக்கவும்.பின்பு அந்த நீரை ஆற வைத்து வடிகட்டி அதில் றோஸ் வாட்டரைக் கலந்து கொள்ளவும்.தினமும் இரவில் இந்த நீரை பஞ்சினால் தொட்டு கண்களில் வைத்து வரக் கருவளையம் வேகமாக மறையும்.

ஒரு பாத்திரத்தில் நீரை எடுத்து நன்றாக கொதிக்க வைத்து அதில் சாமந்தி இதழ்களை போட்டு மூடி வைக்கவும் அதனை அப்படியே குளிர்சாதனப் பெட்டியில் வைத்து அவ்வப்போது பஞ்சினால் கண்களில் ஒற்றிக் கொள்ளுங்கள். உடனடியாக பலன் தரும்.

தாமரை பூ இதழை தண்ணி விடாமல் அரைத்து அதனுடன் விளக்கெண்ணெய் மற்றும் தேன் 1 கரண்டி கலந்து 7 மணி நேரம் அறை வெப்பத்திலேயே வைத்திருங்கள். பின்னர் அதனை குளிர்சாதனப் பெட்டியில் வைத்து, இரவுகளில் இந்த கலவையைக் கண்களைச் சுற்றிப் போடுவதால் விரைவில் பலன் தெரியும்.

இந்த முறைகளைப் பின்பற்றிக் கருவளையத்தை மறைக்கலாம். ஆனால் இரவு வேளைகளில் முக்கியமா ரீவியை நீண்ட நேரம் பார்க்காதிருக்க வேண்டும். கைத்தொலைபேசியில் நீண்ட நேரம் உரையாடக் கூடாது. இவற்றைத் தவிர்த்தால் நீங்கள் கருவளையம் வருவதிலிருந்து விடுபடலாம். ●

# அந்த ஒரு நிமிடம்...

எஸ்.கணபதி





பென்சன் எடுத்தாயிற்று. ஆறுதலாக இருக்கலாம் என்றால் அதற்கு ஊர் மக்கள் விடுவதாக இல்லை. அவர்கள் மேகநாதனிடம் இரண்டு மூன்று தடவைகள் வந்து போய்விட்டனர். அண்மையில்தான் பேராசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர் மேகநாதன். அவர் தனது தனிப்பட்ட வாழ்க்கையிலும் சரி பொது வாழ்க்கையிலும் சரி மிகவும் கண்டிப்பானவர். கண்ணியமும் ஒழுக்கமும் நிரம்பப் பெற்றவர். சட்டமும், ஒழுங்கும் பிறழ்வு படக்கூடாது என்று எண்ணுபவர்.

அதனால்தான் ஊரவர்கள் இடைவிடாது அவரிடம் வந்து போகிறார்கள்.

இன்றும் சனசமூக நிலையத்திலிருந்து அவர்கள் வந்திருந்தார்கள். பொதுக்கூட்ட அழைப்போடு வந்திருந்தவர்களை வரவேற்றுப் பேசிக் கொண்டிருந்த மேகநாதனிடம் அவர்கள் தமது கோரிக்கையை முன்வைத்தனர். பொதுக் கூட்டத்தில் மேகநாதனைத் தலைவர் பதவிக்கு முன்மொழிவதற்கு அவர் அனுமதியை வேண்டியதாக அந்தக் கோரிக்கை அமைந்திருந்தது. அதனை மறுத்த மேகநாதனை அவர்கள் விடுவதாக இல்லை. "பேருக்கு இருங்கள். மிகுதியை நாங்கள் பார்த்துக் கொள்ளுகிறோம்" என்றனர்.

ஊரில் மேகநாதனுக்கு இருக்கும் பெயரையும், நன்மதிப்பையும் கருத்திற் கொண்டு வைக்கப்பட்ட கோரிக்கை அது. அவருக்கு முன்பாகப் பல ஊர்ப் பிரபலங்கள் அமர்ந்திருந்தனர். அவர்களுக்கு முன்பாகத் தனக்கு விடுக்கப்பட்ட அந்த வேண்டுதலை தட்டிக் கழிக்க முடியாதபடி அதனை மேகநாதன் ஏற்றுக் கொண்டார்.

மேகநாதன் தலைவராக வந்த பின்பு சன சமூக நிலையத்திற்கெனத் தனியாக ஒரு கட்டடமும், வாசிக சாலையும் அமைக் கப்பட்டது. மேகநாதனிடம் பல்கலையில் படித்த பலர் புலம்பெயர்ந்து வெளிநாடுக ளில் இருக்கிறார்கள். மேகநாதன் தலை மைப் பொறுப்பை ஏற்றதும் அவர்கள் தாமாக முன்வந்து பணமாகவும், பொருட்களாகவும் சனசமூக நிலையத்துக் குக் கொடுத்து வருகிறார்கள். அப்படி அண்மையில் ஒரு தொகுதி புத்தகங்களை ஒருவர் வந்து கொடுத்துவிட்டுச் சென்றி ருக்கிறார். பல வழிகளில் உதவிகள் வரத்தொடங்கின.

ஊர் மக்களில் வசதி அற்றவர்கள் குடும்பத்தில் பிறந்த பல பிள்ளைகள் படிப்பதற்காகப் பல வசதிகள் செய்யப்பட் டன. அந்த ஊரைச் சார்ந்த வெளிநாட்டில் இருப்பவர் உள்ளூரில் இருக்கும் ஒரு வறுமைப்பட்ட குடும்பத்தவருக்குரிய அடிப்படை வசதிகளைக் கவனிப்பதான ஏற்பாட்டை மேகநாதன் செய்தபோது ஊரே அவரைக் கொண்டாடியது. ஊரிலுள்ளவர்கள் சிறு சிறு குடும்பப் பிணக்குகள் கூட மேகநாதனுக்கு முன்பாகச் சரி செய்யபட்டன.

ஒரு நாள் சனசமூக நிலையத்தைச் சேர்ந்த பலர் அவர் வீட்டின் முன்பாகக் கூடினர். "யார் பூனைக்கு மணி கட்டுவது?" என்று எண்ணிப் பின்வாங்கினர். கடைசியில் ஒருவர் வாய் திறந்தார். "ஐயா உங்களுக்கு ஒரு பாராட்டு விழா வைக்கிறதா யோசிக்கிறம்" என்றார் அவர். கூட்டத்தினரைக் கோபமாகப் பார்த்த மேகநாதன் " என்ன இலஞ்சமா?" எனக் கேட்டவர், பெருவிரலால் எல்லோரையும் எழுந்து போகுமாறு சைகை காட்டினார். அதற்கு மேல் அங்கு நிற்பது அவளவு பொருத்தமற்றதென உணர்ந்த அனைவரும் மெல்ல எழுந்து சென்றுவிட்டனர்.

அன்று காலையும் ஒருவர் வந்திருந்தார். அவர் கொண்டு வந்த செய்தி சற்று மேகநாதனைச் சிந்திக்க வைத்தது. அரசியல் செல்வாக்குகள் உள்ள ஒருவன் ஊரின் மையப்பகுதியில் சந்தையை ஒட்டி சாராயத் தவறணை ஒன்றினை அமைக்க அனுமதி பெற்றிருக்கிறார் என்ற செய்தியோடு வந்தவர் ஒரு வித பதற்றத்தோடு காணப்பட்டார். "உதை விடக்கூடாது ஐயா" அவர் சமூகத்தின் சார்பில் தன்னிடம் கெஞ்சி நிற்பதாக அவர் உணர்ந்தார். "பயப்படாதையுங்கோ. தவறணை வராது" என அவரைப் பார்த்து மேகநாதன் நிதானமாகச் சொன்னார்.

அன்றே அவர் கலால் திணைக் களத்தோடு தொடர்பு கொண்டார். அரசியல்வாதிகளைப் பார்த்தார். சட்ட வல்லுனர்களோடு கலந்தாலோசித்தார். தவறணையை நிறுத்துவதற்காகச் சந்திக்க வேண்டிய அனைவரையும் அவர் சந்தித்தார். சென்ற இடங்களி லெல்லாம் இவரிடம் படித்த மாணவர்கள் பலர் இருந்தனர். "சேர் அதை நாங்கள் பாத்துக் கொள்ளுறம். ஏதாவது தேவை என்றால் நீங்கள் வராதையுங்கோ. போன் பண்ணுங்கோ. நாங்கள் வந்து உங்களைப் பார்க்கிறம்" என்றனர். ஒரு ஆசிரியரின் பெறுமதி எப்படிப்பட்டது என்றதை இப்படியான சந்தர்பங்களில் தான் மேகநாதன் அதிகம் உணர்ந்து கொண்டார்.

தொடர்ந்த சில நாட்களின் பின்னர், ஒரு காலைப் பொழுது. மேகநாதன் தட்டு ஒன்றினைக் கையில் ஏந்தியவாறு பூக்களைப் பறித்துக் கொண்டிருந்தார். அவர் வீட்டுக்கு முன்பாதக ஒரு கார் வந்து நின்றது. அதிலிருந்து ஒருவர் இறங்கி வந்தார். அவர் தன்னை ஒரு அரசியல்வாதி என அறிமுகப்படுத்திக் கொண்டார். பல இலட்சங்கள் கொடுத்தே சாராயத் தவறணைக்குரிய அனுமதியைப் பெற்றதாகவும் அதற்குத் தடையாக நிற்க வேண்டாம் எனவும் கெஞ்சினான். மேக நாதன் அதற்கு மறுக்கவே அவர் ஒரு மதிப்பிற்குரிய பேராசிரியர் என்றும் பாரா மல் அவன் அவரோடு தர்க்கப்பட்டான். அவனை அங்கிருந்து போகுமாறு மேகநாதன் சத்தமிட்டார். அவன் போய்விட்டான்.

**காலை 6 மணி 34 நிமிடம் 12 செக்**

வழமைபோல அதிகாலையில் எழுந்து தனது கடன்களை முடித்துக் கொண்டு பறித்த பூக்களோடு மேகநாதன் கோயிலுக்குப் புறப்பட்டார். ஒரு விழாத் தொடர்பாக அவரைக் கௌரவ விருந்தி னராக அழைப்பதற்குச் சிலர் வந்திருந்த னர். அவர்களிடம் பேசி விட்டுப் புறப்படத் தயாரானபோது ஒரு தாய் தனது பிள்ளையோடு வந்திருந்தார். சன சமூக நிலையத்தினால் வழங்கப்படும் உதவித் தொகையின் மூலம் தன் மகன் படித்து வருவதாகவும் அவன் எழுச்சிக்கு உதவி யவர் என்ற வகையில் அவனின் பிறந்த நாள் அன்று மேகநாதனிடம் ஆசிர்வாதம் வாங்கிச் செல்ல அவள் தனது மகனைக் கூட்டிக் கொண்டு வந்திருப்பதாகவும் அவள் சொன்னாள். மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு செல்லப் புறப்பட்ட அவர் அதனை நிறுத்தி விட்டு வீட்டின் உள்ளே சென்றார். கையில் ஒரு சிறிய புத்தக மொன்றோடு வந்தார். "இலட்சியக் குழந்தை" என்ற சுவாமி அரவிந்தரினால் எழுதப்பட்ட அந்த நூலை அந்தச் சிறுவ னிடம் கொடுத்து ஆசிரவதித்துவிட்டு அவர் புறப்பட்டார்.

**காலை 6 மணி 40 நிமிடம் 42 செக்**

கோயிலில் பூசை முடிந்ததும் மேகநாதன் வெளியே வந்தார். சற்றுத் தொலைவில் இருக்கும் சனசமூக நிலையத்துக்கு முன்பாக வந்து நின்று அதனை அண்ணாந்து ஒரு முறை பார்த்துக் கொண்டார். அங்கு பணிக்கு நின்றவரிடம் அன்று செய்ய வேண்டிய சில பணிகளைச் சொல்லிவிட்டுப் புறப்பட்டார்.

**காலை 6 மணி 42 நிமிடம் 10 செக்**

கோயிலுக்குச் சற்றுத் தொலைவி லுள்ள வளைவில் திரும்பி வடலிகள் நிறைந்த அந்த வழவைத் தாண்டியி ருக்க மாட்டார் மேகநாதன். தனது மோட்டார் சைக்கிளை ஏதோ ஒன்று வந்து தாக்கியதாக மட்டும் உணர்ந்ததற்கு மேல் அவர் நினைவில் ஒன்றும் இல்லை.

**காலை 6 மணி 43 நிமிடம் 12 செக்**

அவருக்குப் பின்பாக வந்தவர்கள் மேகநாதனைப் பிடித்து நிறுத்தி ஒரு முச்சக்கரவண்டியின் உதவியோடு வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்றனர். "ஐயாவுக்கு பெலமா அடிபட்டிட்டுதாம்." "சேருக்கு ஒண்டும் இல்லை காலிலைதான் லேசா அடிபட்டிட்டுதாம்" "மாஸ்டருக்கு என்ன நடந்தது எண்டு தெரியேல்லை" என்று பல வழிகளிலும் ஊருக்குள் செய்தி பரவியது. மேகநாதனின் வீட்டு முற்றத்தில் பலர் கூடி நின்றனர். வைத்தியசாலையையும் பலர் முற்றுகை இட்டனர்.


**காலை 6 மணி 44 நிமிடம் 12 செக்**

மேகநாதனின் வீட்டின் முற்றத்தில் குழுமியிருந்தவர்கள் நடுவே ஒருவன் பரபரப்புடன் பேசிக் கொண்டிருந்தான். தான் மேகநாதனுக்குப் பின்னால் துவிச்சக்கர வண்டியில் வந்ததாகவும் அவரை கறுத்த மோட்டார் கார் ஒன்று வந்து மோதிவிட்டுச் சென்றதைத் தான் கண்டதாகவும் அவன் சொன்னான்.

"காரின்ரை நம்பரைப் பாத்தனியே?" என ஒருவர் கேட்டார். "பாக்கேல்லை. ஆனால் அது அடிக்கடி கீயான்ரை கராச்சுக்கு வாறதைப் பாத்திருக்கிறன்" என்றான் அவன். "கீயாவுக்குப்போனைப் போட்டுக் கேளடா. அது ஆற்றை கார் எண்டு" என ஒருவன் கத்தினான். கீயாவுக்குத் தொடர்பு ஏற்படுத்தப்பட்டது. அது மேகநாதனுடன் தர்க்கப்பட்ட அந்த அரசியல்வாதியினுடையதென்று தெரியவந்தது. "வம்.... பிறந்தவன்.." என கூட்டத்தின் நடுவே இருந்து ஒருவன் கத்தினான். "எடடா மோட்டச் சைக்கிளை" எனப் பல குரல்களின் நடுவே மோட்டார் சைக்கிள்கள் பறந்தன.

**காலை 6 மணி 45 நிமிடம் 12 செக்**

அந்தக் கறுத்தக்காரை ஆரோ கொளுத்திப் போட்டினமாம். எரிஞ்சு கொண்டிருக்காம். என ஒருவன் வந்து சொன்னான். "சேருக்கு அவ்வளவு பெரிசா ஒண்டும் இல்லையாம். காலி-லைதான் லேசான காயம்" என்ற செய்தியையும் அவன் சொல்லிக் கொண்டிருந்தான். ■





# ஊடுருவி உலகநாதன்

நில அபகரிப்பினால் அத்துமீறிய குடியேற்றங்கள் அதிகரித்துள்ளன. இப்படி குடியேறுபவர்களுக்கான அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றுவதற்கு அரசு முன்னிற்பது அரசுடன் சேர்ந்து இயங்குபவர்களின் நடவடிக்கைகளில் இருந்து நன்கு தெரிகிறது.

கொக்கச்சான்குளம் கலாபோவஸ்வெவ ஆகவும், மணலாறு வெலிஓயாவாகவும் பெயர் மாற்றப்பட்டதில் இருந்து முகவரி இழந்த முகமாக மணலாறு காணப்படுகிறது.

குடியேறிய இடங்களின் எல்லைகள் மீள்நிர்ணயம் செய்வதிலும், வட்டாரங்களை பிரிப்பதிலும் முன்நிற்பவர்கள் தாங்கள் சர்சையை ஏற்படுத்தவில்லையாம் என்று சொன்னவர்கள் பக்கம் நிற்கும் ஆழ்வார் சொல்கிறார் தமிழர்களுக்கு வாழத்தெரியாதாம்.

வெலிஓயா ஒன்பது கிராம சேவையாளர் பிரிவுடன் பிரதேச செயலகமாக இயங்கி வருகின்றது. தற்பொழுது வெலிஓயாவுக்குள் வரும் நான்கு வட்டாரங்களையும் வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபையுடன் இணைக்குமாறு சிங்கள மக்களில் ஒரு பகுதியினர் கோருகின்றனர்.

வெலிஓயாவுக்கான வட்டார எல்லைகளை வவுனியாவுடனா? அல்லது முல்லைத்தீவுடனா? அல்லது அநுராதபுரத்துடனா? இணைப்பது என்ற சர்ச்சை அவர்களுக்குள் எழுந்துள்ளது.

இவற்றுக்கு காரணம், தமிழ் மக்களின் நிலங்கள் அபகரிப்பு, அத்துமீறிய சிங்கள குடியேற்றங்கள் என்பன போருக்கு முன்னரும் பின்னரும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் எல்லைகள் மீள்நிர்ணயம் செய்யப்படுவது தமிழர் இனவிகிதாசாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவது மட்டுமின்றி வடகிழக்கை நிரந்தரமாக பிரிப்பதற்கான முயற்சிகளாகவும் இந்த நடவடிக்கைகள் அமையும்.

இன்று வெலிஓயாவில் கல்வி வலயம் ஒன்று புதிதாக வரவுள்ளதாம். அதற்கான வேலைத்திட்டங்களை ஆழ்வார் துரிதகதியில் செய்து வருகிறாராம். ஆழ்வார் எங்கட ஆள் என்று எல்லோரும் அளந்தனர்.

நான் உங்கட ஆள் தான், ஆனால் அவர்களுடைய ஆளுந்தான் என்று செயற்படும் ஆழ்வாரிடம் எதனையும் எதிர்பார்க்க முடியாது. தான் போகும் போது இங்கு ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கும் என்று வரும்போதே சொன்னவர் அப்போது எல்லோரும் அவரைப் பற்றி நல்லாய் அளந்தார்கள்.

இன்று அது என்ன மாற்றம் என்பது பையப் பைய வெளிச்சத்துக்கு வருகிறது.

முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரங்கள் உட்பட விவசாய உபகரணங்கள் அனைத்தும் வெலிஓயாவில் குடியேற்றிய மக்களுக்கு வழங்கப்பட்டனவாம்.

ஆழ்வாரும் நிறைய செய்யத் திட்டம் போட்டுள்ளார். முதலில் கல்வியைப் பற்றி சிந்தித்துள்ளார். கல்வி செயலாளர் மாற்றம். முன்னர் கொழும்பில் உள்ள மேலிடத்தில் இருந்து இடமாற்ற கடிதம் வந்தும் இவர் இடம்மாறாதவர் இப்ப எப்படி இடம்மாறுகிறார் என்று பார்க்கிறீர்களா.

ஆழ்வார் அவரை வைத்து நிறைய வேலைத்திட்டங்களை செய்யவுள்ளாராம். அதனால் தான் என்னவோ அவரை போராளி என்றெல்லோ பாராட்டியுள்ளாராம். இந்த மண்ணில மக்களுக்காக உயிரைவிட்ட எத்தனை போராளிகளைப் பாாத்திருக்கிறோம் என்பது ஆழ்வாருக்கு தெரியாது.

தோட்டத்தில வந்து பயிரை கிளறிய கோழியை கலைத்தது போல நியமனங்கள் இடமாற்றம் செய்கிற குழுவை கலைத்துவிட்டாராம். வவுனியாவில் ஆழ்வார் தலைமையில் இடம்பெற்ற சமய மாநாட்டில் இவர்கள் பங்குபற்றாத காரணமாக இருக்கக் கூடும் என்றும் சொல்லப்படுகிறது.

ஆழ்வாருக்கு கீழே இருக்கிற ஒரே ஒரு குழு நியமனங்கள் இடமாற்ற குழுவாகும். இவர் பதவியேற்று வந்தவுடன் முதல் சந்தித்திருக்க வேண்டியது இந்தக் குழுவைத் தான். அதை தவறவிட்டுவிட்டு ஏனையவர்களைச் சந்தித்த பின்பு எல்லோருடைய முறைப்பாட்டையும் வாங்கி வைத்துக் கொண்டு இந்த குழுவை கூப்பிட்டு சந்தித்தாராம்.

இந்த குழு இவரை சந்திப்பதற்கு பல தடவை முயற்சி செய்ததுடன் எழுத்து மூலம் கடிதம் ஒன்றையும் அனுப்பினதாம். எல்லாவற்றையும் இவர் ஓரம்கட்டி வைத்துவிட்டு இரண்டாம் மாதக் கடைசியில் இந்தக் குழுவை கூப்பிட்டுக் கதைத்தாராம்.

இதனால் இந்த குழு பற்றி தப்பான அபிப்பிராயம் ஏற்பட்டு இந்த குழு திருப்தியற்றது என்ற குற்றச்சாட்டை வைத்தாராம். முதலிலே இந்த குழுவைச் சந்தித்து ஆழ்வார் கதைத்திருந்தால் உள்ள பிரச்சினைகளை அறிந்து விடயங்களை நகர்த்தி இருக்கலாம்.

பொது மக்கள் சந்திப்பு நாளில் பொறுப்பாளர்களை தன்னுடன் வந்து இரு என்றால் என்னென்று பொது மக்கள் பொறுப்பாளர்களிடம் பேசமுடியும். பொறுப்பாளர்களிடம் போக வேண்டாம் என்னிடம் வாருங்கள் என்று மறைமுகமாக எச்சரிக்கை விடுவது போன்று இந்த செயற்பாடு இருக்கிறது இதை ஏற்றுக் கொள்ள முடியுமா?

தனக்குரிய வேலையை அடையாளம் காண முடியாது இருக்கிறார். அதாவது தனக்குரிய வேலை இந்த மாகாணத்தில் இருக்கிறது என்பதை அறியாதவர் போல் இருக்கிறார். இந்த குழு தன்னிடம் இருக்கிறது என்பதை இனியாவது உணரட்டும்.

இவரிடம் தனிப்பட்ட செயலாளர் இணைப்புச் செயலாளராக இருப்பவர்கள் சேவையைப் பற்றி முன்பின் அனுபவம் இல்லாமல் இருப்பதால் தான் இன்று இவ்வளவு பிரச்சினைகள் எழுந்துள்ளன. இதன் காரணம் தான் நிர்வாக ஆளுமை உள்ளவர்களின் ஆலோசனை கிடைக்காததால் இந்த குழுவை கலைக்க வேண்டி வந்தது.

அதிகாரிகளை மிஞ்சி நிர்வாக உத்தியோகத்தர்கள் தலையீடுகள் இருப்பதுவும் அதிகாரிகள் தீர்மானம் எடுக்க முடியாமல் தள்ளப்பட்டுள்ளார்கள்.

ஒரு அதிகாரிகள் கூட்டத்தில் அனைவரையும் குரங்குகள் போல் ஒரு இடமாக இருக்காமல் தாவித்திரிகிறீர்கள் என்று பேசிய போது அதிகாரிகள் அதனை கேட்டுக் கொண்டு இருக்காமல் எழுந்து சென்றிருக்க வேண்டும். அவர்களுக்கும் சுரணை இல்லை போலும்.

கல்வியில் சிறப்புப் பட்டம் பெற்றவர்கள் கலாநிதிப் பட்டம் பெற்றவர்கள் பேராசிரியர்களை சேர்த்துள்ள ஆலோசனைக் குழுவில் சாதாரண தரம் படித்து நிர்வாக உத்தியோகத்தர்களாக வந்தவர்களையும் இணைத்தால் கல்வியில் உயர்ந்தவர்கள் வருவார்களா?. பிறகு எப்படி இந்தக் குழு மூலம் கல்வி முன்னேற்றம் அடையும் என்பது எனது கடைசிப் பெடியனுக்கும் தெரியும். இவருக்கும் தெரியும் ஆனால் என்ன கல்வி தொடர்பில் ஏதோ ஒரு செயற்பாட்டை செய்யவுள்ளார் என்பது தெரிகிறது. அது கல்விக்கானது மட்டும் என்று சொல்ல முடியாது. எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் சுதந்திரக் கட்சிக்கு இப்பவே ஆதரவு சேர்க்க வெளிக்கிட்டு விட்டார். அதனை வெளிப்படையாகவும் சொல்லி வருகிறாராம். ■



# நிலம்

பிரசன்னா ராமசாமி

(செவ்விந்திய சமூகத் தலைவன் ஸியாட்டல் 1852 இல் எழுதியது. ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்ப்பு)

"வாஷிங்டனிலிருந்து ஜனாதிபதி எங்கள் நிலத்தை வாங்க விரும்புவதாக செய்தி அனுப்பியிருக்கிறார். வானத்தையோ நிலத்தையோ எவ்விதம் நீங்கள் விற்கவோ வாங்கவோ முடியும்? இது நாங்கள் கேட்டறியாதது. காற்றின் சுத்தத்தையும் நீரின் மினுக்கலையும் எவ்விதம் விற்க இயலும்? இந்த நிலத்தின் ஒவ்வொரு பகுதியும் எங்களுக்கு புனிதமானது.

பளபளக்கும் ஊசிக்காட்டின் ஒவ்வொரு சுள்ளியும், ஓசையிடும் சில்வண்டுகளும். இவையெல்லாமே எங்கள் மக்களின் அனுபவங்களிலும் நினைவுகளிலும் மிகவும் புனிதம் வாய்ந்தவை.

மரங்களினுள்ளே ஓடும் உயிர்த்தன்மையை எங்கள் நரம்புகளில் ஓடும் ரத்தத்தை அறிவது போலவே அறிவோம். நாங்கள் இந்த பூமியின் ஓர் அங்கம். பூமி எங்களின் ஒரு பகுதி. நறுமணமுள்ள மலர்கள் எங்கள் சகோதரியர்.

கரடி, மான், வலிய பருந்து முதலியவை எங்கள் சகோதரர்கள். மலை முகடுகள், புல்வெளிகளில் உள்ளுறை அமிழ்து, குதிரைக் குட்டியின் கதகதப்பு, மனிதன், எல்லாம் எங்கள் குடும்பம்.

ஓடைகளிலும் நதிகளிலும் சலசலத்து மின்னியோடுவது நீரல்ல எம் மூதாதையரின் குருதி. நாங்கள் உங்களுக்கு இவற்றை விற்போமானால் நீங்கள் நினைவிலிருத்த வேண்டும் இவற்றின் புனிதத்தை.

துல்லியமான நீர் நிரம்பிய ஏரிகளில் பிரதிபலிக்கும் ஒவ்வொரு பிம்பமும் எங்கள் மக்களின் வாழ்வியலை, நினைவுகளைச் சொல்கின்றன. நீரெல்லாம் என் அப்பனுக்குத் தகப்பனின் குரலில் முணுமுணுக்கிறது.

நதிகளோ எம் சகோதரர்கள். அவை எம் விடாய் தீர்க்கின்றன. அவை எங்கள் ஓடங்களைச் சுமக்கின்றன. எம் குழந்தைகளுக்கு உணவூட்டுகின்றன. ஆதலினால் எம் நதிகளிடம் ஒரு சகோதரனைப் போல அன்பு செலுத்த வேண்டும்.

உங்களுக்கு இந்த நிலத்தை யாம் விற்போமானால், இந்தக் காற்று எங்களுக்கு விலை மதிப்பற்றது. சூழலின் வாழ்வத்தனையும் அது தாங்குகிறது என்று நினைவிருத்துவீர்களாக.

எம்முடைய தாத்தனுக்கு அவனது முதல் மூச்சையும் கடைசி சுவாசத்தையும் இந்தக்காற்றுதான் அருளிற்று. இதே காற்றுதான் எங்கள் குழந்தைகளுக்கு இந்த வாழ்க்கையின் ஆதாரத்தையே தருகிறது.

ஒருவேளை உங்களுக்கு நாங்கள் இந்த நிலத்தைத் தருவோமானால், நீங்கள் அதனைப் புனிதமாகப் போற்றி, நறுமலர்களின் இன்மணம் தோய்ந்த காற்றை மனிதர்கள் அங்கு சுவாசிக்க ஏதுவாக நீங்கள் அந்த நிலத்தைப் பாதுகாக்க வேண்டும்.

நாங்கள் எங்கள் குழந்தைகளுக்குக் கற்பித்ததை நீங்கள் உங்கள் குழந்தைகளுக்குக் போதிப்பீர்களா? இந்த பூமி நம் தாய் என்றும், எது இந்த நிலத்துக்கு நேர்கிறதோ அது இந்த நிலத்தின் எல்லாப் பிள்ளைகளுக்கும் நேரும் என்றும்?

நாங்கள் அறிந்தவரை, இந்த பூமி மனிதனுக்கு சொந்தமானதல்ல மனிதன் பூமியின் உடமை. நம் எல்லோரையும் பிணைக்கும் ரத்தம் போலவே இந்த பூமியில் எல்லாம் ஒன்றுக்குள் ஒன்று.

இந்த வாழ்க்கையின் உயிர்க்கூட்டை நெய்தவன் மனிதனல்லன். மனிதன் இந்த பூமியின் உயிர்களில் ஓர் இழை மாத்திரமே. இந்த பூமிக்கு மனிதன் இழைக்கும் ஒவ்வொரு செயலையும் அவன் தனக்கேதான் இழைத்துக் கொள்கிறான்.

கடவுள் ஒருவரே. பூமியின் மீது நிகழ்த்தப்படும் ஒவ்வொரு தாக்குதலும் அதன் படைப்புக் கடவுளின் மீது நிகழ்த்தப்படுவதே. உங்களுக்கு இறுதியில் என்னவாகும் என்பது எங்களுக்கு விளங்காப் புதிர்தான்.

எல்லா எருதுகளையும் கொன்று குவித்த பின், எல்லாக் குதிரைகளையும் அடக்கியபின் என்னாகப் போகிறது? அடர்வனங்களின் பகுதிகளெல்லாம் மனிதக் கூட்டத்தின் மூச்சுக் காற்று படர்ந்தபின், பசுமலைகளின் சிகரங்களை மின்கம்பிகளின் பின்னல்கள் மறைக்கும்போது...செறிந்த காடுகள் எங்கே? அழிந்தன..உயர் வானில் பறக்கும் பருந்துகள் எங்கே? போயே போயின...

அப்புறமென்ன? உயிர்த்திருப்பது இல்லாமலாகி, வாழ்தல் மட்டுமே எஞ்சும்.

கடைசி செவ்விந்தியனும் அவனது கானுயிரோட்டமும் மறைந்தபின், அவன் குறித்த நினைவென்பது, அலையாடும் புல்வெளியைக் கடக்கும் மேகத்தின் நிழல் போலான பின் இந்த நதிக்கரைகளும் காடுகளும் இங்கிருக்குமா என்ன? எம் மக்களுடைய உயிர்ப்பு இங்கே எங்கிருக்கும்?

தாயின் இதயத்துடிப்பை உணரும் பிறந்த குழந்தை போல இந்த பூமியை நாங்கள் நேசிக்கிறோம். ஆதலால் இதை உங்களுக்கு நாங்கள் கொடுப்போமானால், நாங்கள் நேசித்தது போல் நீங்களும் இந்த பூமியை நேசிக்கத் தெரிந்து கொள்ளுங்கள்.

அதன்பால் எங்களைப் போலவே கரிசனம் கொள்ளுங்கள். இந்த நிலத்தைப் பெற்றுக் கொள்ளும்போது அது இருந்த விதமாகவே நீடிக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள்.

இனி வரும் சந்ததிகளுக்காக இந்த நிலத்தைப் பாதுகாப்பாக, அதை அந்த இறை நேசிப்பது போல இந்த நிலத்தை நேசமுடன் வைத்திருங்கள்.

நாங்கள் இந்த நிலத்தின் பகுதி என்பதே போல்தான் நீங்களும். இந்த பூமி எங்களுக்கு விலை மதிப்பற்றது. உங்களுக்கும்தான்.

இறை என்பது ஒருவரே. செவ்விந்தியனோ வெள்ளையனோ ஒருவருக்கொருவர் வித்தியாசமானவர்கள் அல்லர். நாமெல்லோரும் ஒருதாய் வயிற்று மக்களே" ■

## ஜெருசலேம் யாத்திரை-17
## பயண அனுபவங்கள்

- ஏ.ஜே.ஞானேந்திரன்



# ஹைஃபா நகர்

அடுத்த எமது குறி ஹைஃபா நகர்.. ஹைஃபா (Haifa) என்பது தென் இஸ்ரவேலின் பெரும் நகர் என்பதோடு, 2.91.000 க்கு மேற்பட்ட ஜனத்தொகையினைக் கொண்டுள்ள இஸ்ரவேலின் மூன்றாவது பெரிய நகராகவும் உள்ளது. இவ்விடம் பஹாய் (Bahai)உலக நிலையத்தின் தாயக மாகவும் யுனெஸ்கோவின் உலக பாரம்பரியக் களமாகவும் திகழ்கிறது. இங்கேயுள்ள கார்மேல் (எபிரேய மொழியில் கடவுளின் திராட்சைத் தோட்டம்) என்பது தென் இஸ்ரவேலின் மத்தியதரை யிலிருந்து தென் கிழக்காக நீண்டிருக்கும் கடற்கரையோர மலைத்தொடராகும். பஹாய்களின் உலக தலைமை நிர்வாக அமைப்பு, இஸ்ரேல் நாட்டில், ஹைஃபா நகரில், கார்மல் மலைமீது அமைந்துள்ளது. அந்த அமைப்பு, உலக நீதிமன்றம் என்று அழைக்கப்படுகிறது. இந்த மலைமீது பஹாய்களின் இதர உலகளவிலான நிர்வாக அலுவலகங்களும் அமைந்துள்ளன.

**இறைவனின் ஒளி எனப்படும் பஹாய் மதம்**

பஹாய் மதம் பற்றி கேள்விப்பட்டதுண்டா? பஹாய்என்பது இறைவனின் ஒளி எனப் பொருள்படும் அரபு மொழிச்சொல்லில் இருந்து பெறப்பட்டதாகும். கிறிஸ்தவம், இஸ்லாம், பௌத்தம் மற்றும் யூதம் போன்ற மதங்களின் வரிசையில் பஹாய் மதமும் வருகிறது. பஹாய் போதனைகளை மூன்று முக்கிய கருத்துக்களுக்குள் அடக்கலாம். அவையாவன ஒரே கடவுள், சமயங்களின் ஒற்றுமை, மனிதகுலத்தின் ஒற்றுமை என்பன வாகும். பல பஹாய் நம்பிக்கைகள் இவற்றை மையப்படுத்தியே அமைந்துள்ளனவாயினும் இவற்றை மட்டும் கருத்திற் கொள்வது பஹாய் நம்பிக்கைகளை மிகவும் சுருக்கியதாக அமைந்துவிடும். அனைத்து மதங்களிலும் இருக்கும் பண்டிகைகள், சில சடங்கு, சம்பிரதாயங்கள், காலண்டர், புனித ஸ்தலம் உள்ளிட்ட பல அம்சங்கள் இதிலும் உண்டு. இந்த மதம், உலகின் ஒரு புதிய மதம். 1844ம் ஆண்டில் இருந்துதான் இதன் தோற்றம் கணக்கிடப்படுகிறது. இந்த மதம் இன்றைக்கு ஈரான் என்று அழைக்கப்படும் பண்டைய பாரசீக நாட்டில் தோன்றியது. இந்த மதத்தின் ஸ்தாபகர் பஹாவுல்லா. இதன் அர்த்தம் கடவுளின் ஒளி. கடவுளின் அவதாரமாக பஹாவுல்லா நம்பப்படுகிறார். இந்த மதத்திற்கு பாப் என்ற முன்னறிவிப்பாளரும் உண்டு. இவர் ஒரு இறைத்தூதுவராக நம்பப்படுகிறார். இவர்கள் இருவரும் சமகாலத்தவர்கள். பஹாவுல்லா அவர்களின் காலம் 1817 - 1892. பாப் அவர்களின் காலம் 1819 - 1850. பாரசீக நாட்டில், கொடுமையான அடக்குமுறைகளை இந்த மதம் சந்தித்தது. பல ஆயிரம் பஹாய் நம்பிக்கையாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர். பலர் சொத்துக்கள் பிடுங்கப்பட்டு நிர்மூலமாக்கப்பட்டனர். பாப் அவர்கள், கொடூரமான முறையில்



சுட்டுக் கொல்லப்பட்டார். பஹாவுல்லா அவர்கள், கடும் சிறை சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்பட்டார். இறுதியில் நாடு கடத்தப்பட்டார். முதலில் ஈராக் நாட்டின் பாக்தாத், பின்னர், துருக்கி நாட்டின் கான்ஸ்டான்டிநோபிள். பின்னர் அதே நாட்டின் அட்ரியானோபிள். இறுதியாக இஸ்ரேல் நாட்டின் அக்கா நகரம் ஆகிய இடங்களுக்கு அவர் தொடர்ச்சியாக நாடு கடத்தப்பட்டார். அவரின் காலம் அக்கா நகரில் முடிவடைந்தது.அவரின் உடல் அக்கா நகரில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. அந்த அடக்க ஸ்தலம், பஹாய்களால் கிப்லி என்று அழைக்கப்படுகிறது. அதுவே, அவர்களைப் பொறுத்தவரை, உலகின் அதி புனித இடம்.

உலகம் முழுவதும் 200க்குமதிகமான நாடுகளில் சுமார் 6 மில்லியன் பேர் பஹாய் சமயத்தைப் பின்பற்றுகின்றனர் என்று சொல்கிறார்கள்.

**எழில் கொஞ்சும் பஹாய் பூங்கா**

இந்த பஹாய் பூங்காவை நேரில் கண்டபோது அதன் அழகு எம்மைப் பிரமிக்க வைத்தது. வெறும் கமராவுக்குள் அடக்க முடியாத அழகு எம் கண்முன்னே விரிந்தது. 19 பச்சை மாடிகளாக உருவாக்கப்பட்ட இந்த எழில் வாய்ந்த தோட்டத்தை உலகின் எட்டாவது அதிசயம் என்று வர்ணிக்கிறார்கள்.இதற்கு நானும் உடன்படுகிறேன்.. அடடா என்ன அழகு! பார்க்கப் பார்க்க அலுக்காத அழகு.. இங்கே நுழைவு இலவசம். நாம் உள்ளே செல்ல நேர அவகாசம் போதவில்லை. இலேசான மழைத்தூறலும் இடையூறாக இருந்தமையால் வெளியே இருந்து அழகிய தோட்டத்தை பார்த்து ரசித்தோம். அழகின் உச்சத்தை கமராவுக்குள் அடக்கிக் கொண்டோம். உண்மையில் சொல்லப் போனால் இங்கே 10 மைல் தூர இடைவெளியில் இரு தோட்டங்களை நிர்மாணித்துள்ளார்கள். இது பஹாய் மத விசுவாசிகளின் யாத்திரை ஸ்தலமாக யுனெஸ்கோவின் உலக பாரம்பரியக் களமாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வருடமும் அரை மில்லியன் வரையிலானவர்கள் இத் தோட்டத்துக்கு வந்து போகிறார்கள் என்று சொல்லப்படும்போது, இது இங்கே எவ்வளவு பிரபல்யமான ஒன்று என்பது உங்களுக்குப் புரிந்திருக்கும் . 450 வேறுபட்ட தாவரங்கள் இங்கு வளர்க்கப்படுவதாகவும், இஸ்ரவேலின் காலநிலைக்கு ஈடுகொடுத்து வளரும் வகையில் இவை தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் வழிகாட்டிவிளக்கம் தந்தார். . இங்குள்ள 19 அடுக்குகளின் ஒன்றில் பஹாய் மதத்தை உருவாக்கியவரின் கல்லறையைக் காணலாம். 19 அடுக்குகளிலிருந்தும் தண்ணீர் பாயும் முணுமுணுப்பு. அரளி மரங்கள், யூக்கலிப்டஸ் மரங்கள், கார்மல் மலைமீது இருந்து பார்க்கும்போது தோன்றும் கடல் அலைகள், மாபெரும் அத்தி மரங்கள்-அப்பப்பா இயற்கை அழகு மூச்சு திணற வைக்கின்றது. உலகம் முழுவதிலும் உள்ள இறக்குமதி பொருட்களில் இருந்து இங்குள்ள கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டதாகச் சொல்லிக் கொள்கிறார்கள். பர்மாவில் உள்ள பஹாய் விசுவாசிகள் சுமார் ஒரு தொன் எடையுடைய பளிங்குக் கல்லினால் ஆன ஒரு கர்சவப்பெட்டியை செய்து ஹைஃபா நகருக்கு அனுப்பி வைத்தனர். பாப் அவர்களின் உடல் இதில் வைக்கப்பட்டு பின் கார்மல் மலை சதுக்கத்தில் அமைக்கப்பட்ட ஒரு மாடத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இப்புனித மாடத்தைச் சுற்றிலும் இன்று மனதை மயக்கும் பூங்காக்களும் படித்தளங்களும் அமைக்கப்பட்டுள்ளன யூனெஸ்கோவினால் (UNESCO) உலக மரபுச்செல்வங்களின் ஒன்றாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் தோட்டம் பொதுமக்கள் பார்வைக்கு 2001இல்தான் திறந்து விடப்பட்டுள்ளது. இதை ஹைபாவின் தொங்கு தோட்டம் என்று கூட வர்ணிக்கிறார்கள். ஈரானிய கட்டடக் கலைஞரான பரிபோஸ் சாபா என்பவர் 1987இல் இங்குள்ள கட்டடங்களுக்கான வடிவமைப்பை ஆரம்பித்துள்ளார். பாரசீகத்திலுள்ள (இன்றைய ஈரான்) தொங்கு தோட்ட நிர்மாணத்திற்கும் இதன் நிர்மாணத்திற்கும் பல வழிகளில் ஒற்றுமை உண்டு என்று சொல்லப்படுகின்றது. நிர்மாணித்தவர் ஓர் ஈரானியர் என்பது காரணமாக இருக்கலாமென நினைத்துக் கொண்டேன்.

தூய கார்மேல் அன்னை அல்லது தூய கார்மேல் மலை அன்னை அல்லது புனித உத்தரிய மாதா என்பது கார்மேல் சபையின் பாதுகாவலராகிய, இயேசு கிறிஸ்துவின் தாயான தூய கன்னி மரியாவுக்கு அளிக்கப்படும் பெயராகும். கார்மேல் சபையின் முதல் உறுப்பினர்கள் 12 முதல் 13ம் நூற்றாண்டு வரை இஸ்ரவேலில் உள்ள கார்மேல் மலையில் வனவாசிகளாக வாழ்ந்தனர். தங்களின் துறவு இல்லத்தரு கில் ஒரு கோவிலை மரியாவின் பெயரில் கடவுளுக்கு கட்டினர். அக்கால வழக்கப்படி அக்கோவில் இருந்த இடத்தின் பெயராலேயே மரியாவுக்கு கார்மேல் அன்னை என்னும் பெயர் வழங்கலாயிற்று.15ம் நூற்றாண்டில்,





மரியாவின் உத்தரியம் என்னும் அருள் இயக்கத்தின் பக்தி எங்கும் பரவத் தொடங்கியது. மரியா உத்தரியத்தை புனித சைமன் ஸ்டாக் என்னும் கார்மேல் சபை புனிதருக்கு ஒரு காட்சியில் அளித்ததாக நம்பப்படுகின்றது. இங்கு நேரில் செல்லும் வாய்ப்பு எனக்கும் கிடைத்தது. ஒரு கார்மேல் கன்னியாஸ்திரியுடன், வரவேற்பு அலுவலகத்தில் வைத்து ஞாபகமாக ஒரு போட்டோ எடுத்துக் கொண்டேன். கார்மேல் அன்னை குழுமத்தின் கன்னியாஸ்திரிகள் எப்படித் தோற்றம் பெற்றார்கள் என்பது இப்பொழுது எனக்கு நன்றாகவே புரிந்தது. 16 ஜூலை. கத்தோலிக்க திருச்சபையில் கார்மேல் அன்னையின் விழா நாள் ஆகும்.

பயணிப்போம்...



# நஞ்சற்ற உணவும் நலமான வாழ்வும்

காவலூர் இ.விஜேந்திரன்

**இயற்கை எனது இதயத்தினதும் ஆன்மாவினதும் வழிகாட்டி. – ரூஸோ**

இயற்கையான முறையில் மரபு சார்ந்த விவசாயம், பாரம்பரிய மீன்பிடி மற்றும் பண்ணைச் செய்கையாளர்களின் ஒன்றித்த ஒருங்கிணைவால் நஞ்சற்ற உணவுகளின் பாவனை மற்றும் அவை சார்ந்த விழிப்புணர்வுச் செயற்பாடுகள் கடந்த காலங்களில் மிகத் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டன. தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நாமும் நஞ்சற்ற உணவுப் பாவனையையும், நமக்கான ஆரோக்கிய சமூகத்தை உருவாக்க முடியும் என்ற மனோநிலையையும் நம்மவர்களிடையே வளர்க்கும்போது இயற்கை அறிவுசார்ந்து அதன் வழி அவர்கள் செயற்பட வாய்ப்புகள் அதிகம் உண்டு.

பொது மக்களிடையே சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வும் அக்கறையும் ஏற்படும் போதே அவர்களால் இயற்கை வழி விவசாயச் செயற்பாடுகளை முன்னெடுக்கக் கூடியதாக இருக்கும். பாரம்பரிய உணவு, தானியங்கள் மற்றும் இராசயனமற்ற கீரை வகைகளை உண்பதற்கும், ஊர்க் கோழியின் முட்டைப் பயன்பாட்டிற்கும் ஆடு, மாடு போன்ற மிருகங்களை வளர்ப்பதினால் தூய்மையான பாலை பருகுவதற்கும் இந்த இயற்கைவழி விவசாயம் வழிவகுக்கின்றது.

ஒவ்வொரு தனிமனிதனிடமும் அவன் சார்ந்த சமூகங்களிடமும் இயற்கைவழி விவசாயம் சார்ந்த மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். இம் மாற்றங்களினால் அவர்களிடையே ஏற்படுகின்ற மனமாற்றம் இயற்கை விவசாயம் சார்ந்த நடவடிக்கைகளை முன்னெடுக்கச் செய்வதாக அமைய வேண்டும். இயற்கையையும் அவை சார்ந்த விவசாயத்தையும் புறக்கணித்து வாழ முடியாது. அவ்வாறான வாழ்க்கை பெரும் இன்னல்கள் மற்றும் இழப்புக்களிற்கே எம்மை அழைத்துச் செல்லும் என்ற விடயம் நன்கு அறிவுறுத்தப்பட வேண்டும்.

நகர மயமாக்கல் மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளினால் விளைநிலங்களும், அவை சார்ந்த நீர் நிலைகளும் கட்டடங்களாக மாறி வருகின்றன. அளவுக்கதிகமாக இயற்கையை வஞ்சிக்கும் போது பொறுமையிழந்த இயற்கை சீற்றம் கொள்கின்றது. இதனால் மக்களே பெரும் பாதிப்புக்களை அனுபவித்து வருகின்றனர். செயற்கை வளர்ச்சி ஊக்கிகள், பூச்சி கொல்லி மருந்துகள், செயற்கை உரம் இவற்றை முற்றாகத் தவிர்த்து இயற்கை முறைகளை அடிப்படையாகக் கொண்ட விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் பலரிடையே மேலோங்கி வருகின்ற நிலையில்...

இயற்கைவழி இயக்கத்தின் ஏற்பாட்டில் அதன் செயற்பாட்டாளர்கள் ஒன்றிணைந்து உலக சூழல் தினமான யூன் 5 ஆம் திகதி சில நிகழ்வுகளை முன்னெடுத்தனர். யாழ்ப்பாணம் கந்தர்மடத்திலுள்ள பண்பாட்டு மலர்ச்சிக் கூடத்தில் இயற்கைவழி செய்திமடல் அறிமுக விழாவும், இயற்கைவழி விவசாயம் சார்ந்த கலந்துரையாடலும் அரங்கச் செயற்பாட்டுக் குழுவின் ஆற்றுகை நிகழ்வும் இடம்பெற்றது.

பல்துறை சார்ந்த சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் இயற்கைவழி விவசாய செய்கையாளர்கள், கலைஞர்கள் என ஒரு முக சிந்தனையுடையவர்கள் எனப் பலர் கலந்து கொண்ட நிகழ்வு இயற்கைவழி செயற்பாட்டாளரான மருத்துவர் பிரபு தலைமையில் இடம்பெற்றது. இயற்கைவழி செய்திமடல் அறிமுகத்தினை யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளரும் கவிஞருமான ஜெயசீலன் அவர்கள் முன்னெ



டுக்க வைத்திய நிபுணர் சிவன்சுதன் எழுத்தாளர் சாந்தன், சூழலியலாளர் ஐங்கரநேசன், பனை அபிவிருத்திச்சபையைச் சேர்ந்த பன்னீர்செல்வம் ஆகியோர் தமது சூழல் மற்றும் இயற்கை விவசாயம் சார்ந்த கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டனர்.

இயற்கைவழி இயக்க செயற்பாட்டாளர் வைத்திய நிபுணர் பிரபு அவர்கள் இயற்கை வழி செயற்பாடுகள் தொடர்பாகத் தனது அனுபவங்களைக் கீழ் கண்டவாறு பகிர்ந்து கொண்டார்.

துறைசார்ந்த வகையில் இயற்கையை நேசிக்கும் ஆர்வலர்களின் ஒன்றிணைவால் தோற்றம் பெற்ற இவ் அமைப்பின் மூலமாகப் பாரம்பரிய விவசாயம் பண்ணை வளர்ப்பு மீன்பிடி மற்றும் நெல் அறுவடை எனப் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுத்து வரப்படுகிறது. 5 மாவட்டங்களில் பல மட்டங்களில் இயற்கைவழி சார்ந்த உற்பத்திகள் அங்காடி விற்பனைகள் இடம்பெற்று வருகின்றது. அங்கு தமது இயற்கை விளை பொருட்களின் விற்பனையை உற்பத்தியாளர்களே நேரடியாக விற்பனை செய்கிறார்கள். இதன் மூலமாக நுகர்வோர் விருப்புக்கு ஏற்ப அவர்கள் நடந்துகொள்வதோடு நுகர்வோர் தமது தேவை மற்றும் இயற்கை விவசாயம் சார்ந்த விடயங்களை அவர்களிடம் கேட்டறிந்து கொள்ளுகின்றனர். அத்துடன் தாமும் வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டும் வருகிறார்கள் இது போன்ற பல்முகச் செயற்பாடுகள் நடைபெற்று வருகிறது.

மாவட்டம் மற்றும் பிரதேச அடிப்படையில் குறித்த ஒரு பண்ணையை களப்பயணம் மூலமாக தரிசித்து அவரது அனுபவங்கள் செயற்பாடுகளை அவதானித்து ஆரோக்கியமான கருத்தாடல்களை நடாத்திவருகின்றோம். பிரதேச அமைப்புக்களாக உள்ள பண்ணைப் பெண்கள் அமைப்பு, இளைஞர் விவசாய அமைப்பு போன்றவற்றையும் இணைத்துக்கொண்டு செயற்பட்டு வருகின்றோம்.

மூத்த அல்லது பழைய விவசாயிகளை அவர்கள் நிலையிலிருந்து மாற்ற முடியாதுள்ளது. அரச தனியார் நிறுவனங்களில் உள்ள இளைஞர்கள் இயற்கைவழி விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்கள். எம்முடன் இணைந்தும் செயற்படுகின்றனர். மூத்தவர்கள் தமது சொந்தத் தேவைகளுக்கு வீட்டுத்தோட்டத்தில் இயற்கை முறையிலான மரக்கறி, பழங்களைப் பயிரிட்டு



பயன்படுத்துவதுடன் தோட்டக் காணிகளில் விற்பனைக்கான பயிர்ச்செய்கையை செயற்கை முறைகளில் முன்னெடுத்து வருகின்றனர். காலப்போக்கில் அவர்களும் மாற்றப்பட வேண்டியவர்களே. எமது முயற்சியில் இளைஞர்களின் பங்களிப்புத் தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றது. இதனால் அவர்கள் நல்வழிப்படுத்தப் படுவதுடன் தேவையற்ற சமாச்சாரங்களில் ஈடுபடாமல் அவர்களைத் தடுக்க முடியும் எனவும் குறிப்பிடுகின்றார் மருத்துவர் பிரபு.



இவ் இயற்கைவழிச் செய்திமடல் மாத இதழாகத் தொடர்ந்தும் வெளிவரவுள்ளது. இயற்கையோடு இன்புற்று இயற்கையின் அரவணைப்பில் வாழ வேண்டும் எனவும், பாரம்பரியமான விவசாய செயற்பாடுகள், இயற்கை முறையிலான பண்ணை வளர்ப்பு ஆகியவற்றின் செயற்பாடுகள் அவை சார்ந்த முக்கிய தகவல்கள், கட்டுரைகள், கவிதைகள் மற்றும் துணுக்குகள் என பல வகையான விடயங்களைக் உள்ளடக்கியவாறு ஆனி 2019 இதழ் 16 பக்கங்களில் பயனுள்ள பல்துறை விடையங்களைத் தாங்கி வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பண்பாட்டு மகிழ்ச்சிக் கூட கலைஞர்களின் பறைவாத்திய இசைக்கருவிகளைக் கொண்டதான பாரம்பரிய இசைநிகழ்வும் பாடல் – ஆடல் – இசை என்ற தளத்தில் மிகச்சிறப்பாகவே இடம்பெற்றது. இரண்டு ஆண்களும் 10 பெண்களும் கலந்துகொண்டு பாரம்பரிய பறை இசையை அரங்கேற்றியமை குறிப்பிடத்தக்கது.

சூழலியலாளரும் விவசாயப் பேராசிரியருமான நடராஜா சிறீஸ்கந்தராஜா செய்திமடலில் பின்வருமாறு தனது கருத்துக்களைப் பதிவுசெய்திருக்கிறார். ஒரு குழுமத்தின் முயற்சி, ஒரேயொரு கொள்கை, இயற்கை வழியே எம்வழி என்பதே இணைந்தவர்களுடைய இலக்குகள். அது பற்றிய தெளிவும், அவர்களிடம் உண்டு. நஞ்சற்ற உணவு. அதனை விளைவிக்க மாற்றுவழி விவசாயம். அதற்காக உழைப்போருக்கு நியாயமான வருமானத்தைப் பெற்றுக் கொடுத்தல், அதன் பெறுமதியைத் தெரிந்து ஆதரிக்கும் சமூகத்துக்கான விழிப்புணர்வு. அவர்கள் பாதுகாக்கப் போகும் இயற்கையும் அதன் வளங்களும் இவ் இலக்குகளைச் சென்றடைய குழுமத்தினர் தெரிவு செய்துள்ள அணுகுமுறை ஒரு திறந்த வகையிலான தளம். ஆர்வமுள்ளோர் எவரும் பங்குபற்றவும் கற்றுக்கொள்ளவும் வல்ல ஒரு எளிமையான கட்டமைப்பு. இலக்குகளுக்கு உகந்த செயற்பாடுகளை நோக்கி ஒன்றிணைந்து இயங்குவதாலும் அவற்றினை இயக்குவதாலும் அது ஒரு இயக்கம் எனக் அவர் குறிப்பிட்டுள்ளார்.

'உணவெனப்படுவது நிலத்தொடு நீரே' என்று புறநானூறு வழிகாட்டுகிறது. இந்த உலகம் உய்ய ஒரே வழி இயற்கையுடன் இணைந்த வாழ்வுதான். ஆனால் இன்றைய பெருவணிக வளர்ச்சிக் கோட்பாடு சமூகத்திற்கு மிகவும் பேராபத்தை விளைவிக்கக் கூடியதாக இருக்கின்றது. வேலைவாய்ப்புக்கள் குறைந்து கொண்டே செல்கின்றன. அடித்தட்டு மக்களின் வாழ்வாதாரமான இயற்கை வளங்கள் புதுப்பிக்க இயலாத அளவில் அழிக்கப்படுகின்றன. மனிதகுலம் மட்டுமல்லாது அனைத்து உயிரினங்களின் வாழ்வும் கேள்விக்குள்ளாகி இருக்கின்றது எனக் குறிப்பிடுகின்றார் இயற்கை வேளாண் விஞ்ஞானியான பாமயன் அவர்கள்.

நஞ்சில்லாத உலகை உருவாக்குவதற்கு நாம் ஒவ்வொருவரும் அதற்கான முயற்சிகளையும் செயற்பாடுகளையும் நடைமுறைப்படுத்தவேண்டும். சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் உற்பத்தி செய்யப்படும் இயற்கை வழியிலான உணவுகளை உட்கொள்வதற்கு நாம் தயாராக வேண்டும். உடல் ஆரோக்கியத்திற்கு ஏற்ப போசாக்கான உணவுப் பாவனைகளின் நாட்டம் இவ்வகையிலான உணவுகள் மீது ஏற்பட வேண்டும். இதனை பரவலாக்குவதன் மூலமாகவே எமக்கான தேவைகளை நாமே தீர்மானிப்பவர்களாக மாறமுடியும். எமக்குத் தேவையானவைகளை நாம் தெரிவுசெய்யவேண்டும். அதிகமாக உள்ள செயற்கை உற்பத்திப் பொருட்களை வாங்காது இவ்வகையான இயற்கை வழி உற்பத்திப் பொருட்களைத் தேடும்போதே அவற்றுக்கான கேள்வி அதிகரிக்கும். நஞ்சுள்ளவற்றைத் தவிர்த்து நல்லவற்றை உண்போம். நாம் நல்லவர்களாக இருக்கவும், எமக்கான நல்ல சூழலை சூழமைக்க அர்ப்பணிப்புடன் ஒன்றிணைந்து செயற்படுவோம்.



# எழுதும் பெண்களும் எழுதப்படும் பெண்களும் - 5

வேலைகளை நிதானமாக முடித்துவிட்டு, ஆலோசனைகள் தரவேண்டியவர்களுக்கு ஆலோசனைகளை வழங்கிவிட்டு நிதானமாகவே கிளம்புகிறாள். இந்த இடைவெளியில் தான் அவளது கடந்த கால வாழ்க்கை - வாப்பா, உம்மாவோடு குடும்பத்தின் உறுப்பினர்களாக இருந்த வலி நிறைந்த வாழ்க்கை நினைவுகளாக வந்து போகின்றன. அந்த நினைவுகளில் அவள் வாப்பாவால் அடிக்கப்பட்டதும் உம்மாவால் கேள்விக்கணைகளால் துளைத்தெடுக்கப்பட்டதும் வீட்டை விட்டுக் கிளம்ப நேர்ந்ததும் வருகிறது. தனியாகப் போனபின்பும் உம்மாவின் வேண்டுகோளை ஏற்று... உடனே உம்மாவுடன் போனில் பேசுவாள். 'நீ வருவாய் என்டு ஒவ்வொரு நாளும் ஒரு சுண்டு அரிசியை சேர்த்து ஆக்கி வெச்சிட்டு இஷா நேரம் வரையும் காத்துட்டு இருக்கன். உனக்கு எப்ப லீவு கிடைக்கும். கோழி மிதிச்சு குஞ்சு சாகாதுடி' என்ற உம்மாவின் வார்த்தையில் இவள் உடைந்து விடுவாள். உடனே உம்மாவைப் பார்க்க வேண்டும் என அவளது மனது சஞ்லப்படும்.

சனி, ஞாயிறு தினங்களில் சில வேளை வீட்டிற்கு செல்வாள். இவளைக் கண்டதும் உம்மாவுக்குள் மண்டியிட்டுக்கிடந்த பித்து கரைந்து விடும். இவளுக்கு பிடித்த விறால் கருவாட்டுக் கறியும் சூடை மீன் போட்டு முருங்கையிலைப் பாலாணமும், இறைச்சிக் கறியும் புளியாணமும், நெத்திலி பொறியலும் பருப்புக்கறியும் என சோடி சேர்த்து சமைப்பாள். காஞ்ச மாடு கம்பில விழுந்த மாதிரி இவள் விழுந்து விழுந்து சாப்பிடுவாள்.? காலையில் எழும்பும் பொழுது தேநீரையும் மொறு மொறு வென்று திகட்டும் பாலாப்பத்தையும் இவள் கையில் நீட்டுவாள்.

ஆனால் விருந்தும் மருந்தும் மூன்று நாள் என்பது போல அந்த வீட்டில் நீண்ட காலம் அவளால் தங்க முடியாது.

போன நிலைப்பாடும் வருகிறது. ஒரு முறை அவள் தங்கியிருந்த வீட்டிற்கு வந்து பார்த்துவிட்டுச் சண்டை போட்ட வாப்பாவைக் கோபமாகத் திட்டி வெளியே அனுப்பியதும் நினைவில் வருகிறது:

பொம்புள புள்ளயொன்று இப்படி வீட்டில தனியே இருந்தா ஆயுதம் தூக்கிக்கொண்டு

**அ.ராமசாமி**

திரியிற எவனாலும் வந்து ஒரு ராவைக்கு கற்பழிப்பிச்சுப் போட்டு போவான் என்று கூறி முடிப்பதற்குள் ஊசியொன்று காதில் ஏறுவது போல் இவளை வலிக்க வைத்தன.

'ஏன் வாப்பா என்ட குண்டியில தான் என்ட பாதுகாப்பும் இருக்குதா?' என்று கேட்டு விட்டாள்.

அவரை அறியாமலேயே பேரதிர்ச்சியிற்கு உள்ளாக்கிய அந்த கேள்வியில் ஒரு கணம் ஸ்தம்பித்து போயிருந்தார். பின்னர் திடீரென அவர் தேநீர் குடித்துக் கொண்டிருந்த கோப்பை விழுந்து நொறுங்கியது போல் சளார் என்றொரு அறை இவளது கன்னத்தில் விழுந்தது.

இதுக்குத்தானா வந்தீங்க. வெளியே போங்க என்று கத்தினாள்.

எவ்வளவு தைரியம் இருந்தா வாப்பாவை பார்த்து இப்படியாரு கேள்வி கேட்பாய்; உன்ன படிப்பிச்சதப் போல பெரிய பிழை ஒன்றுமில்ல என்ற உம்மாவின் வாசகம் மீண்டும் எழுந்து நின்றதுவெறுக்கத் தக்க நினைவுக்குமிழிகளுடே அவரிடமிருந்து கற்றுக்கொண்ட குழந்தமைப் பருவப் பயணங்களும் கூட நினைக்கப்படுகிறது. நிதானமாகத் திட்டமிட்டுக் கொண்டு போனவளுக்குக் காத்திருந்தது அதிர்ச்சி:

உங்களுடைய அம்மாவிற்கு கருப்பைக் குழாயில் கான்ஸர் ஏற்பட்டிருக்கு. டீ என் ஸி டெஸ்ட் செய்த பொழுது உள்ளேயிருந்த கிருமித் துகள்கள் செதில்கள் போல



வெளியே கொட்டுப் படுகுது. அதனால் இது கான்ஸரின் கடைசிப் படிநிலையாகக் கூட இருக்கலாம். நீங்க அவசரமாக அவவை மகரகம புற்றுநோய் வைத்தியசாலைக்கு கொண்டு போகணும்

என்ற தகவல் அழுகையை வரவழைக்கிறது. அந்தக் கருப்பையிலிருந்துதான் அவள் வந்தாள் என்ற தவிப்பு. தவிப்பிற்குப் பின் தோன்றிய நிதானம். அம்மாவிற்குத் தேவையான மருத்துவக் கவனிப்புகளில் ஈடுபடுத்துகிறது. ஒருமாத காலக் கவனிப்பிற்குப் பின் அம்மாவின் நோய் கட்டுக்குள் இருப்பது தெரிகிறது.வாழ்வா? சாவா? என்ற அந்த ஒரு மாத கால போராட்டத்தில் வெற்றி எனும் பாதைக்கு உம்மா குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டாள். அப்போது அம்மாவின்
சொற்கள் தண்டனையாக இல்லாமல் வரமாக ஒலிக்கிறது:

உன்னைப் படிப்பிச்சதற்கான பலன் இப்ப தான் எனக்கு விளங்குது. ஒரு ஆம்புள புள்ள மாதிரி அங்கயும் இங்கயுமா ஓடி ஓடி என்னால எவ்வளவு கஸ்டப்பட்டுட்டாய்.

படிக்கச் செய்ததின் பலனை அனுபவித்த அம்மாவின் இந்தக் கூற்று, அவளை உணர்ந்து ஏற்றுக்கொண்ட கூற்றும் கூட. ஆனால் அந்த ஏற்பும் சொற்களும் கூட அவளுக்கு உடன்பாடாக இல்லை. ஏனெனில் அந்தக் கூற்றில் அவள் ஒரு ஆணோடு ஒப்பிட்டுப் பேசுவதைக் கவனிக்கிறாள். அதனாலேயே அதை நிராகரிக்கிறாள். நிராகரிப்பின் சொற்கள் இப்படி வெளிப்படுகின்றன:

உம்மா நான் எந்தவொரு ஒப்பீடுமற்ற பெண். சுழித்து ஓடும் நதியில் எதிர்த்து நீந்துபவள். எனது உடல் எனது பெண்மையின் வலிமையிலிருந்து பிறப்பிக்கப்பட்ட திரட்சி. எனது இந்த அதீத விசையை உனக்கு நிரூபிப்பதற்கு எத்தனை தடவை போராடினேன். எனது உடற்கூற்றினை இன்னுமா நீ புரிந்து கொள்ளவில்லை? எனக்கு வலிக்கிறது. எனது ஒவ்வொரு அங்கமும் உடைந்து நொருங்குகின்றது.! நீ என்னை ஆண் என்ற உடற்கூற்றுக்குள் வைத்து ஒப்பீடு செய்யும் பொழுது திருக்கை மீன் வாலினால் எனது உடலின் மேல் ஓங்கி அடித்து தோல் உரிந்து இரத்தம் பீரிட்டு எழுவது போல் நான் உணர்கின்றேன்.

இந்த உணர்வே பெண் விடுதலையின் - தனித்துவமான - சார்ந்து நிற்காத பெண்ணாகத் தன்னை உணர்தலின் அடையாளம். அப்படியொரு பெண்ணைத் தனது கதையில் உலவ விட்ட மஜீதாவே இக்கதையில் உயிரோட்டமாக உலவும் அவளாக இருக்கவும் வாய்ப்புண்டு. இப்படிச் சொல்வதற்கு அவரது புனைவுகள் மட்டுமே காரணம் அல்ல. அண்மையில் இலங்கையில் ஈஸ்டர் நாளில் நடந்த தொடர்குண்டு வெடிப்புகளுக்குப் பின்னால் அவர் எழுதிய குறிப்புகளை வாசித்ததைக் கொண்டும் இப்படிச் சொல்லத் தோன்றுகிறது.

பெண்ணியம் ஓர் அரசியல் சொல்லாடல். அதனை உள்வாங்கிய- அரசியல் புரிதல் கொண்ட ஒருவரின் - புனைவின் திறமான வெளிப்பாடு இக்கதை. ■

---

பகுதி VI




இலங்கையில் இனரீதியான அரசியல் அரங்கில் முக்கியத்துவம் பெற்றுள்ள ஓர் அம்சம் என்னவெனில், "பெரும்பான்மை" "சிறுபான்மை" எனும் மனப்பாங்கு நிலவுவதேயாகும். நாட்டின் சனத்தொகையில் சிங்களவர் மூன்றில் இரண்டு பங்கிற்கும் அதிகம் என்றாலும் அவர்கள் சிறுபான்மை மனப்பாங்கைக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. இதற்குக் காரணம் இந்தியாவில் ஐந்து கோடி தமிழர்கள் வாழ்வதாகும். பல சிங்கள இனவாதியர்களின் சிந்தனையில், இலங்கை, சிங்களவர்களின் நாடாக மட்டுமே கருதப்படுகின்றது. இலங்கை ஒரு பௌத்த நாடு எனவும் இவர்களால் உறுதிப்படுத்தப்படுகின்றது. பௌத்த உறுதிப்பாடு சிங்கள இனத் தனித்துவத்தை உறுதிப்படுத்துவதாக இவர்கள் எண்ணுகின்றார்கள். நாட்டில் பௌத்த மதத்தைப் பாதுகாப்பதற்கு இறைவனால் தெரிவுசெய்யப்பட்ட மக்கள் சிங்களவர்களே என இதிகாசக் கதைகள் சிங்களவர்களிடையே இன உணர்வைத் தூண்டி வளர்க்கும் கருவியாக இருந்து வருகின்றது. சிங்கள பௌத்தர்களின் வரலாற்று நூல் என அவர்கள் குறிப்பிடும் மஹாவம்சம் இலங்கையை நாகர்களும், இயக்கர்களும் ஆண்ட காலத்தில் கௌதம புத்தர் ஒரு அக்கினிச் சுவாலையாகத் தோன்றி விஷ்ணுவுக்கு (சக்கரதெய்யோ) இலங்கையில் பௌத்த மதம் ஐயாயிரம் ஆண்டுகளுக்குப் பாதுகாக்கப்பட வேண்டும் எனக் கட்டளையிட்டதாகக்கூறுகின்றது. அத்துடன் அந்தப் புனிதப் பணியை சிங்களவர்களே பொறுப்பேற்க வேண்டும் எனப் புத்தர் கூறியதாகவும் மஹாவம்சத்தின் ஒரு கற்பனை அத்தியாயம் தெரிவிக்கின்றது.

இந்த அடிப்படையில் துட்டகைமுனு எனும் சிங்கள அரசனுக்கும், எல்லாளன் என்ற தமிழ் அரசனுக்குமிடையே நடைபெற்ற போரில் துட்டகைமுனுவைப் பௌத்தத்தின் பாதுகாவலன் எனக் காட்டித் தமிழர்களுக்கு எதிரான சிங்கள இனவாதம் வளர்க்கப்பட்டு தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றது. துட்டகைமுனுவுடன் பௌத்த மகாசங்கத்தினருக்கும் பௌத்த மதத்தைப் பாதுகாக்கும் பெரும் பொறுப்புக் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் மகா சங்கத்தினரிடையேயும் இக்கருத்து வளர்ந்து வந்திருக்கின்றது. இதன் விளைவாகத் தமிழருக்கெதிரான இனவாதம் சிங்களவர் சிந்தனையில், குறிப்பாகச் சென்ற நூற்றாண்டின் இருபதாம் தசாப்தத்தில் ஏற்பட்ட பௌத்த மதப் புத்துயிர்ப்பின் பின் ஒரு முக்கிய அம்சமாக இடம்பெறத் தொடங்கியது. 1970களில் இருந்து தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பிரசாரங்களும், வெளியிடப்பட்ட பிரசுரங்களும் இன முரண் வெளிப்பாடுகளில் முக்கிய சான்றுகளாக அமையும். இத்தகைய பிரசுரங்களில் அடிக்கடி கையாளப்படும் கருத்துக்கள் சிங்கள பௌத்தர்கள் அல்லது தமிழர்கள் அல்லாத ஏனைய சிறுபான்மையினரும் முன்னைய காலகட்டத்தில் முரண்பட்டுக்கொண்டபோது கையாளப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. இப்

> "சிங்கள இனம் 2500 வருடங்களுக்கு மேற்பட்ட சான்றாதாரம் உள்ள தொடர்ச்சியான வரலாற்றைக் கொண்டது. இலங்கைச் சிங்களவரின் வரலாற்றை விடப் பழமையான வரலாறு வேறெதுவுமில்லை. இலங்கை சிங்களவருக்குரியது என்ற கருத்து வெறும் வாய் மொழி மரபாக வழங்கும் ஐதீகங்களையோ, கட்டுக் கதைகளையோ அடிப்படையாகக் கொண்டதல்ல. பண்டைய குகைச் சாசனங்கள், மாபெரும் பௌத்த தூபிகள், விகாரைகள், பாறைகளில் செதுக்கப்பட்ட புத்தபெருமானது உருவச் சிலைகள், மிகப்பெரிய குளங்கள், நீர்ப்பாசன முறைகள் யாவும் சிங்கள இனத்தினதும், சிங்கள தேசத்தினதும் பாரம்பரியத்திற்கு அசைக்க முடியாத சான்றாகும்." ... (கௌத கொட்டியா? புலிகள் யார்? திகதியிடப்படாதது 1980)

இந்தக் கொள்கை இன்று சிங்களப் பாடப் புத்தகங்கள் மூலமாகப் பரப்பப்படுகின்றது. அத்தோடு அரசியல்வாதிகளும் இந்தக் கொள்கையையே மக்கள் மத்தியில் மேடைப் பேச்சு, துண்டுப்பிரசுரங்கள், புத்தகங்கள் மூலமாப் பரப்பியும் வருகின்றனர். விசேடமாக 1950க்குப் பின் பிறந்தவர்கள் மத்தியில் இவைகள் கூடுதலாகப் பரப்பப்பட்டு அதனை உண்மையென நம்பவைத்து வழிநடத்திச் செல்கின்றார்கள்.

தவிரவும், சிங்கள பௌத்த உணர்வின் சமீபகாலத் தன்மையை ஆராய்வதற்கு பிரசுரங்களில் காணப்படும் அடிப்படைக் கருத்துக்களைப் பொதுவாகப் பின்வருமாறு பாகுபடுத்தலாம்.

சிங்கள இனமே முதன்மையானதும், உயர்ந்த இனமுமாகும் என்ற கருத்தோட்டம் - சிங்கள இனமே இலங்கையின் உண்மையான ஆதிக் குடிகள் என்ற கருத்துடனும், வங்கத்திலிருந்து குடிபெயர்ந்து வந்த ஆரியரே சிங்களவர் என்ற ஐதீகத்துடனும் இக் கருத்தோட்டம் இணைந்துள்ளது. 1980இல் வெளியிடப்பட்ட பிரசுரம் ஒன்று பின்வருமாறு கூறுகின்றது. ■

# அங்கதன் பதில்கள்



■ **தமிழ் சிங்கள மக்கள் இணைந்தால் முஸ்லிம் அடிப்படைவாதத்தை ஒழிக்க முடியும் என்று அத்துரலிய ரத்ன தேரர் கூறியது பற்றி?**

• பௌத்த சிங்கள பேரினவாதத்தை ஒழிக்கவும் தேரர் அவர்கள் ஆலோசனை சொன்னால் நல்லது.!

அக்ஷயன், உரும்பிராய்.

■ **அமைச்சரவையில் சீர்திருத்தம் செய்வதற்கு நேரமில்லை என அறிவித்திருக்கிறாரே மகிந்த ராஜபக்ஷ...?**

• அந்த மனிதர் தெளிவாகத்தான் பேசியிருக்கிறார் ... எங்கட தமிழ் கூட்டமைப்பினருக்குத்தான் அது விளங்குவதாக இல்லை... என்ன செய்வது அவர்கள் சுயபுத்தியை கைவிட்டு வெகுகாலமாயிற்று.

தேவராஜ், பண்டத்தரிப்பு.

■ **இன ஒற்றுமை ஏற்பட்டால் தான் நாட்டின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் என்று ரில்வின் சில்வா... சொல்கிறார்... சாத்தியமாகுமா?**

• இனப்பிரச்சினைக்கு முதலில் நியாயமான தீர்வை முன்வைக்காது எதுவுமே சாத்தியமில்லை. இது சில்வாவுக்கு புரியவில்லையே..!

மகேந்தினி, புதுக்குடியிருப்பு.

■ **மூன்றாம் உலகப்போர் வரும் போலிருக்கிறதே...! வந்தால் இந்த உலகம் என்னவாகும்?**

• வரும்... ஆனால் வராது என்ற நிலைதான் தொடரும். அப்படி வந்தால்... நான்காம் உலகப்போர் குறித்து அச்சப்பட மக்கள் இருக்கமாட்டார்கள்.

புதியவன், ஆனைக்கோட்டை.

■ **காலம் கடந்த ஞானம் என்றால் என்ன சொல்லுறியள்?**

• நமது அரசியல் தலைவர்களுக்கு (தமிழ்) தேர்தல் காலங்களில் மட்டும் ஏற்படுவது என்பது.

மனோஜ், மஸ்கலியா.

■ **மதவாதி – ஆன்மீகவாதி – விளக்கம் தரமுடியுமா?**

• உண்மையான ஆன்மீகவாதி மதங்களுக்கு அப்பாற்பட்டவன்- மதவாதி ஆன்மீகவாதியாக இருக்க அருகதையற்றவன்.

அருள், தெல்லிப்பளை.

■ **ஆலய வாசல்களில் வைக்கப்பட்டிருக்கும் உண்டியல்கள் எதனை உணர்த்துகின்றது?**

• ஆண்டிகள் தொடங்கி ஆண்டவன் வரையும் காசேதான் கடவுளடா என்ற சினிமாப் பாட்டை.

கார்த்திகா, வவுனியா.

■ **மழை குறைந்து போவதற்கு காரணம் என்ன?**

• மனவளம் குன்றியோரால் வனவளம் அழிக்கப்படுவதே காரணம்.

கிருத்திகன், யாழ்ப்பாணம்.

■ **கல்முனைப் போராட்டத்தில் தமிழ் மக்களின் பக்கம் நியாயம் பேசுமளவிற்கு தேரர்கள் ஞானம் பெற்றுவிட்டார்களே... நினைக்கவே புல்லரிக்கிறது?**

• அவர்களுக்கு ஞானம் வந்ததோ என்னவோ? இதனைப் பார்த்துப் புல்லரிக்கும் அளவுக்கு நீங்கள் ஞான சூனியங்களாகி விட்டீர்கள் என்பது மட்டுமே உண்மை.

ஆனந்தி, புங்குடுதீவு.

■ **மாற்றுத்தலைமை தமிழருக்கு வருமானால்...அந்தத் தலைமை எப்படியிருக்க வேண்டும்?**

• மாற்றானிடம் மண்டியிடாத... மாற்றங்களை தற்துணிவுடன் மேற்கொள்ளக்கூடிய மாற்றுக் குறையாத மறவனாக இருக்கவேண்டும்.

சரஸ்வதி திருகோணமலை.

■ **உலகின் மிகக் கேவலமான செயல் எது?**

• அந்நியனிடம் அடிமையாக இருந்து சுதந்திரம் பெற்ற நாட்டில் சொந்த மக்களில் ஒருசாரார் சுதந்திரம் வேண்டிப் போராடுவதுதான்.

கனகவேல், வவுனியா.

■ **நாட்டில் அரச அதிகாரிகள் பொது மக்களுடன் பொறுப்பற்ற வகையில் பேசுகிறார்கள்... நடந்தகொள்கிறார்கள் இதுகவலையளிக்கிறது அல்லவா?**

• அதிகாரிகளை விடுங்கள் ஆட்சியாளரே பொறுப்பற்ற முறையில் பேசி தமது பொறுப்பின்மையை வெளிப்படுத்தி வருகிறார்களே இதற்கு யார் பொறுப்பாம்.

காந்தன், பாஷையூர்.

■ **தற்போது வரும் தமிழ்ப் படங்களில் பெருமளவு பேய்பிசாசு, பில்லி சூனியம், ஆவி தொடர்பான கதைகளே வருகின்றனவே ஏன்?**

• இன்று மக்களை அவர்கள் மனதை ஆன்மீகம் அமானுஷ்யம் என்ற இரண்டு விடயங்களை வைத்து சுலபமாக பேக்காட்ட முடியும் என கதாசிரியர்கள் கண்டுகொண்டார்கள். பிறகென்ன பலவீனத்தைப் பயன்படுத்தி பணம் குவிக்கும் தொழில்தான்.

சுந்தரம், அளவெட்டி.

■ **இன்று நம் மண்ணில் இலாபகரமான தொழில் எது?**

• கல்வி, மருத்துவம், ஆன்மீகம், அரசியல் இதனைவிட வேறெதுவும் பெரிய இலாபம் தரும் தொழிலல்ல.

பாரதி, யாழ்ப்பாணம்.

■ **போகிறபோக்கில் ஒரு லீற்றர் தண்ணீரின் விலை ஒரு லீற்றர் மண்ணெண்ணையின் விலையைத் தாண்டிவிடும் போலுள்ளது?**

• இப்பொது எதிலும் பிரச்சினை. எரிபொருட் பிரச்சினை. எரியாத தண்ணீர்ப் பிரச்சினைதான்.

வானதி, நல்லூர்.

■ **பாடசாலைகளில் மதக்கல்வி அவசியமா?**

• மனிதத்தை மதிக்காத மதக்கல்வியால் என்ன பயன்.

சுரேஸ், கிளிநொச்சி.

■ **நாட்டின் தலைவருக்கு குறைந்த பட்சம் உயர்தர வகுப்புக் கல்வியாவது அவசியம் என்று பிரதியமைச்சர் ஒருவர் கூறியிருக்கின்றாரே?**

• நல்லவேளை ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை பாசாகியிருக்க வேண்டும் என்று சொல்லாமல் விட்டாரே.

கோபு, மட்டக்களப்பு.

■ **அமைதியின் இருப்பிடமாக இருக்க வேண்டிய ஆலயச்சூழல் இன்று இரைச்சலின் பிறப்பிடமாகிவிட்டதே?**

• அன்று ஆலயங்கள் ஆன்மாவை வயப்படுத்தும் அற்புதச் சூழலை கொண்டிருந்தன. இன்றோ அது அட்களை வசப்படுத்தும் ஆடம்பரச் சூழலைக் கொண்டதாகிவிட்டது.

கார்த்திகேயன், மட்டக்களப்பு



**அங்கதனிடம் பதில்பெற வேண்டுவோர் உங்கள் கேள்விகளை சரியான பெயர் முகவரியுடன் தெளிவாக எழுதி newsdeepam19@gmail.com என்ற முகவரிக்கோ அல்லது இல.10, வில்வந்தெரு ஒழுங்கை கொழும்புத்துறை,யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

**தரமான கேள்விகளை அனுப்புவோருக்கு 500 ரூபா பணப் பரிசில் வழங்கப்படும்.**

பெயர் :...............................................

முகவரி :...............................................

:...............................................

தொலைபேசி இல. ..................................

---

# அவர்கள் சொன்னதும் ஐயா சொல்வதும்

• **புத்திரிகைகளைப் பார்க்க எரிச்சல்தான் வருகிறது. ஆனால் அதனைப் பார்க்காமலோ படிக்காமலோ மட்டுமல்ல அதில் வாற விடயங்களைப் பற்றி பேசாமலும் கூட இருக்க முடியவில்லை.**

■ இப்ப தெரிவுக்குழு பற்றிய விசாரணைகளே பேசுபொருளாக இருக்குது. மைத்திரி ஐயா தெரிவுக்குழுவுக்கு வாக்குமூலம் அளிக்க வரவேண்டும் என்று வலியுறுத்துவோர் ஒருபுறமும் யார் என்ன சொன்னாலும் வரமாட்டேன் என்று மைத்திரி ஐயா மறுபுறமும் விட்டுவரும் அறிக்கைப்போர் உச்சம் என்றால் அவர் வரமறுத்தால் நீதிமன்றத்தில் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என காப்பாற்றவுள்ள சுமந்திரனின் அறிவிப்பு சரியான பகிடி.

• **தமிழ் மக்கள் சம்பந்தப்பட்ட எத்தனையோ பிரச்சினைகளுக்கு சட்டமூலம் தீர்வுகாண நடவடிக்கை எடுக்காது மௌனம் காத்த இந்த சட்டத்தரணி ஐயாமார் மைத்திரி ஐயாவிலை சட்ட நடவடிக்கை எடுக்க போகினமாம்!**


■ வேடிக்கைதான்!


• **தெரிவுக்குழுமுன் ஆஜராக மாட்டேன் அது ஒரு அரசியல் நாடகம் என்றல்லே மைத்திரி ஐயா சொல்லியிருக்கிறார்.**


■ ஐயா உது மட்டுமே அரசியல் நாடகம். இங்கு உங்கட ஆட்சியிலை நீங்கள் நடத்திறதே அரசியல் தெருக்கூத்துதானே! சுந்தி சிரிக்கிற விடயம் உங்களுக்கு தெரியாதா என்ன?

• **இன்னொரு விடயம்... இலங்கையில் மதத்திற்கென்று தனியான சட்டம் தேவையில்லை என்ற சம்பிக்க கூறியுள்ளதை படிச்சீங்களே!**

■ அட, இலங்கையிலை பௌத்த சாசனத்தை பாதுகாப்பதற்கென்றே தனியான அமைச்சு ஒன்று உள்ளது. ஐயாவுக்கு தெரியாதல்ல... அமைச்சு என்ற ஒன்று இருந்தால் அதற்கு என்று சட்டமும் இருக்குமல்லவா... பௌத்த மதத்திற்கு ஒரு விதி மற்றைய மதங்களுக்கு விதியே இல்லையோ? ஏன்ன நாடடா இது?










# தங்கத் தாரகை ஆஷிகா

**"நீ எதை நினைக்கிறாயோ அதுவாக ஆகிறாய் உன்னை வலிமை உடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவன் ஆவாய்"**

**சுவாமி விவேகானந்தர்...**

ஆஷிகா இலங்கையிலுள்ள பளுதூக்கும் மிகச்சிறந்த வீராங்களைகளில் ஒருவர். தந்தையின் வழிகாட்டல், பயிற்சி மற்றும் ஆலோசனையுடன் தன் திறமைகள் மூலமாக தமிழ் மண்ணுக்கும் தமிழ்ப் பெண்களுக்கும் பெருமை சேர்த்து வருகிறார். ஜனாதிபதி விருது, சர்வதேச போட்டிகளுக்கான அழைப்புக்கள் மற்றும் அனுமதிகள் அவரின் திறமைக்கான அங்கீகாரம் என்று கூடச் சொல்லலாம். வடக்கு மாகாணத்தின் அதிசிறந்த ப்ளுதூக்கல் வீராங்கனையான விஜயபாஸ்கர் ஆஷிகா கராத்தேக் கலையிலும் கறுப்புப்பட்டி பெற்றவர்.



சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் உயர்தர கலைப்பிரிவில் கல்விகற்று வருகிறார். சிறுவயது முதல் கராத்தேக் கலையைப் பயின்று அதில் ஆர்வம் காட்டி வந்துள்ளார். பாடசாலையில் இவரது அபாரதிறமையைப் பார்த்த உடற்கல்வி ஆசிரியை திருமதி ஹரிகரன் அவர்கள் ஆஷிகாவை பளுதூக்கும் பயிற்சிகளில் ஈடுபட்டு போட்டிகளில் கலந்து கொள்ளுமாறு ஊக்கமளித்துள்ளார். உடற்கல்வி ஆசிரியையால் இணங்காணப்பட்டு ஊக்கப்படுத்தப்பட்டமையால், இன்று தேசிய ரீதியில் பளுதூக்கல் வீராங்கனையாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளார் விஜயபாஸ்கர் ஆஷிகா.

13 வயதில் பாடசாலைப் போட்டிகளில் பங்குகொள்ள ஆரம்பித்த ஆஷிகா, பாடசாலைகளிற்கு இடையிலான போட்டிகள், திறந்த போட்டிகள் எனத் தொடர்கச்சியாக பங்காற்றி வருவதுடன் தங்கம் வெல்லும் வீராங்கனையாகவும் சிறந்த வீராங்கனைக்கான விருதையும் பெற்றுவருகிறார். மாகாணம், தேசியம், சர்வதேசம் என்ற அளவில் மிகப் பெரும் போட்டியாளர்களுடன் களம் கண்டு வருகிறார்.

'தொடர்ச்சியான பயிற்சியே இலகுவான வெற்றி' என்பதற்கு அமைவாக ஒவ்வொரு நாளும் மூன்று மணித்தியாலங்கள் பயிற்சி பெறுகின்றார். இப்பயிற்சியையும் இவரது முயற்சியும் தொடர் வெற்றிக்கான காரணங்கள் எனக் கூற முடியும். ஆஷிகாவால் நிலைநாட்டப்பட்ட சாதனைகளை ஆஷிகாவே முறியடித்து ஒரே நாளில் ஒன்பது சாதனைகளைப் பதிவு செய்தவர்.

வடக்கு மாகாணத்தின் 'சிறந்த வீராங்களையாக' தொடர்ச்சியாக 6 வருடங்களாகத் தன்னை நிலைநிறுத்தியுள்ளவர்.

இதுவரை காலமும் தான் வெற்றியீட்டியமைக்கான அடையாளங்களான சான்றிதழ்கள், தங்கப் பதக்கங்கள், வெற்றிச் சின்னங்களை மகிழ்வுடன் காண்பித்த ஆஷிகா, 'அப்பாவின் முழுமையான வழிநடத்தலுடன் என் சார்ந்தவர்களின் ஒத்துழைப்புடன் இவ்வாறான வெற்றிகளைப் பெற்று சாதனைகளை நிலைநாட்டுவதாகவும் தொடர்ச்சியான பயிற்சியும் விளையாட்டின் மீதான விருப்பமுமே தனது இவ்வாறான நிலைக்குக் காரணம்' எனக் கூறுகின்றார்.

ஆஷிகாவின் தந்தை விஜயபாஸ்கர் யாழ்ப்பாணம் பளுதூக்கும் சங்கத்தின் ஸ்தாபகர், தலைவர், பளுதூக்கும் பயிற்சியாளர், யாழ்ப்பாணத்திலுள்ள முன்னணி பாடசாலைகளின் பயிற்சியாளர் 2016 ஆம் ஆண்டுக்கான மிகச்சிறந்த பயிற்சியாளர் ஜனாதிபதி விருதினைப் பெற்றவர் சங்கத்தின் ஊடாகப் பலரை உருவாக்கி தேசிய ரீதியில் தங்கம் மற்றும் பதக்கங்களைப் பெற்றவர். தொடர்ந்தும் இயங்கிவருகின்றார்.

ஆஷிகாவின் சகோதரன் விஜயபாஸ்கர் 2018 இல் சிரேஸ்ட வீரர்களிற்கான பளுதூக்கும் போட்டியில் (250 கிலோ) தங்கம் வென்றதுடன் சிறந்த வீரராகவும் தெரிவுசெய்யப்பட்டவர். வடமாகாண ரீதியில் நடாத்தப்பட்ட ஆணழகன் போட்டியிலும்

**இரா - வின்**

முதல் இடத்தைப் பெற்றவர். சென் ஜோன்ஸ், சென் பற்றிக்ஸ் போன்ற பாடசாலைகளின் பளுதூக்கும் பயிற்சியாளராக செயற்படுகிறார்.

இலங்கை பளுதூக்கும் அணியில் இடம்பிடித்துள்ள ஆஷிகா விளையாட்டின் மூலமாக மாதாந்த சம்பளம் பெறும் மாணவியாகவுள்ளார். அண்மைக் காலங்களில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த பல இளைஞர், யுவதிகள் இலங்கையின் தேசிய அணிகளில் இணையும் அளவுக்கு தமது திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றனர். இதனை தமிழுக்கும் தாய் மண்ணுக்கும் கிடைத்த பெரும் பேறாக நோக்க முடியும். இனிவரும் காலங்களில் வேறு துறைகளிலும் எமது இளையவர்கள் இணைந்து சாதனைகளிற்கு சொந்தக்காரர் ஆக வேண்டுமென்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

பல நாடுகளில் நடைபெற்ற சர்வதேச போட்டிகளில் இலங்கை அணி சார்பாகக் கலந்து கொண்டவர். இவ்வருடம் யூலை மாதம் அவுஸ்ரேலியாவில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் பளுதூக்கல்




போட்டியிலும் அததைத் தொடர்ந்து சார்க் வலய நாடுகளின் பளுதூக்கல் போட்டியிலும் இலங்கை அணிசார்பாக கலந்து கொள்ளவுள்ளார். மிகச்சிறிய வயதில் நூற்றுக்கணக்கான சான்றிதழ்கள் பதக்கங்களைப் பெற்ற ஆஷிகா இலங்கை பளுதூக்கும் அணியில் இடம்பிடித்த ஒரே ஒரு வீராங்கனையாவார்.

நாடறிந்த பளுதூக்கல் வீராங்களையான ஆஷிகா, இலங்கை பாடசாலைகள் பளுதூக்கும் சம்மேளனம், தேசிய பளுதூக்கல் விளையாட்டுப் பெருவிழா, ஏனைய தேசிய மற்றும் மாகாணப் போட்டிகளில் இளையோர், சிரேஸ்ட போட்டிகளில் தொடர்ச்சியாக ஐந்து வருடங்களாக பங்குபற்றி பதக்கங்களை தனதாக்குவதுடன் சிறந்த வீராங்கனைக்கான விருதினையும் வென்றுள்ள இவர் பாடசாலை, பாடசாலை முடித்தால் பயிற்சி, பயிற்சி முடித்தால் வீடு மற்றும் போட்டிகள் என்ற தளத்தில் இயங்கிவருபவர்.

ஒரே இலக்கு நோக்கியதான முழுமையான பயிற்சியும் முயற்சியும் தான் இவரது சாதனைகளிற்கும், புகழுக்கும், வெற்றிக்கும் காரணங்களாகின்றன. ஆஷிகாவை முன் நிறுத்தி எம் இளையவர்களும் தமக்கு ஏதுவான எந்த துறையிலும் நம்பிக்கையுடனான முயற்சியையும் பயிற்சியையும் மேற்கொள்ளும் போது சாதனையாளராக மாறலாம். இதற்கு அர்ப்பணிப்பு மிக்கதான இலக்கு நோக்கிய பயணமே தூண்டுகோலாக அமையும். பலருக்கு முன்மாதிரியாகவுள்ள தங்கத்தாரகை ஆஷிகா மேலும் பல சாதனைகள் செய்து தாய் மண்ணுக்கும் தமிழுக்கும் பெருமை சேர்க்க தீபம் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

## மாத்திரைக் கதை



### தோல்கள்

பாம்பு தோலைக் கழற்றி வைத்து விட்டுப் புறப்பட்டது.

ஆடுகள் மேய்ந்து கொண்டிருந்த பக்கம் அது போனது.

அங்கே நின்ற தனியன் ஆட்டிடம் 'அதோ பார்... பாம்பு உன்னுடையவர்கள் இருக்கும் இடத்தை நோக்கித்தான் போகிறது.
நச்சுப் பாம்பு – பல்பட்டாலே போதும்...' என்று கூறியது சேவல்.

அப்படி ஒன்றும் நடந்துவிடாது... பாம்பு தோலைக் கழற்றிப் புதிதாய்ப் பிறந்திருக்கிறது...' என்றது தனியன் ஆடு.

சிறிது நேரத்தில் –

ஆடுகளின் அலறல் புல்வெளியை உலுக்கியது.

ஓசை வந்த திசை நோக்கி தனியன் ஆடும் சேவலும் ஓடின.

அங்கே –

பாவம்... அப்பாவி ஆடுகள் இரண்டு பாம்புக்குப் பலியாகிச் செத்துக் கிடந்தன.

சேவல் சொல்லியது:–

'பல்லைக் கழற்றாத பாம்பு
தோலைக் கழற்றி என்ன?
வாலைக் கழற்றி என்ன?



### ஒழுக்கம்

தலைமை எறும்பு கூறியது:–

'ஒழுங்காகச் சொல்லுங்கள்... பரிசு உங்களுக்குக் காத்திருக்கிறது.'

ஓர் எறும்பு –

'என் பாட்டில் நான் போவேன்...' என்று வரிசையை உடைத்துக் கொண்டு தனிவழி போனது.

கொஞ்சநேரத்தில் –

வரிசை குலையாமல் போன எறும்புகளெல்லாம் வாயில் அரிசியோடு திரும்பி வந்தன.

ஒற்றை எறும்பின் முகம் ஒடுங்கியது.

நிரை குழம்பாத எறும்புகளில் ஒன்று சொன்னது:–

'வரிசை பிளப்பான்
பரிசை இழப்பான்'

காசி ஆனந்தன்

# விளையாட்டு உலகில்




# வாய்ப்பு பகல் கனவாகி விடுமோ?

–காவலூர் ஞானம்–

## தொடரும் பலப்பரீட்சை

பலவான் யார்? எவரும் வரலாம் என்பது போல, போட்டிகள் பல இதுவரையில் அரங்கேறி இருக்கின்றன. தாவீது கோலியாத்தை வென்றது போன்ற மோதல்களும் சம்பவித்திருக்கின்றன. அவனா இவனா என்று ரசிகர்களைத் திணற வைக்கும் போட்டிகளும் விளையாடப்பட்டிருக்கின்றன. அவன் தொலைந்தான் என்று ஒரு கணக்குப் போட, இறுதிநேரத்தில் எதிரியின் கழுத்தை அறுத்த அதிர்ச்சியான சம்பவங்களும் அரங்கேறியிருக்கின்றன. திருவாளர் மழை சற்றே ஒதுங்கி நின்று, இந்த மோதல்களைத் தானும் சுவாரஸ்ஸியமாகப் பார்த்து ரசிப்பது மனதிற்கு மகிழ்வைத் தருகின்றது.

## இரண்டாவது அணி வெளியேற்றம்

பாகிஸ்தானுக்கும் தெ. ஆபிரிக்க அணிக்கும் இடையில் நடந்த மோதலின் பின்னர், தெ.ஆபிரிக்க அணி "நொக் அவுட்டாகி" அலுவலகரீதியாக வெளியேற்றப்பட்டுள்ளது. ஆபுகானிஸ்தான் அணிக்குப் பிறகு இந்தத் தொடரில் வெளியேறும் இரண்டாவது அணி இது. தலைசிறந்த பந்து வீசசாளர்கள் (றபாடா, தாஹீர்) நல்ல துடுபபாட்ட வீரர்கள் பலர் இருந்தும், இந்தப் பலமான அணி அரையிறுதி ஆட்டத்திற்கு தகுதி பெறாதது ஓர் ஆச்சரியந் தான். பாகிஸ்தான் அணி இந்த வெற்றியால் உயிர்த்திருக்கின்றது, உற்சாகமடைந்துள்ளது. மே.இந்திய அணியிடம் "வாங்கிக் கட்டிய" அணியா இது என்று திகைக்க வைத்திருக்கிறார்கள். கதை தொடருமா?

## தீர்ந்த திரில்லர்களின் பஞ்சம்

எல்லாமே ஒரு பக்க மோதல்களாக இருக்கின்றன. எங்கே போய்விட்டது இந்த ஒரு நாள் ஆட்டத்தின் விறுவிறுப்பு என்ற மன அங்கலாய்ப்புடன் இருந்தவர்கள் பலர். இந்த அங்கலாய்ப்பையும் ஏக்கத்தையும், இரு மோதல்கள் தீர்த்து வைத்துள்ளன. இந்தியாவுக்கும் ஆப்கானிஸ்தானுக்குமிடையிலான 28வது மோதல் முதலாவது திரில்லர். நிறைய அடித்து நொறுக்கலாம் என்று களத்தில் குதித்த இந்திய அணிக்கு ஏமாற்றமே எஞ்சியது.ஆப்கானிஸ்தானின் சுழல் பந்து வீச்சாளர்கள் இந்திய துடுப்பாட்டத்தை "கட்டிப்போட்டு "வைத்த நிலைதான். தட்டுத் தடுமாறி எடுத்த ஓட்டங்கள் 224 மட்டுமே! ஆபுகானிஸ்தான் அணி 213 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுகளையும் இழந்தபோது, பெருமூச்சு விட்டவர்கள் பலர்! நானா நீயா என்ற இரு அணிகளுக்கும் இடையிலான "கயிறிழுப்பு" பந்து வீச்சாளர் ஷமியின் ஹற்ரிக்குடன்(அடுத்தடுத்த பந்துகளில் 3 விக்கெட்டுகள் எடுத்தால் அது Hat-trick) ஒரு முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. இரண்டாவது திரில்லர் கரபியன் அணியினருக்கும் நியூசிலாந்து அணிக்கும் இடையில் நடந்தது.5 ஓட்டங்களால் நியூசிலாந்து அணி வென்றதை, இன்று வரையிலுமான (32வது போட்டி முடிவு வரை) இந்தச் சுற்றுத் தொடரின் அதி சிறந்த திரில்லர் எனலாம். கடைசிப் பந்தில் சிக்ஸர் அடிக்க வேண்டும். அடிக்க வேண்டியவர் செஞ்சரியைத் தொட்டவர்... விறுவிறுப்புக்கு பஞ்சமில்லாத நகம் கடிக்க வைக்கும் மோதல் இது மே.இந்திய அணியின் நிலையும் கவலைக்கிடமான ஒன்றுதான்!

## கொட்டித் தீர்த்த சிக்ஸர் மழை




சென்ற வாரம் மழை தன் கைவரிசையைக் காண்பிக்க, இந்த வாரம் "சிக்ஸர்கள்" தம் கைவரிசையைக் காண்பித்துள்ளன. இங்கிலாந்து அணித் தலைவர் மோர்கன் பந்தை நாலா திக்கிலும் விளாசித் தள்ளி சிக்ஸர் விருந்து படைத்திருக்கிறார். அள்ளிச் சுவைத்து திக்குமுக்காடிப் போயிருக்கிறார்கள் ரசிகர்கள். அவர் மொத்தமாக அடித்த 17 சிக்ஸர்கள், உலக சாதனையையும் படைத்திருக்கின்றன.இதுவரையில் மூவர்-16 சிக்ஸர்கள் அடித்து (Rohit Sharma, AB de Villiers and Chris Gayle)ஆகிய மூவரும் சாதனையாளர்களாக இருந்து வந்துள்ளார்கள். ஒரு இன்னிங்ஸில் அதிகமான சிக்ஸர்கள் என்ற வரிசையில், இங்கிலாந்து 25 சிக்ஸர்கள் மொத்தமாக அடித்து, தமது சாதனையை (24- இந்த வருடம் மே.இந்திய அணிக்கு எதிராக) தாமே உடைத்துள்ளார்கள். பாவம் யானை வாயில் அகப்பட்ட கரும்பு கதையாக மோர்கனிடம் வசமாக மாட்டிக் கொண்டது உலகின் தலைசிறந்த சுழல் பந்து வீச்சாளர்களில் ஒருவ்ராகக் கணிக்கப்படும் ஆப்கானிஸ்தானின் ரஸீட்கான். இவர் வீசிய 9 ஓவர்களில் 11 சிக்ஸர்கள் அடிக்கப்பட்டதோடு, 110 ஓட்டங்களையும் இவர் வாரி இறைத்துள்ளார்.

## அடிபட்ட சிங்கத்தின் ஆக்ரோஷம்




ஆப்கானிஸ்தானை விட மோசமாக ஆடிய (10 ஆணிகளுக்குள் பொறுப்பில்லாமல் மிக மோசமாக ஆடியவர்கள் என்று கூடச் சொல்லலாம்) . 27வது மாட்சில் இலங்கை அணியும், இங்கிலாந்து அணியும் மோதிக் கொண்டன. இலங்கை அணி நேரத்தோடு சுருண்டு விடும். மிகச் சுலபமாக இங்கிலாந்து ஓட்டங்களை அடித்து விட, மோதல் நேரகாலத்தோடு முடிந்து விடும்.-போட்டி ஆரம்பமாவதற்கு முன்பு பெரும்பான்மையானவர்கள் போட்ட கணிப்பு(தப்புக் கணக்கு) இது. விடாக்கண்டன் கொடாக் கணடனாக மத்தியூஸ் பிடிவாதமாக அடித்த அரைச்சதத்துடன் (85) ஆரம்பித்து, மலிங்கவின் அசத்தல் பந்து வீசசில் (4விக்கெட்டுகள்) முடிவடைந்த இந்த மோதல், ஓர் அடிபட்ட சிங்கத்தின் ஆக்ரோஷத்தை வெளிப்படுத்தியது. அதிர்ந்து போனார்கள் இங்கிலாந்து அணியினர். மலிங்க இதுவரையில் வீழ்த்திய விக்கெட்டுகள் 51. 50 அல்லது அதற்கு மேற்பட்ட விக்கெட்டுக்களை உலக வெற்றிக் கிண்ணத் தொடரில் வீழ்த்தியவர்களின் பட்டியலில் 4வது இடத்தை மலிங்க பிடித்துள்ளார். கிளென் மக்ரெத் (அவுஸ்) முத்தையா முரளீதரன், வஸிம் அக்ரம் (பாகிஸ்தான்) - முதல் மூன்று இடத்தைப் பிடித்த மற்றைய மூன்று பந்து வீச்சாளர்கள் ஆவர்.

## வாய்ப்பு பகல் கனவாகிறதோ?

பெரிதாக எதிர்பார்க்கப்பட்டு, இந்தத் தடவை சாம்பியன்தான் என்று ஆருடம் சொல்லப்பட்ட இங்கிலாந்து அணி மீண்டும் நன்றாக அடிபட்டுள்ளது. அடி கொடுத்து விட்டு அரை இறுதி ஆட்ட அணிகளில் முதலாவதாக தேர்வாகி இருக்கின்றது அவுஸ்திரேலியா!இந்தச் சுற்றுப் போட்டியில் மிகப் பலமான இரு அணிகளான இந்தியா,நியூசிலாந்துடன் அடுத்தடுத்து இங்கிலாந்து மோதி வென்றாக வேண்டும். வெற்றிக் கிண்ண வாய்ப்பு பகல் கனவாகி விடுமோ?

## தோள் கொடுத்தாள் தோழி.. [குத்துச் சண்டை]



காலத்திற்கு காலம் புதுப் புதுப் பெயர்களில் மோதல்களை களமேற்றுவது அமெரிக்க குத்துச் சண்டை அமைப்பின் (WWE ) ஸ்டைல்! இந்தத் தடவை "ஸ்டோம்பிங் கிரவுண்ட்ஸ்" (Stomping Grounds). இந்த நான்கு மணி நேர மோதல்களை, தொலைக்காட்சி ஒளிபரப்பில் இந்த வாரம் மாக இதில் ஒரு கேலிக்கூத்து போல நடந்த ஒரு மோதலைப் பற்றியே எழுதுகிறேன். சாம்பியன்களில் ஒருவராக இருக்கும் செத் றொலின்ஸ் என்பவரும் மாஜி "மனேஜருமான" கோர்பின் என்பவரும் மோதிக் கொண்டார்கள்.அணிக்கான நடுவரை அதிலும் ஒரு பெண் குத்துச் சண்டை வீராங்கனையை, மோதும் கோர்பினே நியமித்துக் கொண்டார். (எதையும் செய்யலாம் எவரும் செய்யலாம் என்பதுதான் இந்த மோதல்களில் நடக்கும் கூத்துகள்) பெண்களில் சாம்பியனான லிஞ்சின் எதிரிதான் இந்த நடுவர் லேஸி இவான்ஸ். லிஞ்சின் காதலன் என்று சொல்லப்படுபவர் செத் றொலின்ஸ். மோதல் தொடங்கியதும், நடுவர் லேஸி இவான்ஸ். செய்த திருக்கூத்துகள் ஏராளம். ஒரு கட்டத்தில் நடுவர் றொலின்ஸின் கன்னத்தில் அறைய, எங்கிருந்தோ வந்து ஆவேசமாகக் களத்தில் குதித்தார் காதலி லிஞ்ச். இனி என்ன..? பெண்ணைப் பெண்ணே தாக்கலாந்தானே? நடுவரைப் புரட்டிப் போட்டார் லிஞ்ச்! நடுவரைத் துவம்சம் செய்த காதலியை ஆசையோடும், நன்றி உணர்வோடும் அணைத்துக் கொண்டார் செத் றொலினஸ். இனி ஜோடியாக இருவரும் ஆடுவதற்கான மேடை அமைக்கப் பட்டு விட்டது. அடுத்த மோதல் அடிபட்ட, அடிவாங்கிய ஜோடிகளுக்கு இடையில் இன்னும் 3 வாரததில் அரங்கேறுமென அறிவித்திருக்கிறார்கள். தோள் கொடுத்தாள் தோழி என்பது இதுதானோ?

## காற்பந்தாட்டத்தில் மகளிர்



## மோதல்

மகளிர் காற்பந்தாட்ட வெற்றிக் கிண்ண மோதல்களும் களத்திற்கு வந்து விட்டன. 2015இல் சாம்பியனாகிய கனடா வெளியேற்றம், ஒல்லாந்து அணி காலிறுதிக்கு தகுதி என்று களம் சூடுபிடித்துக் கொண்டிருக்கின்றது.(இந்த வாரம் புதன் வரை) நான்கு வருடங்களுக்கு ஒருமுறை இடம்பெறும் இந்த வெற்றிக் கிண்ண மோதல் ஆரம்பமாகி 28வருடங்களாகின்றன. (1991) 24 அணிகள் கலந்து கொள்ளும் மோதல் இந்தத் தடவை பிரான்ஸில் இடம் பெறுகின்றது. தங்கம் , வெள்ளி உலோகங்களின் கலப்பிலான இந்தக் கிண்ணத்தின் சந்தை மதிப்பை 2015இல் சுமாராக 30,000 டொலர்கள் என்று மதிப்பிட்டிருந்தார்கள். ஆண்களின் ஒரே வெற்றிக்கிண்ணம் 4 வருடத்திற்கு ஒரு தடவை கைமாறிக்கொண்டிருக்க, பெண்களுக்கோ ஒவ்வொரு தடவையும், ஒரு புதுக் கிண்ணம் அளிக்கப்பட்டு வருகின்றது. 1991இல் முதல் சாம்பியனாகிய சீனா 2007 இலும் மீண்டும் சாம்பியனாகியது. அமெரிக்கா 1999, 2003ஆம் ஆண்டுகளில் இரு தடவைகள் சாம்பியனாகி இருக்கிறது. ஒரு தடவை சுவீடனும் (1995), இன்னொரு தடவை ஜேர்மனியும்(2011) கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளன.இந்த மாதம் 7இல் ஆரம்பித்த இந்த மோதல்கள், ஜுலை7இல் ஒரு முடிவுக்கு வருகின்றன.... பிரான்ஸ் அணியும் அமெரிக்க அணியும் இறுதியில் மோதும் என்பது எதிர்பார்ப்பு. இது பொய்க்காது விடுமா?

### கிளிநகர்

# அருள்மிகு ஸ்ரீ கிருஷ்ணர் தேவஸ்தானம்



## மகோற்சவ குருக்களின் ஆசியுரை

அகில அண்டங்களையும் காத்து எங்கும் நிறைந்து உயிர்களிடத்து அன்பு செலுத்தி பரிபூரணமாய் விளங்குபவனே கிருஸ்ண பெருமான். இதயம் பரிசுத்தமாய் இருந்தால் புத்தி தெளிவாய் தோன்றும். தெளிந்த புத்தியுடன் செய்யும் காரியங்கள் யாவும் நற்செயலாய் இருக்கும். ஆகவே மக்கள் இருதயத்தை தெளிவுபடுத்தி கொள்ள கிருஸ்ண பரமாத்மாவை நினைவில் நிறுத்தி சிந்தனைகளை நல்வழியில் செயல்படுத்த வேண்டும்.

ஆலமர நிழலிலே தகர கொட்டகையிலே வீற்றிருந்து கிளிநொச்சி மக்களுக்கு அருளாட்சி புரிந்து வந்த எம் பெருமானுக்கு இன்று மனம்மகிழ மெய்சிலிக்க ஒரு விழா. மகா மகோற்சவ விழா நடைபெறுகின்றது என்றால் அது இம்மக்களும் ஆலய அறங்காவலரும் செய்த பூர்வபுண்ணிய பலனே ஆகும்.

அன்று கிருஸ்ண பெருமானுக்கு செந்தமான இக் காணி பிறரால் சுவீகரிக்கப்பட்ட போது பத்தர்கள் நிர்வாகத்தினர் சைவ அடியார்கள் எதிர்ப்பைத் தெரிவித்து போராடிய போது மகா விஸ்ணுவே நேரில் வந்து காட்சி தந்தது போன்று இக் காணியை ஆலயத்துக்கே சொந்தமாக்கும் முகமாகவே அரச நிர்வாகத்தின் முடிவு அமைந்தது. அதன் பின் புதிய ஆலயம் அமைப்பதற்காக 19.06.2004 ஆண்டு அத்திவாரம் அமைக்கப்பட்டு கட்டுமான வேலைகள் ஆரம்பமானது. ஆனால் நாட்டில் ஏற்பட்ட அசாதரண சூழ்நிலை காரணமாக மக்கள் இடம் பெயர்ந்ததனால் வேலைகள் தடைப்பட்டன. மீண்டும் மீள் குடியேற்றம் நடைபெற்றதனால் கிருஸ்ணரை நாடி வந்த கிருஸ்ண அடியார்கள் ஆலய திருப்பணியை தொடர்ந்து நடத்த தீர்மானித்து, புலம் பெயர்ந்த மக்களின் உதவியுடனும் கிளிவாழ் மக்களின் அரும்பணியினாலும் திருப்பணி வேலைகள் சிறப்பாக நடை பெற்று குறுகிய காலத்தில் பூர்த்தி அடைந்து எம்பெருமானின் மகா கும்பாவிஷேகம் 2013 ம் ஆண்டு இனிதே நடைபெற்றது.

இவ்வாலயத்தை பல நூற்றாண்டுகளுக்கு முன் ஒரு வயது முதிர்ந்த சைவ அடியவர் ஒருவர் கிருஸ்ணர் பெருமானின் படத்தினை ஆலமர அடியில் வைத்து வழிபட்டு வந்துள்ளார். அதுவே இன்று ஆல விருட்சம் போல் பெரும் கோவிலாக மாறியுள்ளமை பெருமைக்குரிய விடயமாகும். எதிர்வரும் காலங்களில் சித்திரத்தேர், மற்றும் ஆலய சுற்றுக் கொட்டகை, மடம் என்பன அமைப்பதற்கான திருப்பணிவேலைகளை நிர்வாக சபையினர் பெரும் ஆர்வத்துடன் முன்னெடுத்து வருகின்றார்கள். இத்திருப்பணிக்கு அனைத்து கிருஸ்ண அடியார்களும் பரிபூரண ஒத்துழைப்பு வழங்குவது பெருமைக்குரிய விசயமாகும். எனவே எம்பெருமானின் முதல் மகோற்சவம் இனிதே நடைபெற்றதையிட்டு மிகுந்த சந்தோசம் அடைவதுடன் கிருஸ்ண அடியார்கள், நிர்வாக சபையினர் அனைவருக்கும் எம்பெருமான் பரமாத்மாவின் அருளும் கிருபாகடாட்சம் கிடைக்கவேண்டும் என்று கூறி அனைவருக்கும் நல்லாசி கூறுகிறேன்.

இங்ஙனம்

மகோற்சவ பிரதம குரு
**கிரியா பானு சிவஸ்ரீ ஜெக ஜெகதீஸ்வரக் குருக்கள் JP**
ஸ்ரீ முருகன் ஆலயம், குமாரபுரம், பரந்தன்.

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி**

கிளிநொச்சி நகர் கிருக்ஷ்ண வழிபாட்டாளருக்கு ஒரு முக்கியமான கோவில் ஆகும். இங்கு முதல் முறையாக இவ்வாண்டு கொடியேற்றத்துடன் திரு விழாக்கள் நடைபெற்றன. வழமையை விட கூடுதலான அடியார்கள் திருவிழாக்களில் இராப் பகலாகக் கலந்து கொண்டனர். இத்திருவிழாக்காலங்களில் தேர்த் திருவிழா அன்று தீபம் தொலைக்காட்சி கலந்து கொண்டு இந்நிகழ்ச்சிகளை நேரடியாக ஒளிபரப்பினர். இது எம்மனைவரையும் பரவசமடையச் செய்தது. உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் இவ்வரிய நிகழ்ச்சிகளைக் கண்ணுற்றது மட்டற்ற மகிழ்ச்சியும் மன அமைதியும் பெற்றிருப்பர்.தீபம் தொலைக்காட்சிக்கு கிருஸ்ணருடைய ஆசியும் அடியார்களின் மனம் திறந்த வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

**ஆலய பரிபாலன சபையினர்**
**கிருஸ்ணர் கோவில்**
**நிர்வாகம், கிளிநொச்சி.**





## விளம்பர அனுசரணையாளர்கள் :




















இந்தப் பத்திரிகை இல. 10, வில்வம் தெரு, கொழும்புத்துறை முகவரியிலுள்ள
நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தால் 30.06.2019 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.